625

நேஷனல் தமிழ் வாசகம்

இரண்டாம் படிவம்—முதற் பிரிவு

ஆசிரியர் :
டாக்டர் மா. இராசமாணிக்கம், M.A., L.T., M.O.L., Ph.D.
விவேகானந்தர் கல்லூரி, சென்னை

OF THE REGISTRAR OF
1 DEC 951

TB
031(7)
N51
86710

1938

ஷிங் கம்பெனி, சென்னை-1

நேஷனல் தமிழ் வாசகம்

இரண்டாம் படிவம்—முதற் பிரிவு

ஆசிரியர் :

டாக்டர் மா. இராசமாணிக்கம்

M.A., L.T., M.O.L., PH.D.

விவேகானந்தர் கல்லூரி, சென்னை

நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி

6, கொண்டிசெட்டித் தெரு, சென்னை–1

1951

[விலை ரூ. 1

காப்பிரைட்]

முதற் பதிப்பு—நவம்பர் 1951

TB
631(7)
N51

நன்றியுரை

சில படங்கள், பாடல்கள், பாடச் செய்திகள் இவற்றை இந்நூலில் வெளியிடத் தம் இசைவு தந்துள்ள அறிஞர்க்கு எங்கள் உளமார்ந்த நன்றி உரியது.

1. மதுரை மீனுட்சி அம்மன் கோவில், திருமலை நாயக்கர் மஹால்: Copyright—Department of Archaeology.
2. மாணவரும் உழவுத் தொழிலும்: இரண்டு படங்கள்—வாலாஜாபாத் இந்துமத பாடசாலையார்.
3. செய்தித்தாள் விற்கும் அமெரிக்க மாணவர்: பாடச் செய்தி—சோம. லெ. இலக்குமணச் செட்டியார் B.A; நெற்குப்பை.
4. விவேகானந்தரின் பொன் மொழிகள்—இராமகிருஷ்ண மடம், சென்னை.
5. நூல் நூற்றல்: (செய்யுள் 23 வரிகள்)—நாமக்கல் கவிஞர்—தமிழ்ப்பண்ணை, சென்னை.
6. கல்விச் சிறப்பு: (செய்யுள் 16 வரிகள்)—புதுவைச் சிவப்பிரகாசனுர்.

நேஷனல் பப்ளிஷிங் கம்பெனியார்

86710

Kabeer Printing Works, Madras (1803)

முகவுரை

நேஷனல் தமிழ் வாசகம் என்னும் பெயர் கொண்ட இந் நூல் வரிசை கல்வித் துறையினர் அண்மையில் (26–6–'51-இல்) வெளியிட்ட பாட இயலை உளங்கொண்டு எழுதப்பெற்றதாகும்.

முதல் மூன்று படிவங்களிலும் வட்டார மொழி அல்லது தாய் மொழி இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதற் பிரிவுக்கு வாரத்தில் நான்கு பிரிவேளைகளும் (Periods), இரண்டாம் பிரிவுக்கு மூன்று பிரிவேளைகளும் இப்புதிய திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளன. இரண்டு பிரிவுகளிலும் இன்னின்ன பொருள் பற்றிய பாடங்கள் இருக்கலாம் என்பது இப்புதிய திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயின், முதற் பிரிவு நூலில் காணப்படும் தமிழ் நடையைவிட இரண்டாம் பிரிவு நூலில் காணப்படும் தமிழ் நடை சிறிதளவு உயர்ந்ததாக இருத்தல் வேண்டும் என்பது இத்திட்டத்தில் வற்புறுத்தப்படுகிறது. எனவே, ஒரே படிவத்திற்கு இரு வேறு பாட நூல்கள் தேவைப் படுகின்றன. இத்தேவையை முன்னிட்டே இப்புதிய வாசக வரிசை வெளியிடப்பெற்றது.

இந்நூல், மூன்று பிரிவேளை தமிழ் படிக்கும் இரண்டாம் படிவ மாணவர்க்கென்று எழுதப்பெற்றது. ஆதலின், இதன் கண் சிறிது உயர்ந்த நடையில் பாடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. உரைநடைப் பாடங்கள் 80 பக்க அளவில் இருத்தல் வேண்டும் என்பது புதிய திட்டத்தின் விதி. ஆயினும், ஒரு சில பக்கங்கள் மிகுந்திருத்தல், நடத்துவோர் சுவைக்கேற்பப் பாடங்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள வசதியளிப்பதாகும் ஆதலின், சில பாடங்கள் மிகுதியாகத் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடத்தின் ஈற்றிலும் அருஞ் சொற்பொருள், வினாக்கள், பாடத் தொடர்பான பலவகைப் பயிற்சிகள், (Multiple choice questions), இலக்கணக் குறிப்புக்கள் தரப்பட்டுள்ளன. மாணவர் ஒவ்வொரு

பயிற்சியையும் விருப்பத்துடன் செய்வராயின், அவர்க்குத் தமிழறிவும், கட்டுரை எழுதும் வன்மையும் நன்கு சிறக்கும்.

செய்யுட் பகுதியில் 200 வரிகள் இருத்தல் வேண்டும் என்பதும் புதிய திட்டத்தின் விதி. ஆயின், முன் சொல்லப்பட்ட முறைப்படி, இந்நூலில் ஏறக்குறைய 250 வரிகள் தரப்பட்டுள்ளன. இப்பகுதியில் ஆசிரியர் குறிப்பும் அரும்பதவுரையும் வினாக்களும் பயிற்சியும் தரப்பட்டுள்ளன.

சுருங்கக் கூறின், மேற்சொன்ன புதிய பாட இயலை அடியொற்றி இந்நூல் எழுதப்பெற்றுள்ளது என்பது இதனைக் கண்ணுறும் நன்மக்கள் நன்குணர்தல் கூடும். இந்நூலை இரண்டாம் படிவத்து மாணவர் படித்துப் பயன்பெறத் தமிழன்னை அருள் புரிக.

விவேகானந்தர் கல்லூரி,
சென்னை.

மா. இராசமாணிக்கம்

உள்ளுறை

எண்	பொருள்		பக்கம்
	உரை நடை		
1.	மதுரை மாநகரம்	...	1
2.	மரியாதை ராமன்	...	9
3.	தொண்டைமான் இளந்திரையன்	...	15
4.	மாணவரும் உழவுத் தொழிலும்	...	21
5.	பாண்டிமாதேவி	...	28
6.	வட அமெரிக்காவைக் கடந்த முதல் வீரர்	...	34
7.	அரசியல் தூதர்—ஔவையார்	...	41
8.	செய்தித்தாள் விற்கும் அமெரிக்க மாணவர்	...	42
9.	வாதாபிப் படையெடுப்பு	...	53
10.	விவேகானந்தரின் பொன் மொழிகள்	...	60
11.	சேக்கிழார்	...	65
12.	பாண்டித்துரைத் தேவர்	...	72
13.	செதுக்கு வேலை	...	78
14.	நாஞ்சில் நாட்டுக் கவிஞர்	...	86
15.	கண்ணகி வழக்குரைத்தல் (நாடகம்)	...	93

செய்யுள்

I. வாழ்த்து ... 99

II. இயற்கை

1. திரிகூட மலைச்சிறப்பு 2. மழைப்பாடல் ... 101

III. தொழில்

1. பனைமரம் ... 103
2. நூல் நூற்றல் ... 104

IV. நீதி

1. நீதி வெண்பா ... 106
2. நன்னெறி ... 108
3. திருக்குறள் ... 111

V. கதை

சிங்கத்தை முயல் கொன்ற கதை ... 123

VI. பலசுவை

1. அத்தை மகள் சமையல் ... 127
2. கம்பரது சீற்றம் ... 127
3. கல்விச் சிறப்பு ... 127

நேஷனல் தமிழ் வாசகம்

1. மதுரை மாநகரம்

1. தமிழகத்து நாடுகளில் **பாண்டிய நாடு** ஒன்ருகும். இக்கால மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்கள் சேர்ந்த நிலப்பகுதியே சங்க காலத்துப் பாண்டிய நாடு. அதன் தலைநகரம் **மதுரை மாநகரம்.** அதனைக் கோநகரமாகக் கொண்டு **பாண்டியர்** என்ற மரபரசர் பாண்டிய நாட்டை ஆண்டுவந்தனர்; மதுரையில் **தமிழ்ச் சங்கம்** ஒன்றை ஏற்படுத்தித் தமிழைத் தம் உயிர் போலக் காத்து வளர்த்துவந்தனர்; தாமும் பைந் தமிழைப் பாங்குறக் கற்றுப் புலவர்களாக விளங்கினர்.

2. வான் பொய்ப்பினும் தான் பொய்யாத வளமுடைய வையையாறு நகரத்திற்கு வெளியே பாய்ந்தது. அதன் இரு கரைகளிலும் சோலைகள் இருந்தன. அச் சோலைகளில் வானுற ஓங்கி வளம் பெற வளர்ந்த பலவகை மரங்கள் நெருங்கிக் குளிர்ச் சியை நல்கின. அம்மரங்களில் மந்திகள் கிளைக்குக் கிளை தாவி விளையாடின; மயில்கள் அமைதி பெற்று வாழ்ந்தன. நீராடுங் கரைகளில் மரங்கள் உதிர்த்த மலர்கள் மாலை போல வையையாற்றிற் சென்றன. அந்த ஆற்றிலுள்ள துறைதோறும் பாணர் குடி யிருப்புக்கள் இருந்தன.

3. மதுரை மூதூர் காவற்காடு சூழப்பெற்றது. காவற் காட்டுக்கு இப்பால் முதலைகள் பொருந்திய

ஆழமான அகழி இருந்தது. அவ்வகழி கோட்டையைச் சூழ்ந்திருந்தது. அக் கோட்டைக்குள்தான் பாண்டியர் தலைநகரம் பல வளங்களுடனும் சிறந்து காணப்பட்டது. கோட்டை மதில் வானுற ஓங்கியது. அதன்மீது பலவகை போர்ப் பொறிகள் வைக்கப் பட்டிருந்தன. கோட்டை வாயில் அகன்று உயர்ந் திருந்தது. யவனவீரர் கையில் வாளேந்தியவாறு அவ்வாயிலைக் காத்துவந்தனர். மக்களும் விலங்கு களும் இடையருது போக்குவரவு செய்தமையால் அவ்வாயில் இடையருது நீர் ஓடிய வையையாற்றினை ஒத்திருந்தது.

4. வாயிலைக் கடந்தவுடன் அகன்ற தெருக்கள் காட்சி அளித்தன. ஒவ்வொரு தெருவின் இரு பக்கங் களிலும் உயர்ந்த மாடமாளிகைகள் இருந்தன. அவ்வள மனைகளில் காற்றும் வெளிச்சமும் தடை யின்றிச் செல்லத்தக்க பெரிய சாளரங்கள் விளங்கின. இங்ஙனம் அமைந்திருந்த வீடுகளும் தெருவும் வையையாறும் அதன் இரு கரைகளும் போலக் காணப்பட்டன. பல திறத்தார் வாழ்ந்த அத்தெருக் களுக்கு அப்பால் அகன்று நீண்ட கடைத்தெரு காட்சி அளித்தது.

5. அக் கடைத்தெருவில் பலவகைக் கடைகள் இருந்தன : செம்பு, வெண்கலம் முதலிய உலோகங்க ளாற் செய்யப் பெற்ற பாத்திரக் கடைகள் இருந்தன. பலவகைக் கயிற்றுக் கடைகள், துளைக்கருவிகள், தோற் கருவிகள், கஞ்சக் கருவிகள் முதலியன விற்ற கடைகள், சந்தனம் முதலிய வாசனைப் பொருள்களைக் கொண்ட கடைகள், பருப்பு முதலிய பல சரக்குக் கடைகள் ஒருபால் விளங்கின. மற்றொருபால் நுண்ணிய பருத்தி நூலினுலும் எலி மயிரினுலும்

பட்டு நூலினாலும் நெய்யப்பட்டுப் பல நூறு மடிப்புக்களாக வைக்கப்பட்ட துணிக்கடைகள் பல இருந்தன. பாக்குக் கடைகளும் மிளகு மூட்டைகளைக் கொண்ட கடைகளும் விளங்கின. நெல், புல், வரகு, தினை, சாமை, இறுங்கு, தோரை, மூங்கில் அரிசி, என்னும் எட்டு வகைத் தானியங்களை விற்கும் கடைகளும் இருந்தன. ஒரு பக்கம் ‘ இன்ன பொன் இன்ன கடையிற் கிடைக்கும் ’ என்பதை அறிவிக்கும் கொடிகள் கட்டப்பெற்ற பொற் கடைகள் பொலிவு பெற்று விளங்கின. மற்றொரு பக்கம் வயிரம், மரகதம், மாணிக்கம், புஷ்பராகம், நீலம், கோமேதகம், வயிடூரியம், முத்து, பவளம் என்னும் ஒன்பது வகை மணிகளை விற்ற கடைகள் பேரொளியுடன் விளக்கமுற்றிருந்தன.

6. கடைத் தெருவில் பலவகைத் தின்பண்டங்களை விற்பவரும், பலவகைப் பூக்களை விற்பவரும், சுண்ணம் விற்பவரும், வெற்றிலை-பாக்கு-சுண்ணாம்பு விற்பவரும் இங்கும் அங்குமாக நடமாடி விற்று வந்தனர். மேகம் தன்னிடத்து நீரை முகப்பினும், ஆறுகள் பெருகினும் கடல்நீர் கூடுதலோ, குறைதலோ இன்றி இருக்கும். அதுபோலக் கடைத் தெருவில் பலர் வந்து பொருள்களைக் கொள்ளக் கொள்ளக் குறையாமலும், வேறு பலர் கொண்டுவரக் கொண்டுவர மிகாமலும் பண்டங்கள் இருந்தன.

7. மதுரை மாநகரில் சைவ-வைணவ-பௌத்த-சமண சமயங்களுக்குரிய கோயில்கள் இருந்தன. சிவன், திருமால் கோவில்களில் பலவகை வாத்தியங்கள் நாடோறும் ஒலித்தன. மக்கள் அக் கோவில்களுக்குச் சென்று கடவுளரை வழிபட்டனர். புத்த சமயத்தைச் சேர்ந்த மகளிர் தம் பிள்ளைகளை எடுத்

துக்கொண்டும், பூசைக்கு வேண்டும் பூவினையும் தூபங்களையும் ஏந்திக்கொண்டும் தம் கணவருடன் செல்லும் பெளத்தப் பள்ளிகள் ஒரு பக்கம் இருந்தன. சமணப் பள்ளிகளில் சமண முனிவர்கள் இருந்து, தங்களை நாடி வந்தவர்க்கு அறவுபதேசம் செய்து வந்தனர். இக்கோவில்களுக்கும் பள்ளிகளுக்கும் அப்பால், துலாக்கோல் போல நடுவு நிலையுடைய தீர்ப்பைக் கூறும் அறங்கூறவை இருந்தது. அதற் கப்பால் அரசனுக்கு நல்லறிவின் திருவுருவங்களாய் அமைந்த அமைச்சர் தெருவும், பிற நாடுகளிலிருந்து வந்து தங்கிய செல்வ வணிகர் தெருவும் இருந்தன.

8. அரசனது அரண்மனை நகருக்கு நடுநாயக மாக விளங்கியது. அது மிக்க காவலை உடையது. அதன்கண் அரசன் இருப்பிடம், அந்தப்புர மாதர் இருப்பிடம், பலவகை அரங்குகள், அரசன் கொலு வீற்றிருக்கும் மண்டபம் முதலியன வானளாவித் தோன்றின. நகரின் ஒரு பகுதியில் மா, பலா, வாழை முதலிய பழங்களைத் தந்தும், பாகல், வாழை முதலிய காய்களையும் இலைக் கறிகளையும் கிழங்கு வகைகளையும் கொண்டு சமைத்த உணவுப் பொருள் களை ஏழைகட்கு அளித்தும் உதவிய அன்ன சத்திரங் கள் சில இருந்தன.

9. இரவு முதல் சாமத்தில் வளமனை மகளிர் சிலர் ஆடல்-பாடல்களிற் காலத்தைப் போக்கினர்; பலர் அறவுபதேசங்களைக் கேட்டனர்; சிலர் கடவுள் வழிபாட்டில் ஈடுபட்டனர். வீரர்கள் கள்ளுண்டு களித்து ஒருவரோடு ஒருவர் விளையாட்டு மற்போர் புரிந்தனர். அனைவரும் உண்டு உறங்கிய பின்னர் நகரில் அமைதி நிலவிற்று. நகர்க் காவலர் மட்டும் கண் உறக்கம் கொள்ளவில்லை. அக் காவலர் புலி

போன்ற பாய்ச்சல் உடையவர் ; அஞ்சா நெஞ்சினர் ; குறி தப்பாத அம்பினர் ; மழை பொழிந்து தெருக் களில் நீர் ஓடினும் ஊர் சுற்றிவரும் இயல்பினர் ; களவுத் தொழிலையும் சூழ்ச்சிகளையும் நன்கறிந்தவர் ; திண்ணிய உடலினர் ; கறுத்த நிறத்தினர் ; இராக் காலத்தில் கரிய உடை அணிந்தவர் ; வாள் ஏந்திய கையினர் ; அரையில் மெல்லிய வலிய நூலேணி உடையவர் ; விழித்த கண் இமைக்குமுன் மறைந் தோடும் வலிய கள்வரையும் பிடிக்கும் வல்லமை உடை யவர். இத்தகைய வலிய காவலர் பாதுகாவலில் மாநக ரத்து மக்கள் கள்வர் பயமின்றிக் கண்ணுறங்கினர்.



மதுரை—மீனுட்சியம்மன் கோவில்

10. இத்தகைய பல சிறப்புக்கள் பொருந்திய மதுரை மாநகரம் சங்க காலத்தில் பாண்டியர் ஆட்சி யில் இருந்தது. கி. பி. 4-ஆம் நூற்றுண்டுக்குப் பிறகு சிறிது காலம் களப்பிரர் ஆட்சிக்கு உட்பட்டது ; பின்னர் 9-ஆம் நூற்றுண்டு வரை பாண்டியர் பாது

காவலில் இருந்தது; அதன் பின்னர் நான்கு நூற்ருண்டுகள் சோழர்க்கு உட்பட்டு இருந்தது; பிறகு பாண்டியரால் ஆளப்பட்டது; கி. பி. 14-ஆம் நூற்ருண்டில் முஸ்லிம்கள் ஆட்சியில் இருந்தது; பின்னர் நாயக்க மன்னர்களால் ஆளப்பட்டது. இவ்வாறு பலரது ஆட்சிக்கு உட்பட்டு, இறுதியில் ஆங்கில ஆட்சியைப் பெற்றது; இன்று நமது ஆட்சியில்



மதுரை—திருமலே நாயக்கர் மஹால்

இருக்கின்றது. அப்பெரிய நகரம் மிக்க பழமை உடையது. அதனைக் காணும் அறிஞர்க்கு, அது, தன்னிடம் உள்ள கோவில்களைக் கொண்டும் பிற கட்டிடங்களைக் கொண்டும் நூல்களைக் கொண்டும் தன் வரலாற்றைப் புன்முறுவலோடு அறிவித்து வருகின்றது. மதுரை மீனுட்சியம்மன் கோவிலும் திருமலே நாயக்கர் மஹாலும் புது மண்டபமும் வரலாற்றுச் சிறப்புடையன.

அருஞ்சொற்பொருள்

கோ நகரம் - அரசன் இருக்கத்தக்க (தலை) நகரம். பைந்தமிழ் - பசிய (இளமை பொருந்திய) தமிழ். பாங்குற - ஒழுங்கு பெற. மந்தி - பெண்குரங்கு × கடுவன் - ஆண்குரங்கு. நல்கின - கொடுத்தன. வானுற = வான் + உற - ஆகாயத்தைப் பொருந்த. பொறி - இயந்திரம். இடையறுது - ஓய்வு இல்லாமல், எப்பொழுதும். வளமனை - மாளிகை. சாளரம் - சன்னல். துளைக்கருவிகள் - நாதசுரம், புல்லாங்குழல் போன்ற துளையிடப்பெற்ற வாத்தியங்கள். தோற்கருவிகள் - மத்தளம், மிருதங்கம் போன்ற கருவிகள். கஞ்சம் - வெண்கலம்; தாளம் போன்றவை கஞ்சக் கருவிகள் எனப்படும். எலி - அமெரிக்காவில் உள்ள மஸ்க் ராட் (Musk Rat) போன்ற மயிர் மிகுந்த ஒருவகை எலி. புல் - கம்பு; புல்லரிசி என்றும் கூறலாம். இறுங்கு - சோளம். தோரை - ஒருவகை மலை நெல். சுண்ணம் - வாசனைப்பொடி. அறங்கூறவை - நீதிமன்றம். அரங்கு - மேடை. வான் அளாவி - வான்வரை பரவி. திண்ணிய - வலிய.

கேள்விகள்

1. பாண்டியர் தமிழுக்குச் செய்த தொண்டு யாது?

2. வையையாற்றின் சிறப்பு யாது?

3. மாநகரத்தின் அகழி, கோட்டைமதில், வாயில் என்பன பற்றிக் கூறப்பட்டுள்ள செய்திகள் யாவை?

4. வையையாறும் அதன் இரு கரைகளும் போல—இதற்குரிய உபமேயம் யாது?

5. எண்வகைத் தானியங்கள் எவை?

6. அக்காலத்தில் எவ்வெவற்றுல் ஆடைகள் நெய்யப்பட்டன?

7. ஒன்பது வகை மணிகள் எவை?

8. 'கடைத்தெருவில் பொருள்கள் கூடுதலோ—குறைதலோ இன்றி இருந்தன.'—இதன் கருத்து யாது?

9. மாநகரத்தில் இருந்த கோவில்களும் பள்ளிகளும் எவை? அங்கு நடைபெற்றவை யாவை?

10. நகர்க் காவலரின் சிறப்பு யாது?

11. மதுரை மாநகரம் காலப்போக்கில் எவரெவர் ஆட்சிக்குட்பட்டிருந்தது?

12. மதுரையில் உள்ள வரலாற்றுச் சிறப்புடைய சின்னங்கள் எவை?

பயிற்சி

1. இடையருது, வளமனை, நடுவுநிலை, சமயம், பேரொளி, திண்ணிய, பாதுகாவல்.—இவற்றை உங்கள் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

2. வாளேந்திய, அவ்வகழி, அவ்வாயில், இடையருது, நாடோறும், அதற்கப்பால், தன்னிடத்து.—இவற்றைப் பிரித்துக் காட்டுக.

3. பேரொளி = பெருமை + ஒளி
மூதூர் = முதுமை + ஊர்
வெந்நீர் = வெம்மை + நீர்
தண்ணீர் = தண்மை + நீர்
'பெருமை,' 'முதுமை' முதலிய 'மை' ஈற்றுப் பெயர்கள் பண்புப் பெயர்கள் எனப்படும்.

அவை பொருள்களின் பண்பை (குணத்தை) உணர்த்துவன. அவற்ருேடு பிற சொற்கள் சேரப் 'பேரொளி' முதலிய சொற்ருெடர்கள் அமைகின்றன.

4. போர் + பொறிகள், செல்ல + தக்க, இ + ஙனம், இ + வீடு, தோல் + கருவி, நன்கு + அறிந்தவர்.—இவற்றைச் சேர்த்துக் கூறுக.

5. ஆ - (பசு), கிளி, மரம், கண்ணுடி—இவ்வாறு ஓர் எழுத்துத் தனித்தோ, இரண்டு முதலிய பல எழுத்துக்கள் சேர்ந்தோ ஒரு பொருளைத் தெரிவிப்பது சொல் எனப்படும்.

(1) மாடு, வீடு, தை—இவை பெயர்ச் சொற்கள்.

(2) வந்தான், வந்து, வந்த (பையன்)—இவை வினைச் சொற்கள்.

(3) அவனை (ஐ), புலிப்போல (போல)—இவை பெயர் வினைகளை அடுத்துவரும்; இடைச்சொற்கள் எனப் பெயர்பெறும்.

(4) சால, உறு, தவ, நனி—இவை 'மிகுதி' என்னும் பொருளில் வருபவை. இவை பெயர் வினைகளின் குணத்தை உணர்த்துவன; உரிச்சொற்கள் எனப்படும்.

இவ்வாறு சொற்கள் (1) பெயர்ச்சொல், (2) வினைச்சொல், (3) இடைச்சொல், (4) உரிச்சொல் என நான்கு வகைப்படும்.

இப்பாடத்திலிருந்து, இந்நால்வகைச் சொற்களுக்கும் ஒவ்வோர் உதாரணம் தருக.

2. மரியாதை ராமன்

1. ஓர் ஊரில் கள்வர் நால்வர் மனமொத்த நண்பர்களாக வாழ்ந்துவந்தார்கள். அவர்கள் எங்குச் செல்லினும் சேர்ந்தே போவது வழக்கம்; ஒரு வீட்டிற் புகுந்து இருவர் திருட, மற்ற இருவர் முன்வாயிலிலும்' பின்வாயிலிலும் காவல் காப்பது வழக்கம்; திருடிய பொருள்களை நால்வரும் சமமாகப் பங்கிட்டுக் கொள்வர். நால்வரும் இவ்வாறு மன ஒற்றுமையுற்று இருந்தமையால் அவர்களைப் பிடிப்பது மற்றவர்க்கு அரிதாயிருந்தது.

2. அந்நால்வரும் ஒரு நாள் அயலூர் ஒன்றுக்கு ஒரு வேலையை முன்னிட்டுச் சென்றனர். அவர்கள் சென்ற பாதையில் ஒரு பை காணப்பட்டது. அவர்கள் அதை எடுத்து அவிழ்த்துப் பார்த்தனர். அப்பையில் வெள்ளி நாணயங்கள் பல இருந்தன. அவர்கள் அதுவரை அத்துணை மிகுதியான நாணயங்களைப் பார்த்தவர் அல்லர். அதனால் அவர்கள் தங்கள் நல்வினையைப் பாராட்டிக்கொண்டனர்; பணத்தைத் தங்களுக்குள் எவ்வாறு பங்கிட்டுக்கொள்வது என்பது பற்றி யோசித்தனர். 'பணம் என்றால் பிணமும் வாய்திறக்கும்' என்பது பழமொழி அன்றோ? அவர்கள் பணவெறி தலைக்கேறியதால், தங்களுக்குள் இருந்த மனவொற்றுமையை இழந்தனர்.

3. 'ஏதோ ஒரு பை இருக்கின்றதே!' என்று முதலிற் கூறியவன் நான் அல்லவா? ஆதலால் அந்நாணயங்களிற் பல எனக்கே சேரவேண்டும்," என்று ஒருவன் கூறினான். மற்றொருவன், "நானே முதலில் ஓடி அப் பையை எடுத்தவன். ஆதலால் என் பங்கு மிகுதியாக இருக்கவேண்டும்," என்றான். வேறொரு

வன், "எனக்குக் கால் இல்லையா? எனக்கு ஓடுதல் தெரியாதா? நீ ஓடியதைக் கண்டு நான் வாளா இருந்தேன். அதற்காக என் பங்கைக் குறைப்பது முறையன்று," என்றான். நான்காம் கள்வன், "நமக்குள் இருந்த மன ஒற்றுமையைக் கேவலம் பணத்தாசையால் மறந்து, ஒவ்வொருவரும் தத்தம் பங்கைப் பெருக்க முயல்வது முறையன்று. நாம் நால்வரும் எது கிடைப்பினும் இதுவரை சமமாகப் பங்கிட்டுவந்தோம் அல்லவா? அதுபோலவே இப் பொழுதும் செய்வோம்," என்றான். அதற்கு முதல் இருவரும் உடன்படவில்லை. "நமது வழக்கைப் பிறகு தீர்த்துக்கொள்வோம்," என்று கூறி, அவர்கள் மேலும் வழி நடந்தனர்.

4. நால்வரும் ஒரு நகரத்தை அடைந்தனர்; கிழவி ஒருத்தியின் வீட்டில் தங்கினர்; "பாட்டி,

நாங்கள் பக்கத்தில் உள்ள குளத்திற்குச் சென்று நீராடிக் கட்டுச்சோற்றை உண்டு வருவோம். நாங்கள்

நால்வரும் வந்து கேட்கும்வரை இப்பையை வைத்திரு,'' என்று கூறிப் பையை ஒரு தோண்டியில் இட்டுக் கிழவியிடம் கொடுத்தனர். கள்வர் நால்வரும் சில நாட்கள்வரை அவள் வீட்டிலேயே பணம்கொடுத்து உண்டுவந்தனர். பணத்தைப் பங்கிட்டுக்கொள்வதைப் பற்றி அவர்கள் ஒருவித முடிவுக்கும் வரவில்லை.

5. ஒரு நாள் கள்வர் நால்வரும் கிழவி வீட்டுக்கு எதிர் வீட்டுத் திண்ணைமீது அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர். அப்பொழுது மோர் வாங்கிக் குடிக்க அவர்கள் விரும்பினர்; அதனால் தம்முள் ஒருவனைக் கிழவியிடம் அனுப்பித் தோண்டியில் மோர் வாங்கிவரும்படி கூறினர். அவன் கிழவியிடம் சென்று, ''தோண்டியை எடுத்துவரச் சொன்னார்கள்,'' என்றான். 'புதைத்து வைத்திருந்த தோண்டியை எடுத்துவரச் சொன்னார்கள்', என்று பாட்டி தவறாகக் கருதி, வெளியில் வந்து, கள்வர் மூவரையும் பார்த்து, ''தோண்டி எடுத்துவரச் சொன்னீர்களா ?'' என்று கேட்டாள். அவள் கருத்தை உணராத கள்வர் மூவரும், ''ஆம்; கொடு, கொடு,'' என்றனர். கிழவி பணப்பை இருந்த தோண்டியை எடுத்துக் கள்வனிடம் கொடுத்தாள். அவன் ஒருவருக்கும் தெரியாமல் தோட்டத்தின் வழியே மறைந்தான்.

6. ஒரு நாழிகை நேரம் ஆயிற்று. மோர் வாங்கச் சென்றவன் வரவில்லையே என்று கள்வர் மூவரும் கிழவியிடம் வந்து விசாரித்தனர். கிழவி நடந்ததைச் சொன்னாள். உடனே மூவரும் திடுக்கிட்டு, ''ஐயோ! எங்கள் எண்ணத்தில் மண்ணைப் போட்டனையே! நாங்கள் நால்வரும் கேட்கும்பொழுது தோண்டியைக் கொடு என்று சொல்லியும் நீ தவறு செய்தனை. ஆத

லின், நீயே தோண்டியில் இருந்த பணப்பையைத் தரவேண்டும்,'' என்றனர். கிழவி, பாவம்! மிக்க ஏழை. அவள் 'ஓ' வென்று வாய்விட்டுப் புலம்பினுள். கள்வர் மூவரும் நடந்ததைச் சொல்லி நீதி மன்றத்தில் முறையிட்டனர். நீதிபதி கிழவியை நன்கு விசாரித்து, அவளே தவறு செய்தவள் எனத் துணிந்தார்; பணப்பையைக் கிழவியே தரவேண்டும் என்று முடிவு கூறினுர்.

7. நீதிபதியின் முடிவைக் கேட்ட கிழவி இடியோசை கேட்ட நாகம்போலானுள்; "தெய்வமே! நான் என்ன செய்வேன்! நான் எவ்வாறு பணப்பையைக் கொடுக்க முடியும்!'' என்று அழுது கொண்டே ஒரு தெருவிற் சென்ருள். அத்தெருவில் பிள்ளைகளுடன் விளையாடிக்கொண்டிருந்த **இராமன்** என்னும் இளைஞன் கிழவியைப் பார்த்து, "பாட்டி, ஏன் அழுகின்றனை?'' என்று கேட்டான். பாட்டி நடந்ததை நவின்ருள். மதி நுட்பம் மிக்கவனுகிய இராமன், "இத்தீர்ப்பு முறையற்றது. இம்முடிவைக் கொடுத்தவன் அறிஞன் அல்லன்,'' என்ருன்.

8. இராமன் கூறியதைக் கேட்ட சிலர் சீற்றம் கொண்டு, அவன் கூறியதை மன்னனிடம் சென்று கூறினர். மன்னவன் இராமனை வரவழைத்து, "தம்பீ, நீதிபதியின் முடிவைத் தவறு என்று நீ கூறியதாகக் கேள்வியுற்றேன். நீ அவ்வாறு கூறக் காரணம் என்ன? நீயே வழக்கை விசாரித்துத் தீர்ப்புக் கூறு,'' என்ருன். உடனே இராமன் நீதிபதியின் இடத்தில் அமர்ந்தான்; வாதிப் பிரதிவாதிகளை வரவழைத்தான்; இரு திறத்தார் கூறியவற்றையும் நன்கு கவனித்தான். பிறகு அவன் கள்வர் மூவரையும் பார்த்து, "'நாங்கள் **நால்வரும்** வந்து கேட்கும்

பொழுது தோண்டியைக் கொடு,' என்று நீங்கள் இக் கிழவியிடம் சொன்னீர்கள் என்பதை நீங்களே ஒப்புக் கொள்கிறீர்கள். இப்பொழுது நீங்கள் மூவர் மட்டும் தோண்டியைத் தருமாறு கேட்பது சரியா ? நால்வரும் வந்து கேட்பின் கிழவி தோண்டியைத் தருவாள். அதுவே முறை,'' என்று தீர்ப்புக் கூறினன்.

9. கிழவி இராமனது தீர்ப்பைக் கேட்டாள். அவளுடைய அகமும் முகமும் மலர்ந்தன. அவள் இராமனை வாழ்த்திக்கொண்டே தன் வீடு சென்றாள். கள்வர் மூவரும் தங்கள் அறிவீனத்தை எண்ணி வருந்திச் சென்றனர். அரசன் இராமனது அறிவு நுட்பத்தைக் கண்டு வியந்து, அவனைத் தழுவிக் கொண்டான்; அவனுக்கு '**மரியாதை ராமன்**' எனப் பெயரிட்டான்; பல பரிசுகள் நல்கினன்; அவனைத் தன் நாட்டுத் தலைமை நீதிபதி வேலையில் அமர்த்தினன்.

"அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்" என்பது முதுமொழி அன்றோ ?

அருஞ்சொற்பொருள்

அயலூர் - வேற்றூர். பழமொழி - நாட்டில் நெடுங்காலமாக வழங்கிவரும் மொழி. வாளா - ஒன்றும் செய்யாது. கேவலம் - இழிவைக் குறிக்கும் சொல். நாழிகை - 24 நிமிஷநேரம். புலம்பினள் - தன் நிலையை எண்ணி வருந்தி அழுதாள். நவின்றாள் - சொன்னாள். முறை - நியாயம். சீற்றம் - மிக்க கோபம். வாதி - வழக்கை நீதிமன்றத்திற்குக் கொண்டு சென்றவன். நல்கினன் - கொடுத்தான். முதுமொழி - பழமொழி.

கேள்விகள்

1. கள்வர் நால்வரும் எண்ணத்திலும் செயலிலும் ஒன்றுபட்டிருந்தனர் என்பது எப்படித் தெரிகிறது ?

2. 'பணம் என்றால் பிணமும் வாய்திறக்கும்.'—இப்பழமொழி கூறப்பெற்ற சந்தர்ப்பம் யாது ?

3. பணத்தைப் பங்கிட்டுக்கொள்வதைப் பற்றி நால்வரும் கொண்ட கருத்துக்கள் யாவை ?

4. கள்வர் பணப்பையை யாரிடம் கொடுத்தனர்? கொடுத்த பொழுது அவர்கள் கூறியது யாது?

5. பணப்பை எவ்வாறு மறைந்தது?

6. கிழவி புலம்பக் காரணம் யாது?

7. கிழவி இடியோசை கேட்ட நாகம்போலானாள்.—ஏன்?

8. கிழவியின் வாய்மொழி கேட்ட இராமன் கூறியது யாது?

9. இராமன் தந்த தீர்ப்பு யாது? அதுபற்றி உங்கள் கருத்தென்ன?

10. அரசன் இராமனுக்குச் செய்த சிறப்புக்கள் யாவை?

பயிற்சி

1. மனமொத்த, நல்வினை, ஒற்றுமை, தவறு, மதிநுட்பம், அறிவுநுட்பம், தீர்ப்பு—இவற்றை உங்கள் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்லுக.

2. பொருத்தமான சொற்களைக் கோடிட்ட இடங்களில் சேர்த்துக் கூறுக :—

(1) கள்வர் என்பவர் ———. (ஒரு சாதியார், திருடர்)

(2) பணம் என்றால் பிணமும் வாய் ———. (மூடும், திறக்கும்)

(3) இடியோசை கேட்ட ——— போல (எருமை, நாகம்)

3. நல்வினை, அரிது, ஒற்றுமை, இல்லை, குறைப்பது—ஒவ்வொன்றுக்கும் எதிர்ச் சொல் கூறுக.

4. (1) கண்ணன், கண்ணகி, மரம்—இவை பொருள்களின் பெயர்கள்.

(2) ஆறு, வீடு, காடு—இவை இடங்களின் பெயர்கள்.

(3) தை, நாள், புதன்கிழமை—இவை காலங்களின் பெயர்கள்.

(4) கிளை, வால், விரல்—இவை சினைகளின் (உறுப்புக்களின்) பெயர்கள்.

(5) வெண்மை, நன்மை, உண்மை—இவை (பண்பு) குணங்களின் பெயர்கள்.

(6) வருதல், வருகை, வரவு—இவை தொழிற் பெயர்கள்.

இவ்வாறு பெயர்ச் சொற்கள் (1) பொருட்பெயர், (2) இடப்பெயர், (3) காலப்பெயர், (4) சினைப்பெயர், (5) குணப்பெயர், (6) தொழிற்பெயர் என ஆறு வகைப்படும். இப்பாடத்திலிருந்து இவற்றுக்கு ஒவ்வோர் உதாரணம் தருக.

3. தொண்டைமான் இளந்திரையன்

1. தமிழகத்து நாட்டுப் பிரிவுகளுள் **தொண்டைநாடு** என்பது ஒன்று. அது வடக்கே ஏறத்தாழ வடபெண்ணையாற்றையும், தெற்கே பாலாற்றையும், மேற்கே கொங்கு நாட்டையும், கிழக்கே கடலையும் எல்லைகளாக உடையது. தொண்டை நாட்டை ஆண்டவர் **தொண்டைமான்கள்** எனப் பெயர் பெற்றனர். தொண்டை நாட்டின் தலைநகரம் **காஞ்சீபுரம்**.

2. சங்க காலத்தில் தொண்டை நாட்டை ஆண்டவருள் **இளந்திரையன்** என்பவன் சிறந்து விளங்கினான். அவன் பெரும் புலவன்; இயல் - இசை - நாடகப் புலவர்களை ஆதரித்துப் பரிசில் நல்கி அழியாப் புகழ் பெற்றவன்; போரில் வெற்றியன்றி வேறு காணாத பெருவீரன். அவன் புகழைக் கேள்வியுற்ற புலவர்கள் காஞ்சியை அடைந்து, தங்கள் புலமையைக் காட்டிப் பரிசில் பெற்று மீள்வது வழக்கம்.

3. பாணருள் 'பெரும்பாணர்' என்பவர் ஒரு பிரிவினர். அப்பிரிவைச் சேர்ந்த பெரும்பாணன் ஒருவன் வறுமையால் வாடிய தன் சுற்றத்தாருடன் காஞ்சீபுரம் சென்றான்; சென்று, யாழ் வாசித்துப் பாடினான். அவ்வளவில் இளந்திரையன் மகிழ்ந்து அவனுக்குப் பரிசுப் பொருள்கள் பல நல்கிப் பெரு விருந்து அளித்தான். அப் பாணன் அப் பொருள்களுடன் தன் ஊர் நோக்கி வருகையில், வழியில் வறுமையால் வாட்டமுற்றுக் கிடந்த பெரும்பாணன் ஒருவனைக் கண்டான்; அவன்மீது இரக்கம்கொண்டு,

அவனுக்கு இளந்திரையனுடைய கொடைத் தன்மையைக் கூறி, அவனை அவ்வரசனிடம் செல்லுமாறு தூண்டினான். அப்பொழுது அவன் கூறிய விவரங்கள் இவையாகும் :

4. "பழுத்த மரத்தைத் தேடித் திரியும் பறவை போல ஓர் இடத்தில் இராமல் வள்ளலை நாடி அலையும் பாணனே, மிடியால் பொலிவு இழந்த வடிவினையும் 'கல்வியை ஏன் கற்றோம்!' என்று வெறுத்துக் கூறும் மன நிலையையும் உடைய அறிஞனே, நீ கவலைப்படாதே. நம்போன்றோரைக் காக்கத் **தொண்டைமான் இளந்திரையன்** இருக்கின்றான். அவன் சேர - சோழ - பாண்டியரினும் கொடையிற் சிறந்தவன் ; மனமகிழ்ச்சியோடு கரிகளையும் பரிகளையும் இரவலர்க்குக் கொடுப்பவன்; செங்கோலான்; தண்ணளியான். அவனது நாட்டில் வழிப்போக்கரை வெட்டிப் பொருளைக் கொள்ளைகொள்ளும் தீயோர் இல்லை. நீ நான் கூறும் வழிகளைப் பின்பற்றிச் சென்று காஞ்சீபுரத்தை அடைவாயாக.

5. "நீ இங்கிருந்து காஞ்சீபுரத்துக்குச் செல்ல வேண்டுமாயின், பலவகை நிலங்களைக் கடந்து செல்லவேண்டும் ; முதலிற் பெரிய காட்டைக் கடக்க வேண்டும் ; காட்டில் பல பாதைகள் இருக்கும் ; அவற்றில் உமணர் உப்பு வண்டிகளை ஓட்டிச் செல்வர் ; பிற நாடுகளிலிருந்து வந்த வணிகர் மாணிக்கம், முத்து, சந்தனம் முதலிய விலையுயர்ந்த பொருள்களை எடுத்துச் சென்று எங்கும் திரிந்து விற்பர். காட்டில் அரசனால் நியமிக்கப்பெற்ற அதிகாரிகள் பல பாதைகள் சந்திக்கும் இடத்தில் இருந்து சுங்கம் கொள்வர். காட்டில் வேடர்கள் குடியிருப்புக்கள் இருக்கும்.

6. "காட்டை அடுத்துப் **பாலை நிலம்** வரண்டு காணப்படும். அங்குள்ள புதர்களில் முயல் வேட்டை ஆடும் வேடர்கள் ஓசை கேட்கும். வேடர் தலைவன் வாழும் கோட்டை ஒன்றும் காட்சி அளிக்கும். நீ பாலை நிலத்தைக் கடந்து செல்லின், **முல்லை நிலத்தை** அடையலாம். அங்கு ஆடு மாடுகளை மேய்க்கும் இடையர் குடியிருப்புக்கள் இருக்கும். முல்லை நிலத்தைக் கடந்து செல்லின், வயல்வளம் செறிந்த மருதநிலத்தை அடையலாம். யானைகள் நிற்பதுபோல நெற்களஞ்சியங்கள் உழவர் வீடு தோறும் தோன்றும். களங்களில் தூற்றப்பெற்ற நெல் மேருவைப்போல உயர்ந்து தோன்றும்.

7. "இத்தகைய வளம் பொருந்திய மருத நிலத்தைக் கடந்து மீன் பிடிப்பவர் வாழும் சிற்றூர்களை அடையலாம். அச் சிற்றூர்கள் வழியே செல்லின், சிறந்த துறைமுக நகரம் ஒன்றைக் காணலாம். அத்துறைமுக நகரம் அயல்நாட்டு வாணிகத்திற் சிறந்து விளங்கும். நீ அந்நகரத்தைப் பார்த்துவிட்டுக் காஞ்சீபுரத்திற்கு வழி அறிந்து செல்; வழியில் பல சிற்றூர்கள் காணப்படும். அவற்றைக் கடந்து மேலும் செல்; இறுதியில் கல்வியிற் சிறந்த காஞ்சி மாநகரத்தை அடைவாய்.

8. "காஞ்சிமரங்கள் நெருங்கியுள்ள சோலைகள் சூழ்ந்த பெருநகரமே காஞ்சீபுரம். இளந்திரையனது அக்கோநகரம் காவற்காடு சூழ்ந்த பக்கத்தை உடையது. அங்குத் **திருவெஃகா** என்னும் பெருமாள் கோவிலைக் காண்பாய்; உனது யாழை வாசித்து அப்பெருமானை வாழ்த்திச் செல். தெருக்கள் தேரோடுதலால் குழிந்திருக்கும். சோலைகளில் யானைக்கு நெய்யுடன் கலந்துவைக்கப்பட்ட அரிசியைச் சூல்

கொண்ட மந்திகள் திருடிச் சென்று உண்ணும். கோட்டை மதில்கள் உயர்ந்தவை; செங்கற்களால் ஆனவை. கோட்டையும் கோநகரமும் சிறந்த படைகளால் காக்கப்படும்.

9. "இளந்திரையனைக் கண்டு திரைப்பொருளைத் தரச் சிற்றரசர் பலர் அரண்மனைக்கு எதிரிற் காத்துக் கிடப்பர். அரசன் அறிவிற் சிறந்தவன்; நல்லறிவு பெற்ற அமைச்சர்களை உடையவன்; மலர்ந்த முகத் தோற்றம் உடையவன். நீ அப்பெரியோனைக்கண்டு பணிந்து, 'யானைக் கூட்டத்துள் சிங்கம் பாய்வதைப் போலப் பகைவர் கூட்டத்துள் பாய்ந்து, அவர்களைச் சிதற அடித்து வெற்றி காணும் பெருவீரனே, இரவலர்க்கு எளியவனே, வலியார்க்கு வலியவனே, கல்வி-கேள்வி-ஒழுக்கங்களிற் சிறந்தவனே, மாரிபோன்ற நினது கொடைத்தன்மையைப் பலர் பாராட்டிப் பேசுதலைக் கேட்டு, நின்பால் வந்தேன். நீ நெடுங்காலம் வாழ்வாயாக!' என்று கூறி, நின் யாழை வாசி.

10. "அப்பெருமகன் உனது பாடலைக் கேட்டு மகிழ்ந்து உன்னை அழைப்பான்; உனது அரையில் உள்ள கந்தலாடையை அகற்றிப் பாலாவியை ஒத்து விளங்கும் நூலால் நெய்த ஆடைகளை உடுக்கத் தருவான்; அரண்மனை மடையன் ஆக்கிய பலவகை இனிய உணவுகளை அளிப்பான்; கார்காலத்தில் மின்னல் தோன்றினாற்போல உனது விறலியின் கரிய கூந்தலில் சூடும்படி பொன்னாற் செய்யப்பட்ட பூவையும் அணியும்படி வழங்குவான்; கழுத்திற் சூடப் பொன்மாலையை அளிப்பான்; வெள்ளைக் குதிரைகள் நான்கு பூட்டிய தேரைத் தருவான்; உனது வறுமை தீரப் பெரும்பொருளையும் நல்குவான். நீ இறுதியில்

அப்பெருமானை வாழ்த்தி விடைபெற்று, உனது ஊர் நோக்கிச் செல்வாயாக!''

11. இவ்வாறு பெரும்பாணன் வேறொரு பெரும் பாணனை வள்ளல் ஒருவனிடம் ஆற்றுப்படுத்தல் (வழிப்படுத்தல்) **பெரும்பாண் ஆற்றுப்படை** எனப் படும். இவ்வாற்றுப்படைச் செய்யுள் ஐந்நூறு வரிகளை உடையது. இதனைப் பாடியவர் **கடியலூர்-உருத்தி ரன் கண்ணனார்** என்பவர். நீவிர் தக்க வயதில் இவ் வரிய பாடலைப் படித்து மகிழ்க.

அருஞ்சொற்பொருள்

வேறு - தோல்வி. வறுமை - பொருள் இல்லாமை. நல்கி - கொடுத்து. கரி - யானை. பரி - குதிரை. செங்கோலான் - ஒழுங் கான முறையிற் குடிகளை ஆள்பவன். தண்ணளியான் - குளிர்ந்த அருளை உடையவன். உமணர் - உப்பு விற்பவர். சுங்கம் - வரி. முல்லை - காடும் காடு சூழ்ந்த இடமும். செறிந்த - நிரம்பிய. சிற்றூர் - சிறுமை + ஊர். கோநகரம் - தலைநகரம். திறை - கப்பம். இரவலர் - பொருள்வேண்டி வருபவர்; வறியவர். எளியவன் - அன்புடன் பழகி உதவுபவன். மாரி - மழை. அரை - இடுப்பு. மடையன் - சமையற்காரன். மருதம் - வயலும் வயல்சார்ந்த இடமும். கார்காலம் - மழைக்காலம். அரிய - அருமையான.

கேள்விகள்

1. தொண்டை நாட்டின் எல்லைகளும் தலைநகரமும் எவை?
2. இளந்திரையன் நல்லியல்புகள் எவை?
3. இளந்திரையன் பெரும்பாணனை எவ்வாறு சிறப்பித்தான்?
4. பழுத்த மரத்தைத் தேடித் திரியும் பறவைபோல—இந்த உவமை எதனை விளக்க வந்தது?
5. பரிசுபெற்ற பெரும்பாணன் இளந்திரையனைப் பற்றிக் கூறிய செய்திகள் யாவை?
6. பெரும்பாணன் காட்டு நிலத்தைப்பற்றிக் கூறிய விவரங்கள் எவை?
7. மேருவைப்போல, யானைகள் நிற்பதுபோல—இவை எவற்றை விளக்க வந்தன?

8. மருத நிலத்தைக் கடந்த பிறகு எங்கெங்குச் சென்று காஞ்சியை அடையவேண்டும்?

9. பெரும்பாணன் காஞ்சி நகரத்தைப் பற்றிக் கூறிய செய்திகள் யாவை?

10. பெரும்பாணன் இளந்திரையனை நோக்கிக் கூறுமாறு புதிய பாணனுக்குச் சொன்ன செய்தி யாது?

11. இளந்திரையன் பெரும்பாணனுக்கு எவற்றை வழங்குவான்?

12. 'பெரும்பாணாற்றுப்படை' என்பது யாது?

பயிற்சி

1. சங்ககாலம், விவரங்கள், மனநிலை, காக்க, இத்தகைய, துறைமுக நகரம், இரவலர், இறுதியில், வள்ளல்—இவற்றை உங்கள் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்லுக.

2. அ + சிற்றூர், அ + துறைமுகம், பற்றி + செல், காத்து + கிட, உடுக்க + தருவான், வெள்ளை + குதிரை, ஆறு + படை—இவற்றைச் சேர்த்துக் கூறுக.

3. நெடுங்காலம், பெருவீரன், இளந்திரையன், கொடைத் தன்மை, பரிசுப்பொருள், கேள்வியுற்ற, இவ்வரிய—இவற்றைப் பிரித்துக் காட்டுக.

4. (1) கால், அரை, ஒன்று, நூறு—எண்ணல் அளவைப் பெயர்கள்.

(2) வீசை, பலம், மணங்கு—எடுத்தல் அளவைப் பெயர்கள்.

(3) படி, மரக்கால், ஆழாக்கு—முகத்தல் அளவைப் பெயர்கள்.

(4) மைல், அடி, முழம்—நீட்டல் அளவைப் பெயர்கள். இந்நான்கும் அளவைப் பெயர்கள் எனப்படும்.

(5) மகன், மாமி, தந்தை—முறைப்பெயர்கள்.

(6) மரம், கல், மண்—இவை இன்ன காரணம் பற்றி இடப்பெற்ற பெயர்கள் எனக் கூறக்கூடவில்லை; ஆதலால் இடுகுறிப் பெயர்கள் எனப்படும்.

(7) முக்காலி, காற்றுடி—இவை காரணம்பற்றி இடப் பெற்ற பெயர்கள் ஆதலால் காரணப் பெயர்கள் எனப்படும்.

இப்பாடத்திலிருந்து இந்த ஏழுவகைப் பெயர்களுக்கும் ஒவ்வோர் உதாரணம் தருக.

4. மாணவரும் உழவுத் தொழிலும்

1. ஒரு நாடு சீரும் செழிப்பும் பொருந்தி இருக்க வேண்டுமாயின், அந்நாட்டு மக்கள் அறிவு நலமும் உடல் நலமும் ஒருங்கே வாய்க்கப் பெற்றவ ராக இருத்தல் வேண்டும். அறிவு வளர்ச்சிக்குக் கல்வி தேவைப்படுகிறது ; அது போலவே உடல் வளர்ச்சிக்கும் நீண்ட நல் வாழ்க்கைக்கும் நல்லுணவு தேவைப்படுகின்றது. இவை இரண்டும் ஒத்த நிலை யில் இருந்தால்தான், மக்கள் கல்வியின் முழுப் பயனை அடைய முடியும்.

2. உயிர்களுக்கு உணவு இன்றியமையாதது. உணவின்றி எவ்வுயிரும் உலகில் வாழ முடியாது. எனவே, உணவு நமது முதல் தேவைப் பொருளாகி றது. இக்கருத்துக் கொண்டுதான் பண்டைத் தமிழ்ப் புலவர் ஒருவர்,

" உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே "

என்று கூறினர். உண்டிக்குப் பிறகுதான் மனிதன் கல்வி முதலியவற்றைத் தேடுகிறுன். இதனை நோக்க, உணவுப் பொருள்களைத் தரும் உழுதொழிலின் சிறப்பை நாம் நன்கறியலாம். அரசன் முதல் ஆண்டி ஈருகவுள்ள அனைவரும் உழவரைத்தான் உணவுக்கு எதிர் பார்க்கின்றனர். உழவர் இன்றேல் உணவில்லை ; சமுதாய வாழ்க்கை இல்லை ; அரசாங்கம் இல்லை ; நாடு காடாகும் ; மனித சமு தாயம் அநாகரிக நிலையை அடையும். இவ்வுண்மை களை நோக்க, உழவுத் தொழிலே ஒரு நாட்டு நாகரிக வாழ்க்கைக்கு உயிர்நாடி என்பது தெளிவாகிறது அன்றே ?

3. இத்தகைய உயிர்நாடியான பயிர்த்தொழிலைப் பற்றிய அறிவினை, பிள்ளைகளுக்குப் பள்ளிப் பருவத்திலேயே கற்பித்தல் அவசியமாகும். உணவுப் பஞ்சம் மிகுந்திருக்கும் இக்காலத்தில் பயிர்த்தொழிற் கல்வி பிள்ளைகளுக்கு மிகவும் இன்றியமையாதது என்பதில் ஐயமில்லை. இவ்வாறு அறிவுக்குப் பொதுக் கல்வியும், வாழ்க்கைக்கு உழவுத் தொழிலும் கற்பதன் மூலம் பிள்ளைகள் கல்வியின் முழுப் பயனையும் பெற்றவராவர்.

4. ஒவ்வொரு பள்ளியிலும் பயிர்த்தொழிற் கல்வி கற்பிப்பதாயின், உழுதொழிலுக்குரிய நிலம் வேண்டும். அந்நிலம் பள்ளியைச் சார்ந்ததாக இருத்தலே சிறப்புடையது. நகரங்களில் இத்தகைய வசதி இல்லை. மேலும் எல்லாப் பள்ளிகளிலும் உழவே கற்பிக்கப்படுமாயின், பிற கைத்தொழில்களைக் கற்க இடமில்லாமற் போகும். ஆதலால் கிராமங்களில் உள்ள நடுநிலைப் பள்ளிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலுமே பயிர்த்தொழிற் கல்வி கருதிய பயனை அளிக்கும். ஏனைப் பள்ளிகளில் நூல் நூற்றல், ஆடை நெய்தல், பொத்தான் வேலை செய்தல் முதலிய சிறிய கைத்தொழில்களைப் பிள்ளைகட்குக் கற்பிக்கலாம்.

5. மாணவருக்கு உழவுத் தொழிலைக் கிராமப் பள்ளியில் கற்பித்தல் அவசியம் என்பதை நன்கு உணர்ந்து பணியாற்றும் பள்ளி **வாலாஜாபாத் இந்துமத பாடசாலை** ஆகும். அங்கு நூல் நூற்றல், பொத்தான் செய்தல், ஆடை நெய்தல், ஜமக்காளம் நெய்தல், கொம்பு முதலியவற்றில் பல பொருள்களைச் செய்தல், ஈயம் பூசுதல், அச்சுத் தொழில் முதலிய பல கைத்தொழில்கள் கற்பிக்கப்படுகின்றன.

இவற்றுடன் பயிர்த் தொழிலும் நன்முறையிற் கற்பிக்கப்படுகின்றது.

6. இந்துமத பாடசாலையில் முதல் எட்டு வகுப்புக்கள் இருக்கின்றன. ஆறு-ஏழு-எட்டாம் வகுப்புக்களில் உள்ள மாணவர்கள் பயிர்த்தொழிற் கல்வி பெறுகின்றனர். சாத்திரீய முறையிற் பயிர்த் தொழிலிற் பயிற்சி பெற்ற ஆசிரியர் ஒருவர் அங்கு இருக்கிறார். பள்ளிக்கு எதிரில் பெரிய நிலம் இருக்கின்றது; கபிலை ஏற்றக் கிணறு உள்ளது; தண்ணீர் இறைக்கும் இயந்திரமும் இருக்கின்றது. ஆசிரியர் வகுப்பில் பயிர்த் தொழிலைப் பற்றிய விவரங்களை ஒவ்வொன்றாகக் கற்பிக்கிறார்; அவற்றைக் காலையிலும் மாலையிலும் வயல்களில் செயல் மூலம் மாணவரைச் செய்விக்கிறார்.



மாணவன் வயலை உழுதல்

7. படத்தைப் பாருங்கள்: ஒரு மாணவன் வயலை உழுகின்றான். இவ்வாறு எல்லா மாணவரும் வயலை உழுவதிற் பயிற்சி பெறுகின்றனர். அடுத்த

படத்தைப் பாருங்கள்: மாணவர் இருவர் மாடுகளைக் கொண்டு கிணற்றிலிருந்து நீர் இறைக்கின்றனர். அந்நீர் கால்வாய் வழியாக வயலுக்குப் பாய்கின்றது.

8. மாணவரே வயல்களில் நாற்று நடுகின்றனர். நாற்று நடப்படும் வயல் முன்னதாகவே நன்கு உழப்பட்டிருக்கும்; 'அகல உழுவதினும் ஆழ உழு' என்



மாணவர் நீர் இறைத்தல்

னும் பழமொழிக்கு ஏற்ப, வயல் ஆழமாக உழப்பட்டிருக்கும்; உழுத பிறகு ஆவாரை, எருக்கு, புரசை, ஆதாளை முதலிய தழை எருக்கள் போடப்பட்டிருக்கும். இவ்வாறு நன்கு பக்குவப்படுத்தப்பட்ட வயலிற்றான் இம் மாணவர் நாற்று நடுகின்றனர்.

9. இவ்வாறு இப்பாடசாலை மாணவர் நெற்பயிரை விளைப்பதில் சிறந்த பயிற்சியைப் பெறுகின்றனர்; காலை மாலைகளில் வயலைச் சுற்றிப் பார்க்கின்றனர்; ஆசிரியர் கட்டளைப்படி அவ்வப்போது

செய்ய வேண்டும் வயல் வேலைகளைக் குறைவறச் செய்கின்றனர். அவர்கட்கு அவ்வேலையில் இருக்கும் ஊக்கம் குறிப்பிடத் தக்கது. தாங்கள் நட்ட நாற்றுக்கள் நன்கு வளர்வதைக் கண்டுகண்டு அவர்கள் மகிழ்கிறார்கள்; 'உயிர் வாழ்க்கைக்குரிய பயிர்த்தொழிலைக் கற்கின்றோம்,' என்பதை எண்ணி எண்ணிக் களிக்கின்றனர். அப்பள்ளியில் அறியாமை என்னும் களை அகற்றிக் கல்வி என்னும் நீர் பாய்ச்சி, அறிவு என்னும் அறுவடை செய்யப்படுகிறது போலவே, நிலத்திற் களை எடுத்து, அதனைப் பண்படுத்தி, நீர் பாய்ச்சி, விதை விதைத்துப் பாதுகாத்து அறுவடை செய்வது முடிய, முறையாக உழவுத் தொழில் கற்பிக்கப்படுகின்றது.

10. நம் நாட்டு உழவர்க்குப் போதிய கல்வி அறிவு இல்லை; அதனால் மேனாட்டு உழவர் கையாளும் புதிய முறைகளைக் கையாண்டு, சிறந்த எருக்களைப் போட்டுப் பயிர்த்தொழிலைச் சாத்திரீய முறையிற் செய்து மிக்க பலனை அடைய அவர்களால் முடியவில்லை. கிராமப் பள்ளிகளில் உழவுத் தொழில் சாத்திரீய முறையிற் கற்பிக்கப்படுமாயின், எதிர்கால உழவராகும் இக்காலக் கிராமப் பிள்ளைகள், பயிர்த்தொழிலைச் சாத்திரீய முறையிற் கற்றுத் தம் பெற்றோருக்கு உறுதுணையாக இருப்பர்; தங்கள் காலத்தில் கைதேர்ந்த உழவராக விளங்குவர்.

அருஞ்சொற்பொருள்

உண்டி - உணவு. இன்றேல் - இல்லையாயின். இன்றியமையாதது - இல்லாமல் முடியாதது. நடுநிலைப்பள்ளி - எட்டாம் வகுப்பு முடியவுள்ள பள்ளி. உயர்நிலைப்பள்ளி - பத்தாம் வகுப்பு முடிய இருக்கும் பள்ளி. பணி - தொண்டு. ஆற்றும் - செய்யும்.

கபிலே ஏற்றம் - மாடுகளைக் கொண்டு நீர் இறைத்தல். உறு - பொருந்திய. போதிய - வேண்டும் அளவு.

கேள்விகள்

1. மக்கள் எப்பொழுது கல்வியின் முழுப்பயனை அடைய முடியும் ?

2. 'இவ்வுண்மைகளை நோக்க, உழவுத் தொழிலே ஒரு நாட்டு நாகரிக வாழ்க்கைக்கு உயிர்நாடி என்பது தெளிவாகிறது.' —எவ்வுண்மைகளை நோக்கத் தெளிவாகிறது ?

3. கிராமப் பள்ளிகளே பயிர்த்தொழிற் கல்விக்கு ஏற்றவை. —ஏன் ?

4. இந்துமத பாடசாலையில் கற்பிக்கப்படும் கைத்தொழில்கள் எவை ?

5. பயிர்த்தொழில் ஆசிரியர் பிள்ளைகட்குப் பயிர்த்தொழிலை எவ்வாறு கற்பிக்கிறார் ?

6. நாற்று நடப்படும் வயல் எவ்வாறு பக்குவப்படுத்தப் பட்டிருக்கும் ?

7. பாடசாலைப் பிள்ளைகள் உழுதொழிலில் ஊக்கம் காட்டுகிறார்கள் என்பது எப்படித் தெரிகிறது ?

8. கிராமப் பிள்ளைகள் உழவுத் தொழிலைக் கற்பதால் இருவித நன்மைகள் உண்டு.—அவை எவை ?

பயிற்சி

1. இத்தகைய, வாழ்க்கை, பொதுக்கல்வி, முழுப்பயன், வசதி, கைத்தொழில், பயிற்சி, வழியாக.—இவற்றை உங்கள் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்லுக.

2. படிக்கிறான்—இச்சொல்லுக்கு வேர்ச்சொல்லாக இருப்பது 'படி' என்பது.

கீழ்வரும் சொற்களையும் அவற்றுக்குரிய வேர்ச்சொற்களையும் கவனியுங்கள் :

சொல்	வேர்ச்சொல் (பகுதி)
இருத்தல்	இரு
வளர்ச்சி	வளர்
அறிவு	அறி
கல்வி	கல்
ஆகிறது	ஆகு
கற்பித்தல்	கற்பி
பெறுகின்றனர்	பெறு

இவற்றை மனத்தில் வைத்துக் கீழ்வரும் சொற்களுக்கு வேர்ச் சொற்களைக் கூறுக :—பாய்கின்றது, செய்விக்கிருர், இறைக்கின்றனர், நடுகின்றனர், பார்க்கின்றனர், களிக்கின்றனர், பயன் படுத்தி, விளங்குவர்.

3. உழவுத் தொழிலைப்பற்றி நீங்கள் அறிந்த உண்மைகளைத் தொகுத்து ஒரு கட்டுரை எழுதுக.

4. பயிர்த்தொழில் தொடர்பான பழமொழிகள் சில கூறுக.

5. பெயர்ச்சொற்களில் திணை, பால், எண், இடம், வேற்றுமை என்பவற்றை அறிதல் வேண்டும்.

(1) மனிதன், தேவன், நரகர்—உயர்திணை (திணை—பகுப்பு)

(2) மாடு, மாடுகள், மண் —அஃறிணை (அல் + திணை—உயர்வு அல்லாத திணை)

இவ்வாறு உயிர் உள்ள பொருள்களும் உயிர் இல்லாத பொருள்களும் உயர்திணை, அஃறிணை என இருவகைப்படும்.

6. (1) முருகன், பையன் — ஆண்பால்
(2) கண்ணகி, பெண் — பெண்பால்
(3) அரசர், வீரர் — பலர் பால்
} (பால்—பிரிவு) உயர்திணை

(4) மாடு, பாறை — ஒன்றன்பால்
(5) மாடுகள், பாறைகள் — பலவின்பால்
} அஃறிணை

இப்பாடத்திலிருந்து இவற்றுக்கு ஒவ்வோர் உதாரணம் தருக.

5. பாண்டிமாதேவி

1. சங்க காலத்தில் கல்வியின் சிறப்பைத் தமிழ் மக்கள் எல்லோரும் நன்கு உணர்ந்திருந்தனர். அக் காலத்தில் ஆடவரைப் போலவே, அரசமாதேவியர் முதல் குறத்தியர் ஈருக எல்லாப் பெண்மணிகளும் நன்கு கற்றிருந்தனர்; சிலர் கவி பாடும் ஆற்றலும் பெற்றிருந்தனர். அதனுல் அம்மகளிர் அரசரால் பெரிதும் மதிக்கப்பட்டுவந்தனர்.

2. பாணர் மரபைச் சேர்ந்த **ஔவையார்** தகடூரை ஆண்ட அதியமானது அவைப் புலவராக இருந்தார்; அவனுக்கு அறிவுரை கூறும் ஆசிரியராக விளங்கினுர்; அவனுக்கும் தொண்டைமானுக்கும் இடையில் மூள இருந்த போரை, அரசியல் தூதராகச் சென்று தடுத்தார்; அதியமானுடன் போர்க்களம் சென்ருர்; அவன் சோர்வுற்றபொழுது ஊக்கப் படுத்திப் போரில் உணர்ச்சி கொள்ளச் செய்தார். சுருங்கக் கூறின், புலமை பெற்ற பெண்பாலர் ஒரு நாட்டில் அடையத்தக்க சிறப்பு முழுவதையும் அக் காலத்தில் ஔவையார் பெற்றுச் சிறந்தனர் எனக் கூறலாம்.

3. நப்பசலேயார், காமக்கணியார், நன்னுகை யார், வெண்ணிக்குயத்தியார், குறமகள் இள எயினி, காவற்பெண்டு முதலிய பெண்பாற் புலவர் பாடல்கள் சங்க நூல்களிற் காணப்படுகின்றன. குயத்தியார் என்பவர் வெண்ணி என்னும் ஊரில் இருந்த வேட் கோவர் மரபினர். குறமகள் இள எயினி என்பவர் குறவர் மரபினர்; காவற்பெண்டு என்பவர் செவிலித்தாய். இவர்கள் கவி பாடித் தமிழரசரால் மதிக்கப்பட்டனர். இவர்களுடைய பாடல்கள் நக்

கீரர், கபிலர், பரணர் போன்ற புகழ்பெற்ற ஆண்பாற் புலவர்களுடைய பாடல்களைப் போலவே சிறந்து காணப்படுகின்றன.

4. 'தமிழ்ச் செய்யுட்கள் இத்துணைய, அவற்றை இன்னவாறு பாடவேண்டும்,' என்று கூறும் இலக்கண நூல் 'யாப்பிலக்கண நூல்' எனப்படும். அவ்விலக்கண நூல் செய்தல் எளிதான செயல் அன்று. அதனைத் தொல்காப்பியர் முதலிய ஆண்பாற் புலவர் செய்து புகழ்பெற்றனர். தொல்காப்பியர் காலத்திலேயே **காக்கைபாடினியார்** என்ற பெண்பாற் புலவர் யாப்பிலக்கண நூல் ஒன்றைச் செய்து பெயர் பெற்றார். அவருக்குப் பின் அதே பெயர் கொண்ட மற்றொரு பெண்பாற் புலவர் வேறொரு யாப்பிலக்கண நூலைச் செய்தார். இங்ஙனம் பெண்பாற் புலவர் யாப்பிலக்கண நூல்களைச் செய்தனர் எனின், அவர்தம் இலக்கணப் புலமையை என்னென்பது !

5. இவ்வாறு ஆண்பாற் புலவர்களைப் போலவே பெண்பாற் புலவர்கள் சிறப்புப் பெற்றிருந்த சங்க காலத்தில், **பூதப் பாண்டியன்** என்ற பெயர் கொண்ட அரசன் பாண்டிய நாட்டை ஆண்டு வந்தான். அவன் தமிழைத் தன்னுயிர் போலக் கருதினான் ; தமிழ்ப் புலவர்களை நன்கு ஆதரித்தான் ; தமிழ் இலக்கண-இலக்கிய நூல்களை நன்கு கற்றுக் கவி பாடும் ஆற்றல் பெற்றான். அவன் பாடிய பாடல் ஒன்று புறநானூற்றில் காணப்படுகின்றது.

6. அவனது பட்டத்தரசி **பெருங்கோப் பெண்டு** என்பவள். அப்பாண்டிமாதேவி இளமையில் தக்க ஆசிரியரிடம் தமிழ்க் கல்வி பயின்றவள். அவளும் தன் கணவனைப் போலவே கவி பாடுவதில்

வல்லவளாக விளங்கினுள். அம்மாதரசி தன் கணவனைத் தன் உயிர் போலக் கருதினுள்; அவனை மகிழ்விப்பதையே தன் வாழ்க்கையின் நோக்கமாகக் கொண்டாள். பாண்டியனும் தன் மனைவியை அன்போடு நடத்திவந்தான்; அவளுடன் அரசியல், கல்வி முதலிய பல பொருள் சம்பந்தமாகப் பேசி மகிழ்வதை இன்பமாகக் கருதினுன்.

7. இங்ஙனம் ஒத்த கல்வி, ஒத்த குணநலன் முதலியவற்ருல் கட்டுண்ட கணவனும் மனைவியும் மலரும் அதன் மணமும் போலவும், நகமும் அதன் சதையும் போலவும், பாலும் அதன் சுவையும் போலவும் ஒன்றுபட்டு வாழ்க்கை நடத்தினர். இருவரும் கருத்து ஒருமித்து வாழ்ந்தமையால், அவர்கள் நடத்திய இல்லறம் நல்லறமாகக் காட்சி அளித்தது. புலவர்களும் குடிமக்களும் தங்கள் அரசனையும் பாண்டிமாதேவியையும் பாராட்டி மகிழ்ந்தனர்.

8. பல ஆண்டுகள் கழிந்தன. ஒரு நாள் பூதப் பாண்டியன் நோயுற்ருன்; சில நாட்கள் கழித்து இறந்தான். அவனது பிரிவாற்ருத பாண்டிமாதேவி தீப்பாய்ந்து உயிர்விடத் துணிந்தாள். புலவர்க்கும் குடிகட்கும் தாய்போல இருந்த அவள் இறத்தலை ஒருவரும் விரும்பவில்லை; ஆயினும் அவளைத் தடுக்க அஞ்சினர். அவருள் கல்வி, கேள்வி, ஒழுக்கங்களில் மேம்பட்ட பெருமக்கள் ஒருவாறு துணிந்து, அவளை உயிர்விட வேண்டா என வேண்டிக்கொண்டனர்.

9. அப்பொழுது அம்மாதேவி அச்சான்ருேரைப் பார்த்து, "'நீ நின் கணவனுடன் உயிர்விடு' என்று கூருது, என்னை உயிர் வாழச் சொல்லும் பெரியவர்களே, பழைய சோற்றைப் பிழிந்து, கையில் உள்ள இலைமீது வைத்து, எள் துவையல், புளிகூட்டிச்

சமைக்கப்பட்ட வேளை இலை ஆகிய இவற்றை உண்டு, பாயின்றித் தரையில் உறங்கும் கைம்மை நோன்பால் வருந்தும் பெண்டிருள் நான் ஒருத்தி அல்லேன். சுடு

காட்டில் எரிகின்ற ஈமத்தீ எனக்குத் தாமரை பூத்த குளிர்ந்த பொய்கையைப் போன்றது," என்னும் பொருள்கொண்ட செய்யுளைப் பாடித் தீப்பாய்ந்து இறந்தாள். புலவரும் மக்களும் அப்பாண்டி மாதேவியைப் 'பத்தினி' என்று பாராட்டினர்.

10. அப்பெருந்தேவி பாடிய பாடல் **புறநானூறு** என்னும் சங்க நூலில் இருக்கின்றது. அறம், பொருள், வீடு என்னும் புறப்பொருள் மூன்றைப் பற்றிய நானூறு பாக்களைக் கொண்ட நூல் ஆதலால், அது '**புறநானூறு**' எனப் பெயர் பெற்றது. அதனில், அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் முதலிய பலரும் பாடிய பாக்கள் இருக் கின்றன. அவை, சங்க காலத் தமிழருடைய

அரசியல், கல்வி நிலை, பழக்க வழக்கங்கள் முதலிய வற்றை நன்கு விளக்கிக் காட்டுவன. நீங்கள் பெரிய வர்களான பிறகு அவற்றைப் படித்துப் பயன் பெறுங்கள்.

அருஞ்சொற்பொருள்

ஆண் × பெண், ஆடவர் × பெண்டிர். ஈறுக - கடைசியாக. தகடூர் - சேலம் மாவட்டத்தில் உள்ள தருமபுரி பழைய காலத்தில் தகடூர் எனப்பட்டது. மரபு - பரம்பரை. தொண்டைமான் - காஞ்சியை ஆண்ட அரசன். வேட்கோவர் - குயவர். வெண்ணி - தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர். எயினன் × எயினி. செவிலி - வளர்ப்புத்தாய். இத்துணைய - இத்தனை. புலமை - அறிவு. புலவர் - அறிஞர். ஆற்றல் - வலிமை, திறமை. பெருங்கோ - முடியரசன். பெண்டு - மனைவி. ஒருமித்து - ஒன்று பட்டு. உற்றான் - அடைந்தான். சான்றோர் - கல்வி, கேள்வி, ஒழுக்கங்களிற் சிறந்தவர். கைம்மை நோன்பு - விதவையர் பின் பற்றும் விரதம். பொய்கை - குளம். வீடு - மோக்ஷம். புறப் பொருள் - அனைவர்க்கும் வெளிப்படத் தெரியும் அல்லது கூறத் தகும் பொருள். × அகப்பொருள் - இல்லற வாழ்க்கை.

கேள்விகள்

1. ஔவையார் பெற்றிருந்த உயர்நிலை யாது ?
2. சங்ககாலப் பெண்பாற் புலவர் யாவர் ?
3. யாப்பிலக்கணம் என்பது யாது? அதனைச் செய்த பெண்பாற் புலவர் இருவர் யாவர் ?
4. பூதப் பாண்டியனைப் பற்றி நீங்கள் யாது அறிவீர்கள் ?
5. பெருங்கோப்பெண்டின் சிறப்பியல்புகள் யாவை ?
6. அரசனும் அரசியும் எவ்வாறு வாழ்க்கை நடத்தினர் ?
7. பாண்டியன் இறந்ததும், அவன் மாதேவி யாது செய்யக் கருதினாள் ?
8. அவள் சான்றோரைப் பார்த்து யாது கூறினாள் ?
9. ‘புறநானூறு’ என்பது யாது ?

பயிற்சி

1. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துக் கூறுக :—

(1) புலவரும் ——— அப்பாண்டிமாதேவியைப் ——— என்று பாராட்டினர்.

(2) அம்மாதரசி தன் ——— த் தன் ——— போலக் ———.

2. பாயின்றி, நோயுற்ருன், பிரிவாற்ருத, அவ்விலக்கணம், தமிழ்ச்செய்யுள், கட்டுண்ட.—இவற்றைப் பிரித்துக் காட்டுக.

3. மலரும் அதன் மணமும் போலவும், பாலும் அதன் சுவையும் போலவும்—இவற்றை உங்கள் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்லுக.

4. சங்ககாலப் பெண்பாற் புலவர்கள்—பாண்டிமாதேவியின் குண நலங்கள்—கணவன் இறந்ததும் அவள் கொண்ட துணிபு—சான்ருேர் வேண்டுகோள்—அரசியின் உறுதி—முடிவு: இக் குறிப்புக்களைக் கொண்டு இப்பாடப் பொருளை ஒரு கட்டுரையாக எழுதுக.

5. (1) கண்ணன், கண்ணகி, மலை—ஒருமை எண் (எண் - எண்ணிக்கை)

(2) பிள்ளைகள், மலைகள்—பன்மை எண்.

6. நான் கடைக்குச் சென்றபோது நீ முருகனிடம் பேசிக் கொண்டிருந்தாய்.—இவ்வாக்கியத்தில்,

(1) பேசுபவன் — நான்
(2) கேட்பவன் — நீ
(3) பேசப்படுபவன் — முருகன்

இம்மூவர் இடங்களும் முறையே (1) தன்மை இடம், (2) முன்னிலை இடம், (3) படர்க்கை இடம் எனப்படும்.

(1) நான்—தன்மை ஒருமை
நாங்கள், நாம்—தன்மைப் பன்மை

(2) நீ—முன்னிலை ஒருமை
நீங்கள், நீர், நீவிர்—முன்னிலைப் பன்மை

(3) அவன், அவள், அவர், அது, அவை
கண்ணன், கண்ணகி, அரசர், மாடு, மாடுகள் } படர்க்கை இடம்

இப்பாடத்திலிருந்து மூவகை இடப் பெயர்களைக் கூறுக.

6. வட அமெரிக்காவைக் கடந்த முதல் வீரர்கள்



1. வட அமெரிக்கா கண்டு பிடிக்கப்பட்டு மூன்று நூற்றாண்டுகள் ஆகியும் அதன் மேற்குக் கரை கண் டறியப்படாமலே இருந்தது. ராக்கி மலைத்தொடரும் இருள் அடர்ந்த காடுகளும் அமெரிக்க இந்தியர்

தொல்லேயுமே மேற்குக் கரையைக் காணத் தடையாக இருந்தன. கி. பி. 1803-இல் அமெரிக்க ஐக்கிய நாடு களின் தலேவராயிருந்த ஜெப்பர்சன் (Jefferson) என்பவர் தமது பதவிக்காலத்தில் மேற்குக் கரை கண்டு பிடிக்கப்படவேண்டும் என்று விரும்பினுர்.

2. அவர் படைத்தலேவர் **லூவிஸ்** என்பவரை யும் தம் அந்தரங்கச் செயலாளரான படைத்தலேவர்

லூவிஸ்

கிளார்க்கு

கிளார்க்கு என்பவரையும் அழைத்துத் தமது விருப் பத்தை நிறைவேற்றுமாறு வேண்டினுர்; "மிசௌரி யாற்றுவழியே மேல் நோக்கிச் சென்று, அது தோன் றும் இடத்தை அடைக; அங்கிருந்து ராக்கி மலேத் தொடரைக் கடந்து செல்க; பிறகு மேற்கடல் நோக்கிப் பாயும் ஓர் ஆற்று வழியே சென்று, மேற்கடலேக் கண்டு மீள்க; நீங்கள் செல்லும் பகுதிகளேப் பற்றிய எல்லா விவரங்களேயும் தெளிவாகத் தெரிந்து வருக," என்ருர்.

3. கி. பி. 1804-ஆம் ஆண்டு மே திங்கள் 14-ஆம் நாள் படைத்தலேவர் இருவரும் வழி காட்டும்

அமெரிக்க இந்தியரும் அமெரிக்க வீரருமாக ஐம்பதின்மர் மூன்று படகுகளில் ஏறிக்கொண்டு, மிசௌரி யாற்றின் போக்கை எதிர்த்துச் சென்றனர்; அதே ஆண்டு நவம்பர் முதல் நாள் 'டகோடா' (Dakota) என்று இப்பொழுது சொல்லப்படும் நாட்டின் தென்

வீரர் இருவரும் வழி காட்டிகளுடன் நிற்றல்

பகுதியில் தங்கி மழைக்காலத்தைப் போக்கினர். மிசௌரி மிசிசிப்பியுடன் கலக்கும் இடத்தில் உள்ள செயின்ட் லூயி நகரத்திற்குத் தம்முடன் வந்தவருள் பதினன்கு பேரை அனுப்பி, அங்கு இருக்கும்படி ஆணையிட்டுத் தலைவர் இருவரும் அடுத்த ஆண்டு ஏப்ரல் திங்கள் 8-ஆம் நாள் புறப்பட்டு மேற்கு நோக்கிச் சென்றனர். அப்பொழுது அவர்கட்கு உதவியாகக் கனடாவைச் சேர்ந்த ஒருவனும், பதினறு வயதுடைய அவன் மனைவியும் உடன் சென்றனர். அப்பெண்மணி தன் சிறு குழந்தையைத் தன் முதுகிற் கட்டிக்கொண்டு வழி நடந்தாள். அவள் இளமையில்

அக்காட்டுப் பகுதிகளில் தன் பெற்ருேருடன் சுற்றித் திரிந்தவள் ஆதலின், மிகுந்த ஊக்கத்துடனும் உள்ளக் கிளர்ச்சியுடனும் வழி காட்டிச் சென்ருள்.

4. படைத் தலைவர் இருவரும் தம் வீரருடன் அப்பெண்மணி காட்டிய வழியே சென்றனர்; தங்கட்குமுன் எந்த வெள்ளையரும் காலடி எடுத்து வையாத காடுகளில் எல்லாம் நடந்து சென்றனர்; ஆங்காங்கு இருந்த அமெரிக்க இந்தியருடன் நட்புக் கொண்டாடி, அவர்களின் விருந்தினராகத் தங்கிச் சென்றனர்; சில இடங்களில் அமெரிக்க இந்திய ரோடு போராடிச் சென்றனர்.

5. அவர்கள் மேலும் மிசௌரி ஆற்ருேரமே சென்றனர். இப்பொழுது 'மொந்தாஞ மாகாணம்' என்று பெயர் கொண்ட பகுதியில் ஓரிடத்தில் மிசௌரி யாற்றின் மிகப்பெரிய நீர்வீழ்ச்சியைக் கண்டு இமை கொட்டாது வியப்புடன் நோக்கினர்; அந் நீர்வீழ்ச்சி யின் அடியில் உள்ள மிகச் சிறிய தீவில் கழுகு கூடு கட்டியிருந்ததைக் கண்டனர். அங்கு மனிதரோ, விலங்குகளோ போக முடியாதபடி நாற்புறங்களிலும் நீர் சூழ்ந்துள்ளது. அக் கழுகுக் கூண்டை நினைவிற் கொண்டு, படைத் தலைவர் இருவரும், அந் நீர்வீழ்ச் சிக்குக் 'கருங்கழுகு நீர்வீழ்ச்சி' எனப் பெய ரிட்டனர்.

6. பின்னர் அவர்கள் ராக்கி மலைத்தொடரை அரும்பாடுபட்டுக் கடந்து ஜுலைத் திங்கள் 27-ஆம் நாள் ஓரிடத்தை அடைந்தனர். அந்த இடத்திற்ருன் மூன்று சிற்ருறுகள் சேர்ந்து மிசௌரி என்னும் பேரி யாறு ஆகின்றன. பிறகு அவர்கள், மேடு பள்ளங்கள் நிறைந்த அஞ்சத்தக்க காட்சிகளைக் கொண்ட காடு களைத் தாண்டி ஒரு சிற்ருற்றை அடைந்தனர்; தங்கள்

படகுகளை அந்த ஆற்றில் விட்டு அவற்றில் ஏறிக் கொண்டனர். அச் சிற்ருறு அவர்களைப் பாம்பாற்றிற் சேர்த்தது. அப் பாம்பாறு மேற்கு நோக்கிப் பாய்ந்து, மேலைப் (பசிபிக்) பெருங் கடலிற் கலக்கிறது. ஆதலால் அவர்கள் பாம்பாற்று வழியே சென்று பசிபிக் பெருங்கடலை அடைந்தனர். பாம்பாற்றின் சங்கமுகத் துறையை, அமெரிக்கக் கடற்படைத் தலைவருள் ஒருவரான இராபர்ட் கிரே என்பவர் 1792-இல் பசிபிக் பெருங்கடல் ஓரமாக வந்து கண்டறிந்தார் ; அந்த ஆற்றுக்குக் 'கொலம்பியா' எனப் பெயரிட்டார்.

7. பல இன்னல்களுக்கு ஆட்பட்டுப் பெரிய மலைத்தொடரையும் பெருங் காடுகளையும் கடந்து சென்று, பசிபிக் பெருங்கடலைக் கண்ட படைத் தலைவர் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை. அவர்கள் அங்குத் தங்கி மாரிக் காலத்தைக் கழித்தனர் ; 1806-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 23-ஆம் நாள் கிழக்கு நோக்கித் திரும்பினர் ; தம்முடன் நெருங்கிப் பழகிய அமெரிக்க இந்தியர் வழிகாட்ட, விரைந்து நடந்தனர் ; முன்னைய துன்ப அனுபவங்கள் இப் பொழுது அவர்கட்குத் துணை புரிந்தன. அவர்கள் இறுதியில் செயின்ட் லூயி வந்து சேர்ந்தனர்.

8. பசிபிக் பெருங்கடலைக் கண்டு மீள அவர்கள் ஏறக்குறைய ஒன்பதாயிரம் கல் தூரம் பிரயாணம் செய்தனர் ; அமெரிக்க இந்தியருடைய எதிர்ப்புக்களைச் சமாளித்தனர் ; கதிரவன் ஒளிபடாத காடுகளில் கொடிய விலங்குகளுடன் போரிட்டு வழி நடந்தனர் ; ஏறுதற்கு அரிய—உயரமான ராக்கி மலைத் தொடரைக் கடந்தனர் ; படகுகளிற் செல்லுங்கால் ஆற்று வெள்ளத்தைச் சமாளித்தனர். இவற்றைச் சொல்லுதல் எளிது ; அனுபவித்தல் அரிதன்றோ ?

9. அப்பெரு மக்களுடைய வீரம், துன்பங்களை இன்பமாகக் கருதும் மனப்பண்பு, எப்பாடு பட்டேனும் புதுமை காணவேண்டும் என்னும் பேராவல் முதலிய நற்பண்புகள் கூர்ந்து கவனிக்கத் தக்கவை. இப் பண்புகளைப் பாராட்டிய குடியரசுத் தலைவர் லூசியானா நாட்டின் வடபகுதிக்கு லூவிஸைக் கவர்னராக நியமித்தார்; கிளார்க்கு மிசௌரி மாகாணத்தின் கவர்னர் பதவி அளிக்கப் பெற்றார்.

செயற்கரிய செய்த அப்பெருமக்கள் உலக வரலாற்றில் இடம் பெற்றுள்ளனர் என்பதில் வியப்பு உண்டோ?

அருஞ்சொற்பொருள்

பதவிக்காலம் - குடியரசுத் தலைவராக இருந்த (பதவிக்)காலம். பெருங்கடல் - சமுத்திரம். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உள்ள ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு கவர்னர் உண்டு; கூட்டாட்சி நடத்துபவர் குடியரசுத் தலைவர். ஐக்கியம் - கூட்டு. குடியரசு - குடிகளால் தேர்ந்தெடுக்கப் பெற்ற பிரதிநிதிகள் இருந்து ஆளும் அரசு. × முடியரசு.

கேள்விகள்

1. அமெரிக்கர் வடஅமெரிக்காவைக் கடந்து பசிபிக் பெருங்கடலைப் பல நூற்றாண்டுகள் காணாதிருந்தனர்.—ஏன்?

2. குடியரசுத் தலைவர், படைத்தலைவர் இருவரை நோக்கிக் கூறியவை யாவை?

3. படைத்தலைவர் இருவரும் கருங்கழுகு நீர்வீழ்ச்சியைக் காணும்வரை செய்த பிரயாண விவரங்கள் யாவை?

4. கருங்கழுகு நீர்வீழ்ச்சி—பெயர்க்காரணம் யாது?

5. கொலம்பியா ஆறு எது? அதன் மற்றொரு பெயர் யாது?

6. நீர்வீழ்ச்சியைக் கண்ட பிறகு படைத்தலைவர் இருவரும் எவ்வாறு சென்று பசிபிக் பெருங்கடலைக் கண்டனர்?

7. படைத்தலைவர்கள் தங்கள் முயற்சியில் அடைந்த அனுபவங்கள் யாவை?

8. படைத்தலைவர்களுடைய நற்பண்புகள் யாவை?

பயிற்சி

1. திங்கள் (மாதம்), புறப்பட்டு, மிசௌரி, தடையாக, சிற்ருறு, நீர்வீழ்ச்சி, மேடுபள்ளங்கள், கடற்படை, மலைத்தொடர்—இவற்றை உங்கள் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்லுக.

2. நீங்கள் அறிந்த ஒரு பெரிய காடு, பெரிய ஆறு, மலைத் தொடர்—இவற்றுள் ஒன்றைப் பற்றி 20 வரிகள் எழுதுக.

3. மேடு, சிற்ருறு, தக்க, முடியும், எளிது—ஒவ்வொன்றுக்கும் எதிர்ச்சொல் கூறுக.

4. குடியரசுத் தலைவரது அவா—அவர் படைத்தலைவரிடம் கூறியவை—படைத்தலைவர் பிரயாணம்—கருங்கழுகு நீர்வீழ்ச்சி—பெருங்கடலைக் காணுதல்—மீண்டு வருதல்—செயற்கரிய செய்த வீரர்: இக்குறிப்புக்களைக் கொண்டு இப்பாடப் பொருளை ஒரு கட்டுரையாக எழுதுக.

5. முருகன், முருகனை, முருகனுல், முருகனுக்கு, முருகனில் கந்தன் பெரியவன், முருகனது புத்தகம், முருகனிடம் செல், முருகா—என ஒரு பெயர் பல மாறுதல்களை அடைகிற தன்றே? ஐ, ஆல், கு, இன், அது, இடம் முதலியன பெயர்ச் சொல்லுடன் சேரும்பொழுது இவ்வேற்றுமைகள் உண்டாகின்றன. இவ்வாறு ஒரு பெயர்ச்சொல்லின் பொருளை வேறு படுத்தல் வேற்றுமை எனப்படும். வேறுபடுத்தும் உருபு வேற்றுமை உருபு எனப்படும். வேற்றுமை எட்டு ஆகும்.

(1) தலைவர் வந்தார்.—இஃது ஒருவித மாறுதலும் இல்லாத பெயர்; முதல் வேற்றுமை.

(2) அவர் கடலைக் கண்டார்—கடல்+ஐ; ஐ இரண்டாம் வேற்றுமை உருபு.

(3) அமெரிக்கா கொலம்பஸால் கண்டறியப்பட்டது. —ஆல்.
அவரோடு பலர் கப்பலிற் சென்றனர்.—ஓடு
அவருடன் வீரரும் சென்றனர்.—உடன்

இவை மூன்றும் மூன்றும் வேற்றுமை உருபுகள்.

இப்பாடத்திலிருந்து இவற்றுக்கு ஒவ்வோர் உதாரணம் தருக.

7. அரசியல் தூதர்—ஔவையார்

1. சேலம் மாவட்டத்தில் தருமபுரி என வழங்கும் ஊர் சங்க காலத்தில் **தகடூர்** எனப்பட்டது. தருமபுரிக்கு ஏறத்தாழ ஐந்து கல் தொலையில் உள்ள 'அதமன் கோட்டை' என வழங்கும் இடமே சங்க காலத்து 'அதியமான் கோட்டை' இருந்த இடமாகும். அதியமான் என்பவன் கொங்கு நாட்டின் ஒரு பகுதியை ஆண்ட சிற்றரசன்; கல்வி கேள்விகளிற் சிறந்தவன்; செய்யுட்களைப் பாடிய புலவர்களையும், இசைத் தமிழில் வல்ல பாணர்களையும், நாடகத் தமிழில் வல்ல கூத்தர்களையும் நன்கு வரவேற்று, அவர்கள் விரும்பியவாறு பரிசில் கொடுத்த வள்ளல்.

2. அவன் தமிழ்ப் புலவர்களிடம் காட்டிய பெருமதிப்பைக் கேள்வியுற்ற **ஔவையார்** என்ற பெண்பாற் புலவர் அவன் அரண்மனையை அடைந்தார்; தம் செந்தமிழ்ச் செய்யுட்களால் அவன் உள்ளத்தைக் கவர்ந்தார். அரசன் அவருடைய கல்வி, கேள்வி, ஒழுக்கங்களைக் கவனித்தான்; அவரிடம் பெருமதிப்புக் கொண்டான்; அவரைத் தன் அவைப் புலவராக இருக்குமாறு வேண்டிக்கொண்டான். ஔவையாரும் அதற்கு இசைந்தனர்.

3. ஒரு நாள் மன்னன் மலைப்பக்கத்தில் தனியே உலவச் சென்றான்; மலைமீது உயர்ந்து வளர்ந்த கருநெல்லி மரம் ஒன்றைப் பார்த்தான்; அம் மரத்தின் உச்சியில் கண் கவரத்தக்க பெரிய நெல்லிக் கனி ஒன்றைக் கண்டான்; "இந்தக் கனியை உண்பவர் நீண்ட நாள் நல்லுடல் பெற்று வாழ்வர் என்று பெரியோர் சொல்லக் கேட்டிருக்கிறேன். இதனைப் பறித்து

நம் அன்னையாரான ஔவையாருக்குக் கொடுப்பது நல்லது. அவர் நீண்ட நாள் இருப்பின், தமிழ் வளர்ச்சி அடையும்; தமிழ் வளர்தல் நாம் வளர்தல் போலாகும்,'' என்று தனக்குள் எண்ணினன்.

4. அப் பெருமகன் மலைமீது ஏறினன்; பல வாறு முயன்று இறுதியில் தான் விரும்பிய நெல்லிக் கனியைப் பறித்தான்; தன் அரண்மனையை அடைந் தான்; மலர்ந்த முகத்துடன் அதனை ஔவையாருக்கு அளித்தான். ஔவையார் அதன் சிறப்பை உணரா தவர். அவர் அதனை உண்டார். நாட்கள் சில கழிந்தன. தமது உடம்பில் புதிய பலம் உண்டாகி யுள்ளதை ஔவையார் உணர்ந்தார்; அதனை அரச னிடம் கூறினர். வேந்தன் கருநெல்லிக்கனியின் சிறப்பை விளக்கினன்.

5. உடனே ஔவையார், ''அப்பனே, கரு நெல்லிக் கனியின் சிறப்பை உணர்ந்தும், நீ அதனை உண்ணாது, எனக்குக் கொடுத்த உனது தன்னலமற்ற செயலை நான் எவ்வாறு பாராட்டுவேன்! நீ தியாகத் தின் சின்னமாக விளங்குகின்றாய். பெருமானே, நீ தேவர்க்கு அமிர்தத்தைக் கொடுத்து, விஷத்தைத் தொண்டையில் அடக்கி விளங்கும் சிவபெருமானைப் போல என்றும் நிலைபெற்று இருப்பாயாக!'' என்று வாயார வாழ்த்தினர்.

6. அதியமான் சிறந்த போர் வீரன். அவ னுடைய வீரர்கள் 'போர்' என்னும் சொல்லைக் கேட்டவுடன் அளவற்ற மகிழ்ச்சி அடையும் இயல் பினர். அவன் வலியப் போருக்குச் செல்லும் இயல் பினன் அல்லன்; தன்மீது வலிய வந்தவரை வெல்லும் ஆற்றல் உடையவன். பொறாமை கொண்ட அரசர் பலர் அவன் நாட்டின்மீது அடிக்கடி படையெடுப்பது

வழக்கம். அதனால் அவன் பெரிய படையைச் சேர்த் திருந்தான்; வேல், ஈட்டி, வாள் முதலிய போர்க் கருவிகளை மிகப் பலவாகச் செய்வித்திருந்தான்.

7. காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு தொண்டை நாட்டை ஆண்டுவந்த **தொண்டைமான்** என்பவன், எக் காரணம் கொண்டோ, அதியமானை எதிர்க்க விரும்பினான். அதனை உணர்ந்த அதியமான் சீற்றம் கொண்டான். அவன் போருக்கு அஞ்சா தவன் அல்லவா? எனினும், தொண்டைமான் போருக்கு வந்து தன்னிடம் தோல்வி அடைவதை அதியமான் விரும்பவில்லை; ஆதலால் காஞ்சிக்குச் சென்று அவனுக்கு அறிவுரை கூறவும், அதே சமயத்தில் அவனது படை வன்மையை உள்ளபடி அறிந்து வரவும் தக்கவர் ஒருவரைக் காஞ்சிக்குத் தூத ராக அனுப்பத் துணிந்தான்; அவன் எண்ணத்தை நிறைவேற்றத் தக்கவர் ஔவையாரே என எண்ணி, அவரிடம் தன் விருப்பத்தைத் தெரிவித்தான். அம்மை யார் அதற்கு உடன்பட்டார்.

8. அம்மையார் தன்னிடம் அரசியல் தூதராக வருவதைக் காஞ்சி அரசன் உணர்ந்தான். அவன் அவரது பெரும்புலமையைப் பலர் மூலமாகக் கேள்வி யுற்றவன். ஆதலால், அவரை நன்கு வரவேற்றுச் சிறப்பிக்க விரும்பினான்; அவ்வாறே தன் அரண்மனை நோக்கி வந்த அம் மூதாட்டியாரை மகிழ்ச்சியோடு வரவேற்றான்; சிறந்த உணவுப் பொருள்களைத் தயாரித்துப் பெருவிருந்து அளித்தான். அவனுடைய நல்லியல்புகளைக் கவனித்த ஔவையார் அவனிடம் அன்பு கொண்டார்; அரசன் குடிகளை அமைதியாகக் காத்தலே சிறப்புடையது என்பதும், போர் எக் காரணத்தைக் கொண்டதாயினும் வெறுக்கத்தக்கது

என்பதும் அவன் உள்ளத்திற் பதியும்படி பல மேற்கோள்களைக் கூறினர்.



ஔவையார் போர்க்கருவிகளைக் காணுதல்

9. தொண்டைமான் அம்மையாரைத் தன் அரண்மனையின் பல இடங்கட்கும் அழைத்துச் சென்றான் ; இறுதியில் போர்க் கருவிகள் வைக்கப்பட்டிருந்த கட்டிடத்திற்குள் நுழைந்தான். ஔவையார் அவனுடைய படைக்கலங்களை நன்கு பார்வையிட்டார் ; பின்னர் அவனை நோக்கி,

"மன்ன, உன்னுடைய போர்க்கருவிகள் எல்லாம் நெய் பூசப்பெற்றும் பீலி அணியப் பெற்றும் புதியனவாக இருக்கின்றன. எம் அதியமானுடைய போர்க் கருவிகள் ஓரமும் நுனியும் தேய்ந்து பழுது பார்ப்பதற்காகக் கொல்லனுடைய உலைக்கூடத்திற் கிடக்கின்றன,"

என்று, காஞ்சியரசனைப் புகழ்வது போலவும் அதியமானைப் பழிப்பது போலவும் கூறினர்.

10. ஔவையார் கூறியதன் கருத்து யாது? 'அதியமான் அடிக்கடி போர் செய்கின்றவன். அதனால் அவனுடைய போர்க்கருவிகள் அடிக்கடி கெட்டுப் பழுதுபார்க்கப்படுகின்றன. நீயோ போரையே அறியாதவன். ஆதலால் உன்னுடைய போர்க்கருவிகள் புதியனவாக இருக்கின்றன. இந்நிலையில் நீ அதியமானிடம் சென்று போரிடல் முறையன்று,' என்பதே ஔவையார் கூறியதன் கருத்தாகும்.

11. காஞ்சி அரசன் நுண்ணறிவு உடையவன் ஆதலால், ஔவையாரது கூற்றின் பொருளை நன்கு உணர்ந்தான்; போரைப் பற்றிய எண்ணத்தை விடுத்தான். ஔவையார் தூது சென்றமை பயன் அளித்ததைக் கண்ட அதியமான் அவரைப் பாராட்டி மகிழ்ந்தான்.

அருஞ்சொற்பொருள்

தொலை - தூரம். கொங்குநாடு - சேலம், கோயம்புத்தூர், நீலகிரி ஜில்லாக்கள் சேர்ந்த நிலப்பகுதி. தன்னலம் - சுயநலம். தியாகம் - தன்னலம் இல்லாமை. வன்மை - சக்தி. மூதாட்டியார் - வயது முதிர்ந்த பெண்மணியார். மேற்கோள் - உதாரணம். படைக்கலம் - படைக்கருவி. சீற்றம் - கடுங்கோபம். பீலி - மயில் இறகு.

கேள்விகள்

1. அதியமான் எந்த நாட்டில்—எப்பகுதியை ஆண்டான்?
2. அவனுடைய சிறப்பியல்புகள் யாவை?
3. அவன் ஔவையாரிடம் பெருமதிப்புக் கொண்டான்.—ஏன்?
4. அதியமான் கருநெல்லிக் கனியைத் தான் உண்ணவில்லை.—காரணம் என்ன?
5. வேந்தன் கருநெல்லிக் கனியின் சிறப்பை விளக்கினன்.—எப்பொழுது?
6. ஔவையார் அதியமானது தியாகத்தை எவ்வாறு பாராட்டினர்?

7. அதியமான் பெரும்படையைத் திரட்டக் காரணம் யாது?
8. ஔவையார் ஏன் காஞ்சிக்குச் செல்ல உடன்பட்டார்?
9. ஔவையார் தொண்டைமானது உள்ளத்திற் பதிய வைத்தவை யாவை?
10. படைக்கலங்களைப் பார்த்த ஔவையார் கூறியது யாது?
11. அக்கூற்றின் உட்பொருள் என்ன?
12. ஔவையார் தூது சென்றமை எவ்வாறு பயன் அளித்தது?

பயிற்சி

1. பெருமதிப்பு, நிலைபெற்று, அடிக்கடி, தக்கவர், கருத்து, நுண்ணறிவு, அமைதியாக, கவரத்தக்க—இவற்றை உங்கள் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்லுக.

2. மலர்ந்த × சுளித்த. நீண்ட × குறுகிய. விருப்பு, வளர்தல், மதிப்பு, தோல்வி, தக்கவர், புதியன.—எதிர்ச் சொற்களைச் சொல்லுக.

3. நல்லுடல், நெல்லிக்கனி, போர்க்கருவி, எக்காரணம், உணவுப்பொருள், படைக்கலம், நுண்ணறிவு—இவற்றைப் பிரித்துக் காட்டுக.

4. (1) அதியமான் சிறப்பு—ஔவையார் அதியமானிடம் மதிப்புப் பெறுதல்—கருநெல்லிக்கனியின் மேன்மை—ஔவையார் அதனை உண்ணுதல்—அதியமானை வாழ்த்துதல் : இக் குறிப்புக்களைக் கொண்டு ஒரு கட்டுரை வரைக.

(2) அதியமானது பெரும் படை—தொண்டைமான் உட்கருத்து—அதியமான் தூதுவிடுதல்—காஞ்சியில் ஔவையார்—ஔவையாரது தூது பயன் அளித்தல் : இக்குறிப்புக்களைக் கொண்டு ஒரு கட்டுரை எழுதுக.

5. (1) அதியமானுக்கு நண்பர் ஔவையார்.—கு
நான்காம் வே. உருபு.

(2) தொண்டைமானில் அதியமான் வலியவன்.—இல்
அவர் காஞ்சியினின்று தகடூர் மீண்டார்.—நின்று
ஔவையார் தகடூரிலிருந்து காஞ்சி சென்றார்.—இருந்து

இல், நின்று, இருந்து—இவை ஐந்தாம் வே. உருபுகள்.

(3) இது அவனது வேல்.—அது
இவை அவனுடைய வேல்கள்.—உடைய

அது, உடைய—ஆறாம் வேற்றுமை உருபுகள்.
'அது' உருபு ஒருமையில் மட்டுமே வரும்.
'உடைய' உருபு ஒருமையிலும் பன்மையிலும் வரும்.
இப்பாடத்திலிருந்து இவற்றுக்கு ஒவ்வோர் உதாரணம் தருக.

8. செய்தித்தாள் விற்கும் அமெரிக்க மாணவர்

1. இப்படத்தைப் பாருங்கள் : இவன் அமெரிக்க மாணவன் ; காலையில் ஐந்தரை மணியளவில் படுக்கையை விட்டு எழுந்து, தன் சைக்கிள் வண்டியில் ஏறித் தான் இருக்கின்ற தெருக்கோடிக்குச் செல்கிறான்.

அங்கு அவன் பெயர் எழுதப்பட்டுள்ள செய்தித்தாள்களின் கட்டு ஒன்று வைக்கப்பட்டுள்ளது. அவன் அதனைப் பிரித்துத் தாள்களை மடித்து, தன் சைக்கிளின் பின்புறம் உள்ள பிரம்புக் கூடையில் வைத்துக்கொள்கிறான் ; அத்தாள்களை நாள்தோறும் வாங்கிப் படிக்கும் சந்தாதாரர் வீடுகளுக்குச் செல்கிறான் ; ஒவ்வொரு வீட்டாரும் காலையில் எழுவதற்கு முன் அவரவர் வீட்டில் செய்தித்தாளைச் சேர்த்து விட்டுக் காலை உணவிற்குத் தன் வீடு செல்கிறான்.

2. ஞாயிற்றுக் கிழமைகளில் அவன் காலை மூன்றரை மணி அளவில் எழுந்து, செய்தித்தாளின் கிளை நிலையத்திற்குச் செல்வான்; தாள்களை எண்ணிப் பல கட்டுக்களாகக் கட்டுவான்; ஒரு வண்டியில் ஏற்றி, ஒவ்வொரு கட்டையும் தன் போன்ற மாணவர் கட்டினை எடுக்க வரும் தெருக் கோடிகளில் போட்டு விடுவான்; பிறகு தனக்கு உரிய கட்டைப் பிரித்து வழக்கம் போலத் தான் கொடுத்துவரும் சந்தாதாரருக்குக் கொடுத்து மீள்வான். ஞாயிற்றுக் கிழமைகளிலும் படிப்பவர் எழுந்திருக்கு முன்னரே அவரவர் வீட்டில் செய்தித்தாள் சேர்க்கப்படும்.

3. பன்னிரண்டு வயதுமுதல் பதினெட்டு வயதுக்கு உட்பட்ட ஐந்து லட்சம் மாணவர் அமெரிக்காவில் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர்; சந்தாதாரர் வீடுகளில் செய்தித்தாள்களைச் சேர்ப்பதும், தெருக் கோடிகளிலிருந்து விற்பதும் இம்மாணவர் வேலை. இவர்கள் ஒருநாளில் ஏறத்தாழ ஐந்து கோடிப் படிகளை விற்கின்றனர். இத்தொழிலால் இம்மாணவர் பெறும் நன்மைகள் இரண்டு: தங்கள் படிப்புக்கு ஓரளவு உதவத்தக்க பொருளீட்டுகின்றனர்; அத்துடன் பள்ளிப் பருவத்திலேயே ஒரு தொழிலைக் கற்கின்றனர்.

4. உலகப் புகழ் பெற்ற **பெஞ்சமின் பிராங்க்ளின்,** மோட்டார்ப் பேரரசர் எனப் புகழ் பெற்ற **ஹென்றி போர்டு,** சிறந்த விஞ்ஞானியான தாமஸ் ஆல்வா எடிசன், அமெரிக்கப் படைத் தலைவரான **ஐசன் ஹோவர்,** முன்னாள் குடியரசுத் தலைவராக இருந்த **ஹெர்பர்ட் ஹூவெர்** முதலிய எண்ணிறந்த பெருமக்கள் இளமையில் செய்தித்தாள்களை விற்ற மாணவரேயாவர். ஆதலின், அமெரிக்காவில் இத் தொழில் இழிவாகக் கருதப்படுவது இல்லை; மாணவர்

மிகுந்த ஊக்கத்துடன் இத்தொழிலேச் செய்துவரு கின்றனர்.

5. இங்ஙனம் செய்தித்தாள்களே விற்றுவரும் மாணவரை ஊக்கப்படுத்த ஆண்டுதோறும் அக்டோபர்த் திங்களில் ஒரு நாள் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த நாளில் சந்தாதாரர்கள் தம் வீட்டுக்குத் தாள் எடுத்து வரும் மாணவனுக்குத் தம் நன்றியை அறிவிப்பர்; அதற்கு அடையாளமாக அவன் செய்தித்தாளே வைக்கும் இடத்தில், "உனது பணியைப் பாராட்டுகிருேம்," என்று எழுதிய கடிதத்தை முன்னிரவிலேயே வைத்துவிடுவர். பலர் பரிசுகளும் உடன்வைப்பது வழக்கம். தெருக் கோடிகளில் தாள்களே விற்கும் மாணவர்க்கும் அவற்றை வாங்குவோர் இவ்வாறே மரியாதை செய்தல் வழக்கமாகும். செய்தித்தாள் நிலேயத்தாரும் பொதுநலக் கழகத்தாரும் இம் மாணவர்களே ஊர்வலமாக அழைத்துவந்து பரிசுகளும் விருந்துகளும் அளிப்பர். அந்நாட்டுக் கவர்னரும் நகரசபைத் தலேவரும் இம்மாணவர் தொண்டினேப் பாராட்டி வாழ்த்துக் கூறுவர்.

6. இம் மாணவர் நலனே எண்ணி அரசாங்கம் சட்டம் இயற்றியுள்ளது. அதன்படி சந்தாதாரர் வீடுகளில் தாள்களேச் சேர்ப்பவர் குறைந்த அளவு பன்னிரண்டு வயதுடையவராக இருத்தல் வேண்டும்; தெருக்களில் தாள்களே விற்பவர் பதினன்கு வயதினராக இருத்தல் வேண்டும்; இரவில் விற்பவர் பதினறு வயதினராக இருத்தல் வேண்டும். இம்மாணவர் மாவட்டச் செய்தித்தாள் இயக்குநரின்* மேற்பார்வையில் வேலே செய்கின்றனர். அந்த அதிகாரி பெற்றேரின்

* District Newspaper Manager.

இசைவு பெற்றே மாணவர்க்கு வேலை தருவர். தன் பாடங்களில் பின்னணியில் இருக்கும் மாணவனுக்கு இவ்வேலை தரப்படுவதில்லை.

7. இம் மாணவர் குறைந்த விலைக்குச் செய்தித் தாள்களை வாங்கிச் சிறிதளவு ஊதியம் வைத்து விற்கின்றனர். ஒவ்வொரு மாணவரும் இரண்டு திங்களுக்குள் சைக்கிள் வாங்கிக்கொள்கின்றனர்; பின்னர்த் தங்களுக்கு வேண்டும் உடைகளையும் நூல்களையும் பிற பொருள்களையும் திங்கள்தோறும் வாங்கிக்கொள்கின்றனர்; தங்கள் மேற்படிப்புச் செலவிற்காகப் பொருளைச் சேர்த்துவைக்கின்றனர்.

8. சந்தாதாரர் வீடுகளில் தாள்களைச் சேர்க்கும் மாணவர் நாள் ஒன்றுக்கு ஒரு மணி நேரம் செலவழிப்பது போதும். திங்களுக்கு ஒரு முறை அவர்களிடம் சென்று பணம் வசூலிக்கவேண்டும்; பழைய சந்தாதாரர் எக்காரணம் கொண்டேனும் செய்தித்தாள் வேண்டா எனின், புதிய சந்தாதாரரைச் சேர்க்க வேண்டும்.

9. இம் மாணவர் இத்தொழிற் பழக்கத்தால் வைகறையில் படுக்கைவிட்டு எழுதல், குறித்த காலத்தில் குறித்த வேலையைச் செய்தல், பிறரிடம் அடக்கத்துடனும் மரியாதையுடனும் பழகுதல், உண்மை பேசுதல், கணக்கை ஒழுங்காக வைத்துக்கொள்ளுதல் முதலிய நற்பழக்கங்களை இளமையிலேயே பெறுகின்றனர். இப்பழக்கங்களால் இவர்கள் கல்வி முடிந்தவுடன் எவ்விதத் துன்பமும் இன்றிப் பிற்கால வாழ்க்கையிற் புகுதல் எளிதாகின்றது. இவர்களை வேலையில் வைத்துக்கொள்ளவே பெரும்பாலான தொழிற்சாலை முதலாளிகளும் அலுவலக அதிகாரிகளும் விரும்புகிறார்கள்.

10. விபத்துக் காலத்தில் உதவி செய்வதிலும் இம் மாணவர் சிறந்து காணப்படுகின்றனர். தாங்கள் செல்லும்போது சாந்தாதாரர் வீடுகளில் தீப்பிடித்தல் போன்ற விபத்துக்கள் உண்டாகுமாயின், தாமே முன்னின்று ஆவன செய்வர்; சந்தாதாரர் நோயுற்றிருப்பின், உடனே மருத்துவரை அழைத்து வருவர்; இவை போன்ற பலவகை உதவிகளை மன மகிழ்ச்சியுடன் செய்துவருகின்றனர்.

அருஞ்சொற்பொருள்

சந்தாதாரர் - குறிப்பிட்ட காலத்திற்கு உரிய தொகையைச் செலுத்திச் செய்தித் தாளைப் பெறுபவர் என்பது இங்குப் பொருள். படி - பிரதி. ஈட்டுகின்றனர் - சம்பாதிக்கின்றனர். இயக்குநர் - மானேஜர். ஊதியம் - இலாபம்.

கேள்விகள்

1. செய்தித்தாள் விற்கும் மாணவன் காலையில் செய்யும் வேலை யாது?

2. அவன் ஞாயிற்றுக் கிழமையன்று செய்யும் வேலைகள் எவை?

3. அவன் செய்தித்தாள் விற்பதால் பெறும் இரண்டு நன்மைகள் யாவை?

4. மாணவர் செய்தித்தாள் விற்பதை அமெரிக்கர் இழிவாகக் கருதுவதில்லை.—ஏன்?

5. செய்தித்தாள் விற்கும் மாணவர் ஆண்டுக்கு ஒரு முறை எவ்வாறு சிறப்பிக்கப்படுகின்றனர்?

6. 12, 14, 16 வயதுடைய மாணவர்கள் செய்யும் வேலைகள் எவை?

7. இம்மாணவர் தமது வருவாயை எவ்வாறு செலவழிக்கின்றனர்?

8. இத்தொழிலால் மாணவர் பெறும் நலங்கள் யாவை?

9. இம்மாணவர் எதனிற் சிறந்து காணப்படுகின்றனர்?

பயிற்சி

1. அடக்கம், மரியாதை, சிறந்தது, சந்தாதாரர், மேற் படிப்பு, கிளைநிலையம், ஓரளவு—இவற்றை உங்கள் சொந்த வாக் கியங்களில் அமைத்துக் கூறுக :—

2. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துச் சொல்லுக :—

(1) இத் தொழிலால் இம் ——— பெறும் ——— இரண்டு.
(2) அமெரிக்காவில் இத் ——— இழிவாகக் ——— இல்லை.
(3) பலர் ——— உடன் வைப்பது ———.

3. மரியாதை, மேற்படிப்பு, அடக்கம், பாராட்டி, விடுவர்— எதிர்ச் சொற்களைக் கூறுக.

4. (1) பெட்டியில் பணம் இருக்கிறது.—இல்
வீட்டின்கண் திருடர் நுழைந்தனர்.—கண்
பையனிடம் சைக்கிள் இருக்கிறது.—இடம்
இல், கண், இடம்—ஏழாம் வேற்றுமை உருபுகள்.

குறிப்பு :—(i) தொண்டைமானில் அதியமான் வலியவன்.—இல் —ஐந்தாம் வே. உருபு ஒப்புப்பொருளில் வந்தது.

(ii) பெட்டியில் பணம் இருக்கிறது.—இல்
—ஏழாம் வே. உருபு இடப்பொருளில் வந்தது.

இவ்வேறுபாட்டினை நினைவில் வையுங்கள்.

(2) முருகன், பிள்ளை முதலிய இயற் பெயர்களை அழைக்கும்பொழுது மாறுதல் பெறும் பெயர்கள் எட்டாம் வேற் றுமைப் பெயர்கள் எனப்படும்.

முருகன்—முருக —'ன்' கெட்டது.
முருகன்—முருகா —ஈறு கெட்டு, ஈற்றயல் நீண்டது.
முருகன்—முருகனே—'ஏ' மிகுந்தது.
பிள்ளை —பிள்ளாய்—'ஐ' 'ஆய்'-எனத் திரிந்தது.

9. வாதாபிப் படையெடுப்பு

1. சங்கத் தமிழ் நூல்களின் இறுதிக்காலம் ஏறத் தாழக் கி. பி. 300 என்னலாம். அதற்குப் பிறகு



தொண்டைநாடும் சோழநாட்டின் பெரும்பகுதியும் **பல்லவர்** என்ற அரசமரபினர் ஆட்சிக்கு உட் பட்டது. அப்பல்லவருள் கி. பி. ஏழாம் நூற்றுண்டின்

தொடக்கத்தில் இருந்த மகேந்திரவர்மனும் அவனுக்குப் பின் வந்தவருமே வரலாற்றுப் புகழ் பெற்றவர். மகேந்திரன் தமிழகத்தில் மலைச் சரிவுகளைக் குடைந்து கோவில்களை அமைத்தவன். பல்லாவரம் (பல்லவபுரம்), மாமாண்டூர், சித்தன்ன வாசல், குடுமியான்மலை, திருச்சிராப்பள்ளி, மகேந்திரவாடி, தளவானூர், மண்டபப்பட்டு, சீயமங்கலம், வல்லம் என்னும் இடங்களில் மகேந்திரன் காலத்துக் குடைவரைக் கோவில்களைக் காணலாம்.

2. மகேந்திரவர்மன் வடமொழியிற் பெரும் புலவன். அவன் 'மத்தவிலாசப் பிரகசனம்' என்னும் வேடிக்கை நாடகம் ஒன்றை வடமொழியில் எழுதியுள்ளான். அவன் சிற்பம், ஓவியம், நடனம், இசை இவற்றில் புலமை உடையவன் என்பது அவனுடைய கல்வெட்டுக்களிலிருந்தும் அவன் அமைத்த குடைவரைக் கோவில்களில் உள்ள சிற்ப - ஓவியங்களிலிருந்தும் நன்கு புலனாகின்றது. அவன் குடிகளை அறநெறி தவறாது காப்பதிலும் வல்லவனாக இருந்தான். அதனால் குடிமக்கள் அவனைப் பாராட்டி வந்தனர்.

3. அக்காலத்திற் பல்லவரது ஆட்சி வடக்கில் ஏறத்தாழத் துங்கபத்திரைவரை பரவி இருந்தது. துங்கபத்திரைக்கு வடக்கே விந்திய மலைவரை உள்ள நிலப்பகுதியைச் **சாளுக்கியர்** என்ற மரபினர் ஆண்டுவந்தனர். அவருள் **இரண்டாம் புலிகேசி** என்பவன் பெரிய போர் வீரன். அவன் மகேந்திரவர்மன் காலத்தில் **வாதாபியைத்** தலைநகராகக் கொண்டு சாளுக்கிய நாட்டை ஆண்டுவந்தான். அவன் கிருஷ்ணை, கோதாவிரி ஆறுகட்கு இடைப்பட்ட கடற்கரைப் பகுதியைக் கைப்பற்றி, அப்

பகுதிக்குத் தன் தம்பியை அரசனாக்கினான். அப் பகுதி கீழைச் சாளுக்கிய நாடு எனப்படும்; அதனை ஆண்டவர் 'கீழைச் சாளுக்கியர்' எனப்பட்டனர்.

4. இரண்டாம் புலிகேசியின் காலத்தில் வட இந்தியாவை **ஹர்ஷன்** ஆண்டுவந்தான். அவன் தன் செல்வாக்கை விந்திய மலைக்குத் தென்பாலும் பரப்ப விரும்பிப் படையெடுத்தான். பெருவீரனான புலிகேசி அவனைப் புறங்காட்டி ஓடச் செய்தான். இத்தகைய பெருவீரன் எக்காரணம் கொண்டோ பல்லவ நாட்டின்மீது படையெடுத்தான்; பல்லவர் கோநகரமாகிய காஞ்சீபுரத்தையும் தாண்டித் தெற்கே உறையூர்வரை சென்று மீண்டான். அவன் மீண்டு வருகையில், மகேந்திரவர்மன் திடீரென அவனைத் தாக்கித் துரத்தினான். பல்லவ நாட்டிற்குள் அகப் பட்டுக்கொண்ட புலிகேசி ஒருவாறு தப்பித் தன் நாடு சென்றான். இப்படையெடுப்பினால் புலி கேசிக்கு நன்மை ஏதும் விளையவில்லை. அதனால் அவன் பல்லவ நாட்டைத் தாக்கத் தக்க சமயத்தை எதிர்பார்த்திருந்தான்.

5. மகேந்திரவர்மன் காலமானதும் அவன் மகனான **நரசிம்மவர்மன்** அரியணை ஏறினான். அவன் சிறந்த போர்வீரன்; பகைவரது படை யெடுப்பைச் சமாளிக்கத் தக்க பெரும்படையைத் தயாரித்தான்; தனது தந்தையைப் போலவே தனது செங்கோற் சிறப்பினால் குடிமக்களைத் தன்வசப் படுத்தினான்.

6. நரசிம்மவர்மன் அரசனாகிச் சில ஆண்டுகள் கழிந்தன. கி. பி. 642-இல் இரண்டாம் புலிகேசி மிகப் பெரிய படையுடன் பல்லவ நாட்டின்மீது பாய்ந்தான். பகைவனைத் தனது நாட்டிற்குள் நெடுந்தொலை வர

விட்டு, பின்னர் அவனை நாற்புறங்களிலும் சூழ்ந்து கொண்டு கடும்போரிட்டு முறியடிக்கும் முறையை நரசிம்மவர்மன் மேற்கொள்ள விரும்பினான். அவனது சூழ்ச்சியை அறியாத புலிகேசி, பல்லவ நாட்டின் எல்லைப் புறத்தைக் காத்துவந்த பல்லவ வீரர்களை முறியடித்துப் பல்லவ நாட்டிற்குள் புகுந்தான்; எதிர்ப்பு மிகுதியாக இல்லாமையால், பல்லவனிடம் போதிய படைகள் இல்லை என்று கருதி, முன் போலவே பல்லவனது தலைநகரான கஞ்சியை நெருங்கினான்.

7. புலிகேசி காஞ்சியை நெருங்கியவுடன், முன் ஏற்பாடாகப் பல்லவன் நாற்புறங்களிலும் மறைவாக வைத்திருந்த படைவீரர்கள் சாளுக்கியரைச் சூழ்ந்துகொண்டனர். புலிகேசி அப்பொழுதுதான் தன் தவற்றை உணர்ந்தான்; எனினும் கூண்டில் அகப்பட்ட புலிபோலச் சீறிப் பாய்ந்தான். போர் கடுமையாக நடைபெற்றது. பெருவீரனான நரசிம்மவர்மன் புலிக்கூட்டத்திற் சிங்கம் பாய்வதைப் போலப் பகைவர் கூட்டத்திற் பாய்ந்து போரிட்டான். அவனுடைய வீரர்கள் நாட்டுப் பற்றுக் கொண்டவராய், உயிரைத் துரும்பென மதித்துப் போரிட்டனர். போர் பல நாட்கள் நடைபெற்றன. சாளுக்கியர் பல்லவ நாட்டில் அகப்பட்டுக்கொண்டமையால் அவர்கட்கு உதவியாகப் புதிய படைகளோ, உணவுப் பொருள்கள் முதலியனவோ வரக்கூடவில்லை. இக்குறையினாலும் போரின் கடுமையாலும் சாளுக்கியர் நிலை தளர்ந்தனர். புலிகேசி தன் நாடு நோக்கி ஓடத் தொடங்கினான்.

8. உடனே நரசிம்மவர்மனது ஆணைப்படி, அவனது சேனைத் தலைவராகிய **பரஞ்சோதியார்**

புதிய படையைக் கொண்டு, புறங்காட்டிய புலி கேசியைத் துரத்தினுர்; பல்லவநாட்டு எல்லேவரை அங்கங்கே சாளுக்கியரைத் தாக்கி முறியடித்தார். அத்துடன் அவர் விடவில்லே. அவர் தம் வீர ருடன் சாளுக்கிய நாட்டிலும் புகுந்தார்; அவரது தலேநகரான வாதாபியில் புலிகேசியை முற் றிலும் முறியடித்தார்; வாதாபியைக் கைப்பற்றினுர்; சாளுக்கிய அரண்மனேக்குட் புகுந்து விலே உயர்ந்த பொருள்களே எடுத்துக்கொண்டார்; வாதாபியில் பல்லவ வீரர் பல்லாயிரவரை வைத்துவிட்டு, எஞ்சிய வீரருடன் காஞ்சி மாநகரை அடைந்தார். அவரது ஆணேயின்படி கொண்டுவரப்பட்ட சாளுக் கியரது செல்வமும் பகடுகளும் பரிகளும் நரசிம்ம வர்மன் முன்னிலேயில் வைக்கப்பட்டன. வாதாபியின் வீழ்ச்சியைக் கேட்ட பல்லவ மன்னன் அடக்க முடியாத மகிழ்ச்சிப் பெருக்கினுல் எழுந்து, பரஞ் சோதியாரை மார்புறத் தழுவிக்கொண்டான்.

9. இப்பரஞ்சோதியார் யாவர்? இவரே சைவ அடியார் அறுபத்து மூவருள் ஒருவரான **சிறுத் தொண்டர்**. இவரது வாதாபிப் படையெடுப்பை நமக்குத் தெரிவித்தவர் பெரிய புராணம் பாடிய **சேக்கிழார்** ஆவர்.

"மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாபித்
தொன்னகரம் துகளாகத் துளேநெடுங்கை வரையுகைத்துப்
பன்மணியும் நிதிக்குவையும் பகட்டினமும் பரித்தொகையும்
இன்னனஎண் ணிலகவர்ந்தே இகலரசன் முன்கொணர்ந்தார்."

என்பது அச்செய்யுள்.

அருஞ்சொற்பொருள்

வரலாறு - சரித்திரம். பல்லாவரம், மாமண்டூர், வல்லம் - செங்கற்பட்டு மாவட்டத்தில் இருப்பவை. குடுமியான்மலே,

சித்தன்னவாசல் - புதுக்கோட்டைச் சீமையில் உள்ளவை. மகேந்திரவாடி - அரக்கோணத்திற்குப் பக்கத்தில் உள்ளது. சீயமங்கலம் - வந்தவாசிக்குப் பக்கத்தில் உள்ளது. தளவானூர், மண்டபப்பட்டு - தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ளவை. குடை - குடையப்பெற்ற. வரை - மலை. புறம் - முதுகு. கோநகரம் - தலைநகரம். அரியணை - சிங்க ஆசனம். செங்கோல் - நேர்மையுள்ள ஆட்சி × கொடுங்கோல். சூழ்ச்சி - தந்திரம். தண்டு - சேனை. வடபுலம் - வடநாடு. தொல் - பழைய. துளை நெடுங்கைவரை - யானை. உகைத்து - செலுத்தி. பகடு - யானை. பரி - குதிரை. இகல் அரசன் - சாளுக்கியர்க்குப் பகையரசனான (தம் மன்னவனான) நரசிம்மவர்மன். போதிய - போதுமான.

கேள்விகள்

1. குடைவரைக் கோவில் என்பது யாது?
2. மகேந்திரன் காலத்துக் குடைவரைக் கோவில்களை எங்குக் காணலாம்?
3. அவன் எவ்வெக் கலைகளில் வல்லவனாக இருந்தான்?
4. இரண்டாம் புலிகேசியின் வீரச் செயல்கள் எவை?
5. அவன் மகேந்திரனிடம் எவ்வாறு தோற்றான்?
6. நரசிம்மவர்மன் மேற்கொண்ட போர்முறை யாது?
7. அம்முறை அவனுக்கு எவ்வாறு வெற்றி அளித்தது?
8. பரஞ்சோதியார் செய்த வீரச் செயல் யாது?
9. வாதாபிப் படையெடுப்பைப் பரஞ்சோதியாரே நடத்தியவர் என்பதை நமக்குத் தெரிவித்தவர் யாவர்? அவர் கூறியுள்ள செய்தி யாது?

பயிற்சி

1. இறுதி, புகழ், அறநெறி, பரவி, ஏறினான், செங்கோல், போதிய, மறைவாக, புறம், உயர்ந்த—எதிர்ச்சொற்களைச் சொல்லுக.

2. பொருத்தமான சொற்களைச் சேர்த்துக் கூறுக :—

(1) பல்லவர்	ஹர்ஷனைத்	வாதாபி
(2) மகேந்திரன்	தலைநகரம்	வென்றான்
(3) சாளுக்கியர்	புலிகேசியை	காஞ்சீபுரம்
(4) புலிகேசி	கோநகரம்	தோற்கடித்தான்

3. வென்றான் — வினைமுற்று.
வென்று (மீண்டார்)—வினையெச்சம்
வென்ற (பரஞ்சோதியார்)—பெயரெச்சம்
நீங்கள் இவற்றை முதற் படிவத்திலேயே அறிந்திருக்கிறீர்கள்.

4. (1) பரஞ்சோதியார் புலிகேசியை வென்றார்.—'வென்றார்' என்பது பரஞ்சோதியார் செய்த வினை; ஆதலால் செய்வினை எனப்படும்.

(2) புலிகேசி பரஞ்சோதியாரால் வெல்லப்பட்டான்.—இவ்வாறு 'படு' அல்லது 'பட்டு' என்னும் துணை வினை பெற்று வருவது செயப்பாட்டு வினை ஆகும்.

இப்பாடத்தில் வந்துள்ள செய்வினை, செயப்பாட்டு வினைகளுக்கு ஒவ்வோர் உதாரணம் தருக.

5. (1) புலிகேசி காஞ்சியை நெருங்கினான்.—இதில் 'நெருங்கினான்' என்பது புலிகேசி தானே செய்த வினை; ஆதலால் தன்வினை எனப்படும்.

(2) பல்லவன் புலிகேசியை நெருக்கினான்.—புலிகேசி நெருங்குமாறு பல்லவன் செய்தான் எனப்பொருள் படுவதால், 'நெருக்கினான்' என்பது பிறவினை.

தன்வினை	பிறவினை
செய்	செய்வி
பிற	பிறப்பி
போ	போக்கு
பாய்	பாய்ச்சு
ஓடு	ஓட்டு

இப்பாடத்திலிருந்து தன்வினை—பிறவினைகளுக்கு ஒவ்வோர் உதாரணம் தருக.

10. விவேகானந்தரின் பொன்மொழிகள்

1. நீங்கள் அனைவரும் பெருஞ் செயல்களைச் செய்யப் பிறந்தவரே என்னும் நம்பிக்கை கொள்ளுங்கள்; வானத்தில் முழங்கும் இடிக்கும் அஞ்ச வேண்டா; நிமிர்ந்து நின்று வேலை செய்யுங்கள்.

2. பெருஞ் செயல்கள் யாவும் வன்மை வாய்ந்த இடையூறுகள் வாயிலாகவே கைகூடுகின்றன. ஆதலால் இடையூறுகளைக் கண்டு அஞ்சாது ஆண்மையோடு முயற்சியை மேற்கொள்க; முன் செல்லுக; வரம்பிலா வலிமை, ஊக்கம், உணர்ச்சி, பொறுமை உங்கட்கு வேண்டும். நீங்கள் அந்நிலையில்தான் பெரிய செயல்களைச் சாதித்தல் இயலும்.

3. பலம் இன்மையே துயரத்திற்குக் காரணம். பலமின்மையே தீயன செய்தற்குக் காரணம். பொய்யும் திருடும் கொலையும் பிற பாவச் செயல்களும் ஒருவனிடம் இருப்பதற்கு அவனது பலக்

குறைவே காரணமாகும். ஆதலால் பலவீனத்தை உதறித் தள்ளுபவனே உலகில் ஆண்மையோடு வாழ முடியும்.

4. உங்களுக்குவேண்டும் ஒரே பொருள் **பலமே.** எழுந்து நில்லுங்கள்; பலமுடையவர் ஆகுங்கள்; முழுப் பொறுப்பையும் உங்கள்மீது சுமத்திக் கொண்டு வேலை செய்யுங்கள். உங்களுக்கு வேண்டும் முழுப் பலமும் முழுத் துணையும் உங்களிடமே இருக்கின்றன. ஆதலால் நீங்களே உங்களது எதிர்கால வாழ்க்கையை வகுத்துக்கொள்ளுங்கள்.

5. மலைபோல் உயர்ந்த தடைகளையும் தாண்டிச் செல்லும் மனவுறுதி உங்களிடம் இருக்கவேண்டும். உலகம் முழுவதும் உங்களை எதிர்த்து நிற்பினும், நீங்கள் சரி என்று நினைப்பதைச் செய்யும் மனத் துணிவு வேண்டும். உங்கள் குடும்பத்தவரே உங்களை எதிர்ப்பினும், உங்கள் செல்வமே அழிவதாயினும், உங்கள் புகழ் போவதாயினும், உங்கள் கொள்கையை நழுவவிடலாகாது. இத்தகைய மனவுறுதி உங்களிடம் இருப்பின், நீங்கள் வாழ்க்கையில் வெற்றி பெறுவீர்கள்.

6. எவரது உள்ளம் ஏழை மக்கள் நிலையை எண்ணி வருந்துகிறதோ, அவரையே நான் 'மகாத்துமா' என்பேன்.

7. கீழ்ப்படிதலை அறிபவன் கட்டளையிடுதலை அறிவான். முதலில் கீழ்ப்படிதலை அறியுங்கள். சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை. அதற்கு அடிப்படை கீழ்ப்படிதலே ஆகும்.

8. ஒவ்வொரு கடமையும் தூய்மையானது. கடமையைச் செய்தல், கடவுள் வழிபாட்டினும் மிக உயர்ந்தது.

9. பொருமையையும் அகந்தையையும் விட்டு விடுக. பிறர்பொருட்டு உழைக்கக் கற்றுக்கொள்க. நமது நாட்டிற்குத் தேவையானது இதுவே. பிறர்க்கு உழைப்பதே பேரின்பம்.

10. நாம் நமது வழிபாட்டில், கடவுளை நம் எல்லோருக்கும் தந்தையாக ஒப்புக்கொள்கிறோம். ஆனால் நமது அன்றாட வாழ்க்கையில் மற்றவரை நம் உடன்பிறந்தவராகக் கருதி நடப்பதில்லை. இந் நிலையில் நமது வழிபாட்டில் நாம் பெறும் பயன் யாது? நன்கு சிந்தித்துப் பாருங்கள்.

11. புறங்கூறுதல் பெருந் தவறு. புறங்கூறிய பிறகு அவரைப் பார்த்தவுடன் அன்புகொண்டவரைப் போலப் பழகுதல் அதனினும் பெருந்தவறு. பிறர் குற்றங்களை மறப்பதே பெருந்தன்மை. அதுவே சமூகத்தில் ஒற்றுமையை வளர்க்கும்.

12. பொருளும் பெயரும் நிறைந்த பயனை அளியா; கல்வியும் புகழும் தாரா. நிறைந்த பயனை அளிக்கவல்லது **அன்பு** ஒன்றே. துன்பங்கள் மலை போலக் குவியினும் அம்மலையை ஊடுருவிச் செல்லத் தக்க கூரிய கருவி **ஒழுக்கமே.** ஆதலின் அன்பையும் ஒழுக்கத்தையும் போற்றிப் பாதுகாப்பது உங்கள் பெருங் கடமையாகும்.

அருஞ்சொற்பொருள்

வாய்ந்த - பொருந்திய. வாயிலாக - மூலமாக. வரம்பு - எல்லை. இலா - இல்லாத. பலம் + ஈனம் - பலக் குறைவு. தூய்மை- பரிசுத்தம். அகந்தை - கருவம். புறங்கூறுதல் - ஒருவன் இல்லாத இடத்தில் அவனைப் பற்றி இழிவாகப் பேசுதல். இன்மை- இல்லாமை × உண்மை. கொள்கை - உயர்ந்த குறிக்கோள்.

கேள்விகள்

1. பெருஞ்செயல்களைச் செய்து முடித்தல் எப்பொழுது இயலும் ?

2. பலவீனத்தின் குறைபாடுகள் யாவை ?

3. நாமே நமது எதிர்கால வாழ்க்கையை வகுத்துக்கொள்வது எப்படி ?

4. 'நீங்கள் வாழ்க்கையில் வெற்றி பெறுவீர்கள்.'—எப்பொழுது ?

5. யாரை 'மகாத்துமா' என்று கூறலாம் ?

6. கீழ்ப்படிதலைப்பற்றி விவேகானந்தர் யாது கூறியுள்ளார் ?

7. எது கடவுள் வழிபாட்டினும் மிக உயர்ந்ததாகும் ?

8. 'நமது நாட்டிற்குத் தேவையானது இதுவே.'—'இது' எது ?

9. 'நன்கு சிந்தித்துப் பாருங்கள்.'—எதனை ?

10. 'அதுவே சமூகத்தில் ஒற்றுமையை வளர்க்கும்.'—எது ?

11. அன்பு, ஒழுக்கம் பற்றி விவேகானந்தர் கூறியுள்ளவை யாவை ?

12. இப்பொன்மொழிகளைப் பற்றி உன் கருத்து யாது ?

பயிற்சி

1. இடையூறு, நம்பிக்கை, பலமின்மை, வாழ்க்கை, கொள்கை, மகாத்துமா, கீழ்ப்படிதல், உழைக்க, வழிபாடு, பெருந்தன்மை.—இவற்றை உங்கள் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்லுக.

2. தவறு, இன்பம், ஒற்றுமை, உயர்ந்தது, அடிப்படை, பொறுமை, பலம், துணிவு, குறைவு—எதிர்ச்சொற்களைக் கூறுக.

3. வரம்பிலா, மனத்துணிவு, மனவுறுதி, முழுத்துணை, அந்நிலை, பாவச்செயல், முழுப்பொறுப்பு, அடிப்படை—இவற்றைப் பிரித்துக் காட்டுக.

4. கற்றுக்கொள் — சாதாரண ஏவல்வினை.
கற்றுக்கொள்க — மரியாதை ஏவல்வினை.

சாதாரண ஏவல்	மரியாதை ஏவல்
வா	வருக
நில்	நிற்க
கல்	கற்க
செல்	செல்க
வாழ்	வாழ்க

இவற்றை நன்கு நினைவில் வையுங்கள். மரியாதை ஏவல் வியங்கோள் வினைமுற்று எனப்படும்.

5. (1) நீங்கள் வெற்றி பெறுவீர்கள்.—இதில், 'பெறுவீர்கள்' என்பது பயனிலை; வினைமுற்று. 'எதனைப் பெறுவீர்கள்?' என்று கேட்டால், 'வெற்றி' என்பது பதிலாகிறது. இது செயப்படுபொருள். எனவே, 'பெறுவீர்கள்' என்னும் வினை செயப்படுபொருளைப் பெற்றுவரும் வினையாகும். இவ்வாறு செயப்படுபொருளைப் பெற்றுவரும் வினை செயப்படுபொருள் குன்றாவினை எனப்படும்.

படித்தான், எடுத்தார், பார்க்கிறது, கடிக்கின்றன.—செ. குன்றாவினைகள்.

(2) நீங்கள் நிற்கிறீர்கள்.—இதில் 'நிற்கிறீர்கள்' என்பது பயனிலை; வினைமுற்று. 'எதனை நிற்கிறீர்கள்?', 'யாரை நிற்கிறீர்கள்?' என்று கேட்டால், பதில் இல்லை. அதாவது, 'நிற்கிறீர்கள்' என்னும் வினைக்குச் செயப்படுபொருள் இல்லை. இவ்வாறு செயப்படுபொருளைப் பெறாத வினைச்சொல் செயப்படுபொருள் குன்றியவினை எனப்படும்.

நின்றான், வருகிறார், ஓடுகிறது, பாய்கின்றன.—செ. குன்றிய வினைகள்.

இப்பாடத்திலிருந்து ஏவல், வியங்கோள், செ. குன்றியவினை, செ. குன்றாவினைகட்கு ஒவ்வோர் உதாரணம் தருக.

11. சேக்கிழார்

1. **சேக்கிழார்** என்பவர் பெரியபுராணம் என்னும் பெரிய நூலைப் பாடினவர் என்பது முன்னொரு பாடத்திற் கூறப்பட்டது அன்றோ? ‘அப் புலவர் எந்த ஊரினர்? எந்த மரபினர்? என்ன அலுவலில் இருந்தார்? அவர் காலம் யாது? அவர் பெரிய புராணத்தை எவ்வாறு பாடினர்? அவருடைய சிறப்பியல்புகள் எவை?’ என்பன போன்ற வினாக் களுக்கு இப்பாடத்தில் விடை காண்போம்.

சேக்கிழார்

2. சென்னைக்கு ஏறத்தாழப் பதினான்கு கல் தொலையில் **குன்றத்தூர்** என்னும் சிற்றூர் இருக்கின் றது. அஃது ஒரு சிறிய குன்றத்தைத் தன் அகத்தே பெற்றிருத்தலால் ‘குன்றத்தூர்’ எனப் பெயர் பெற்றது. இன்று அவ்வூர் திருநாகேசுவரம், நத்தம்

என்னும் இரு சிற்றூர்களாக இருக்கின்றது. ஆனால் சேக்கிழார் வாழ்ந்த கி. பி. 12-ஆம் நூற்றுண்டில் அஃது ஒரே ஊராகக் காட்சி அளித்தது. அவ்வூர் செம்பரம்பாக்கம் ஏரிப் பாய்ச்சலால் வளமுற்றுள்ளது.

3. அப் பழம்பதியில் கி. பி. 12-ஆம் நூற்றுண்டில் வேளாளர் பலர் வாழ்ந்துவந்தனர். அவர்கள் பல குடிகளைச் சேர்ந்தவர்கள். அக்குடிகளுள் '**சேக்கிழார் குடி**' என்பது ஒன்று. அக்குடியிற் பிறந்தவரே பெரிய புராணம் பாடிய சேக்கிழார் என்பவர். அவர் தம்பியார் **பாலருவாயர்** என்பவர்.

4. சேக்கிழார் சைவ வேளாளர் ஆதலின் இளமை முதலே தேவாரம், திருவாசகம் முதலிய சைவ நூல்களைக் கற்கலானுர்; தக்க ஆசிரியரை அடுத்துத் தமிழ் இலக்கண இலக்கிய நூல்களையும் கற்ருர்.

> "கற்க கசடறக் கற்பவை; கற்றபின்
> நிற்க அதற்குத் தக."

என்ற திருவள்ளுவர் பொன்மொழிப்படி அறிவுக் கல்வியும் சமயக் கல்வியும் கற்ற பின்னர், அவர் தமது சைவ ஒழுக்கத்திற்கு ஏற்ப நடக்கலானுர்; காலையில் எழுந்து நீராடுதல், சிவ பூசை செய்தல், பயிர்த் தொழிலைக் கவனித்தல், ஓய்வு நேரங்களில் தமிழ் நூல்களையும் சமய நூல்களையும் படித்தல், கோவிலுக்குச் சென்று வழிபாடு செய்தல் முதலிய நாட் கடமைகளைத் தவருது செய்துவந்தார். அவர் திருக்குறளின் தனிச் சிறப்பை நன்கு உணர்ந்து, அந்நூலை ஐயந் திரிபறக் கற்ருர். அவருடைய பெரும்புலமை

யையும் சிறந்த ஒழுக்கத்தையும் கண்ட ஊரார் அவரை நன்கு மதிக்கலாயினர்.

5. சேக்கிழார் காலத்தில் சோழப்பெருநாட்டுப் பேரரசனாக இருந்தவன் **இரண்டாம் குலோத் துங்கன்** என்பவன். அவன் சைவ சமயத்தில் அழுந்திய பற்று உடையவன்; ஒட்டக்கூத்தர் என்ற பெரும் புலவரிடம் தமிழ் நூல்களைக் கற்றவன்; கவி பாடும் திறமை பெற்றவன். அவன் செங்கோல் மன்னன்; புலவர்களுடன் பொழுதுபோக்குவதையே இன்பமாகக் கொண்டவன். அவனும் தமிழ் அறிஞன் ஆதலால், தனது ஆட்சிக்கு உட்பட்ட தொண்டை மண்டலம், சோழ மண்டலம், பாண்டி மண்டலம், கொங்கு மண்டலம் முதலிய பல பகுதிகளிலிருந்த புலவர்களையும் வரவேற்று அளவளாவினன்; அவரவர் தகுதிக்கேற்ற பரிசிலை அளித்து மகிழ்ந்தான்.

6. அப்பேரரசனுக்குப் பழக்கமான தொண்டை நாட்டுப் புலவர்கள் சேக்கிழாருடைய பெரும்புலமை யையும் சைவப் பற்றையும் சீரிய ஒழுக்கத்தையும் எடுத்துக் கூறினர். அரசன் அவரைக் காண விரும்பி, ஓலை போக்கினன். சில நாட்களுக்குள் சேக்கிழார் சோழர் தலைநகரான கங்கைகொண்ட சோழபுரத்தை அடைந்தார்; அரசனைக் கண்டார். மன்னன் அவரது முகப்பொலிவைக் கண்டான்; தன்னை அறியாது அவரிடம் பற்றுக்கொண்டான். அவரை முகமன் கூறி வரவேற்றுப் பேசினன்; அவருடைய பெரும் புலமையைச் சிறிது நேரத்திற்குள் அறிந்து மகிழ்ந் தான். அவரைச் சில நாட்கள்வரை தன்னுடன் இருக்குமாறு வேண்டினன்.

7. குலோத்துங்கன் சேக்கிழாருடன் அரசியல் சம்பந்தமான பல செய்திகளைப் பேசி, அவரது

அரசியல் அறிவை அறிந்தான்; சைவ நூல்களில் அவருக்கு இருந்த புலமையை உணர்ந்தான்; அவரது நாட்டுப் பற்றையும் குடிமக்களிடம் அவருக்கு இருந்த அன்பையும் கண்டான்; அவரை விட்டுப் பிரிய விரும்பாது, அவரைத் தன் முதல் அமைச்சராக இருக்கும்படி வேண்டினான். சேக்கிழாரும் அவனது வேண்டுகோளுக்கு இசைந்தார். அரசன் அவருக்கு 'உத்தம சோழப் பல்லவராயர்' என்ற பட்டத்தை அளித்தான்.

8. இக்காலத்தில் அமைச்சர்கள் தங்கள் ஆட்சிக்கு உட்பட்ட நாட்டைச் சுற்றிப் பார்க்கின்றனர் அல்லவா? அங்ஙனம் சுற்றிப் பார்த்து மக்களுடைய குறைகளை உணர்ந்து ஆவன செய்தல் அமைச்சர் கடமையாகும். இக்கால அமைச்சரைப் போலவே சேக்கிழாரும் சோழப் பெருநாடு முழுவதையும் சுற்றிப் பார்த்தார். அவர் சிறந்த சிவ பக்தர் ஆதலால் பாடல் பெற்ற சிவன் கோவில்களை எல்லாம் தரிசித்தார்; அங்கங்கு இருந்து சிவத் தொண்டு செய்து மறைந்த அடியார் வரலாறுகளை அவ்வூராரைக் கேட்டுணர்ந்தார்; கோவில்களில் இருந்த அடியார் திருவுருவங்களைக் கவனித்தார்; அடியார்களைப் பற்றிய கல்வெட்டுக்களைப் படித்தார்; கோவில் கோபுரத்திலும் சுவர்களிலும் செதுக்கப்பட்டிருந்த அடியார் வரலாற்று நிகழ்ச்சிகளைக் குறிக்கும் சிற்பங்களைக் கூர்ந்து நோக்கினர்; இவ்வாறு தாம் கண்டவற்றையும் கேட்டவற்றையும் குறித்துக்கொண்டார்.

9. சிவனடியார் அறுபத்து மூவரைப் பற்றிச் சேக்கிழார் குறிப்புக்களைச் சேர்ப்பதைச் சோழ வேந்தன் கேள்வியுற்றான்; அளவற்ற மகிழ்ச்சி கொண்டு, அவரைப் பெரியதோர் புராணம் பாடும்படி வேண்டிக்

கொண்டான். சேக்கிழார் தில்லைப்பதிக்குச் சென்று கூத்தப் பெருமானை வணங்கினார்; அத்திருப்பதியிலேயே தங்கியிருந்து நாயன்மார் வரலாறுகளைப் பெரிய நூலாகப் பாடி முடித்தார். அந்நூல் ஏறக்குறைய 4250 செய்யுட்களைக் கொண்ட பெரிய நூலாகி முடிந்தது. அந்நூலுக்குத் தேவாரம் முதலிய அருட் பாடல்களும் சேக்கிழார் தொகுத்த பல விவரங்களுமே மூலமாகும்.

10. தில்லை ஆயிரக்கால் மண்டபத்தில் அரசன் முன்னிலையில் நூல் அரங்கேற்றம் செய்யப்பட்டது. தமிழ்ப் புலவர்கள், சைவ சமயப் பெரியார்கள், சிற்றரசர்கள் முதலியோர் சேக்கிழாரது தொண்டினைப் பாராட்டினர். அரசன் அவரையும் பெரிய புராணத்தையும் யானைமீது ஏற்றித் தான் உடனிருந்து சேக்கிழாருக்குக் கவரி வீசினான்; பெரிய புராணத்தைப் பாடிய அப்பெரும் புலவர்க்குத் 'தொண்டர் சீர் பரவுவார்' என்ற பட்டத்தையும் பல உயர்ந்த பரிசுகளையும் அளித்து மகிழ்ந்தான்.

11. சேக்கிழார் சோழ நாட்டுச் சிவத் தலமாகிய திருநாகேசுவரத்தில் ஈடுபாடு கொண்டவர். ஆதலால் அவர் தம்மூரில் அது போன்ற கோவிலைக் கட்டி, அதற்குத் 'திருநாகேசுவரம்' எனப் பெயரிட்டார். அக்கோவில் உள்ள குன்றத்தூர்ப் பகுதியே இன்று 'திருநாகேசுவரம்' என்று கூறப்படுகின்றது.

அருஞ்சொற்பொருள்

அலுவல் - வேலை. சிறப்பியல்புகள் - குண நலங்கள். பதி - ஊர். தேவாரம் - திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர் என்னும் சைவப் பெரியார்கள் பாடிய பாடல்களின் தொகுதி. திருவாசகம் - மாணிக்கவாசகர் பாடியது. ஐயம் - சந்தேகம். அற - நீங்க. தக - தக்கபடி. நிற்க - நிற்கக்கடவாய். சமயம் - மதம்.

திரிபு - ஒன்றை மற்றொன்றாக நினைத்தல். அளவளாவினான் - கலந்து பேசினான். சீரிய - சிறந்த. பொலிவு - ஒளி. முகமன் - உபசாரவார்த்தை. தில்லையம்பதி - சிதம்பரம். நூல் அரங்கேற்றம் - நூலை அறிஞர் முன்னிலையிற் படித்து அவர்கள் பாராட்டினைப் பெறுதல். பரவுவார் - பாராட்டுபவர்.

கேள்விகள்

1. குன்றத்தூர்—பெயர்க் காரணம் யாது ?
2. சேக்கிழார் எந்தக் குடியிற் பிறந்தவர் ?
3. சேக்கிழார் கற்ற நூல்கள் எவை ?
4. சேக்கிழார் குன்றத்தூரில் எவ்வாறு வாழ்ந்துவந்தார் ?
5. இரண்டாம் குலோத்துங்கன் புலவர்களிடம் எப்படி நடந்துவந்தான் ?
6. அரசன் சேக்கிழாரை முதல் அமைச்சராக நியமிக்கக் காரணம் என்ன ?
7. சேக்கிழார் நாயன்மார் வரலாற்றுச் செய்திகளை எவ்வாறு தொகுத்தார் ?
8. சேக்கிழார் பெரிய புராணத்தை எங்கிருந்து பாடினார் ?
9. அவர் அரசனால் எவ்வாறு சிறப்பிக்கப் பெற்றார் ?
10. குன்றத்தூரில் ‘திருநாகேசுவரம்’ ஏற்படக் காரணம் யாது ?

பயிற்சி

1. ஏரிப்பாய்ச்சல், ஐயமற, கசடற, பொன்மொழி, வழிபாடு, தனிச்சிறப்பு, பெருநாடு, தகுதிக்கேற்ற, பொலிவு - இவற்றை உங்கள் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்லுக.

2. அவரை + காண, பற்று + கொண்டான், தனி + சிறப்பு, நூலாக + பாடி, அ + ஊரார், சுற்றி + பார்த்து, அளவு + அற்ற—இவற்றைச் சேர்த்துப் படிக்கவும்.

3. வரலாற்று நிகழ்ச்சி, அத்திருப்பதி, சிவனடியார், ஐயமற, அறிவுக்கல்வி, நாட்கடமை, முகப்பொலிவு—இவற்றைப் பிரித்துக் காட்டுக.

4. குன்றத்தூர்—சேக்கிழார் குடி—கல்வி கற்றல்—சோழனோடு பழக்கம் உண்டாதல்—முதலமைச்சர் பதவி—பெரிய புரா

ணத்துக்குரிய செய்திகளைத் திரட்டல்—நூலைப் பாடி அரங்கேற்றல்—அரசன் சிறப்புச் செய்தல் : இக்குறிப்புக்களைக் கொண்டு இப் பாடப் பொருளை ஒரு கட்டுரையாக எழுதுக.

5. (1) சேக்கிழார் பெரிய புராணம் பாடினூர்.

(2) பாடினவரை அரசன் வரவேற்ருன்.

(3) பாடினவருக்கு மரியாதை செய்தான்.

'பாடினூர்' என்பது வினைமுற்று; 'பாடுதல்' என்பது வினை. அவ் வினையால் சேக்கிழார் 'பாடினவர்' என்னும் புதிய பெயரைப் பெற்ருர். எனவே சேக்கிழார்க்கு அவர் செய்த வினையால் அவரை அணைந்த பெயர் 'பாடினவர்' என்பது ஆகும். இவ்வாறு ஒருவரை அவர் செய்யும் வினையால் அணையும் பெயர், 'வினையால் அணையும் பெயர்' எனப்படும்.

திருடினவனைப் பிடித்தான், பிடித்தவனை அடித்தான், எழுந்தவனை அழைத்தார், நிற்பவனை அழையாதே—இவற்றுள் திருடினவனை முதலியன வினையாலணையும் பெயர்கள்.

இதுவரை படித்த பாடங்களிலிருந்து வினையாலணையும் பெயர்கட்கு நான்கு உதாரணங்கள் தருக.

6. இப்பாடத்திலிருந்து செய்வினை, செயப்பாட்டுவினை, செ. குன்ருவினை, செ. குன்றிய வினைகட்கு ஒவ்வோர் உதாரணம் தருக.

7. இப்பாடத்து முதல் இரண்டு பாராக்களில் உள்ள அறு வகைப் பெயர்களைக் கூறுக.

8. மூன்ரும் பாராவில் உள்ள வாக்கியங்களில் இருக்கும் எ. ப. செ. சொல்லுக.

9. பிழைகளைத் திருத்துக :—

திருடண், கழ்வன், பாடிநார், சேக்கிளார், பெறிய புரானம், விணையாலனைந்த பெயற்.

12. பாண்டித்துரைத் தேவர்

1. சங்க காலத்துப் பாண்டியர் தமது தலைநகரமாகிய மதுரையில் தமிழ்ச் சங்கத்தை வைத்துப் புலவர்களைக்கொண்டு தமிழை வளர்த்துவந்தனர். சங்க காலத்தில் அச்சங்கத்தில் புலவர் நாற்பத்தொன்பதின்மர் இருந்து தமிழ் வளர்த்தனர்; அவருள் தலைமைப் புலவராக இருந்தவர் **நக்கீரர்**. பாண்டியர் பலரும் புலவராக விளங்கினர்; பாண்டிமாதேவியர் சிலரும் கவிபாடும் ஆற்றல் பெற்றிருந்தனர். அக்காலப் புலவர்கள் பாடிய பாடல்களே அகநானூறு, புறநானூறு, கலித்தொகை, பரிபாடல், ஐங்குறுநூறு, நற்றிணை, குறுந்தொகை, பதிற்றுப் பத்து, பத்துப் பாட்டு என்னும் நூல்களில் காணப்படுவன. மதுரைச் சங்கப் புலவருள் ஒருவராக இருந்த மதுரைக் கூலவாணிகன் சாத்தனுர் என்பவர்தாம் 'மணிமேகலை' என்னும் தமிழ்க் காவியத்தைப் பாடியவர்.

2. சங்க காலத்திற்குப் பிறகு கி. பி. 5-ஆம் நூற்றுண்டில் மதுரையில் ஒரு சங்கம் கூடியது. அது சமணப் புலவர்களால் கூட்டப் பெற்றது. **வச்சிரநந்தி** என்பவர் அதன் தலைவராக விளங்கினுர். அக்காலத்தில் இன்னு நாற்பது, இனியவை நாற்பது, திரிகடுகம், நான்மணிக்கடிகை போன்ற நீதி நூல்கள் பல செய்யப்பட்டன என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். அச்சங்கத்திற்குப் பிறகு மதுரையில் வேறு சங்கம் கூட்டப்பெற்றமை தெரியவில்லை.

3. இந்த இருபதாம் நூற்றுண்டில் அதே மதுரையில் ஒரு தமிழ்ச் சங்கம் கூட்டப்பெற்றுள்ளது.

அச்சங்கம் சென்ற நாற்பதாண்டுகளாகப் பலரைப் பண்டிதர்களாக்கிவருகின்றது ; அரிய தமிழ் நூல்களை அச்சிட்டு வெளிப்படுத்திவருகின்றது ; தமிழ்ப் புலவர் பெருமக்களைக் கொண்டு ஆண்டுதோறும் சிறந்த சொற்பொழிவுகளை ஆற்றச் செய்கின்றது ; சிறந்த நூல் நிலையம் ஒன்றை வைத்து மதுரை மாநகரில் தமிழ்க் கல்வியைப் பரப்பி வருகின்றது. இவ்வரிய தமிழ்த் தொண்டிற்கு அடிப்படையிட்ட பெரியவர் யார்? அவர் எவ்வாறு இச்சங்கத்தைத் தோற்றுவித்தார்? கீழே விடை காண்க.

4. இந்த நூற்றாண்டில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்த பெரியார் சேது சம்ஸ்தான மன்னர் மரபைச் சேர்ந்தவர் ; பாலவநத்தம் சமீந்தார் ; **பாண்டித்துரைத் தேவர்** என்ற பெயரினர் ; 1867-இல் பிறந்தவர். அவர் தந்தையாரான பொன்னுச்சாமித் தேவர் என்பவர் சிறந்த தமிழ் அறிஞர்; சிவபக்தர் ; புலவர்களை ஆதரித்த பெருவள்ளல். அப்பெரியாருக்குப் பிறந்த பாண்டித்துரைத் தேவர் புலவர் பலரிடம் தமிழ் இலக்கண இலக்கிய நூல்களைக் கற்ருர் ; சமய நூல்களை ஐயந்திரிபறக் கற்ருர் ; தம் காலத்துப் புலவராகவும் சேது சம்ஸ்தானத்தைச்

பாண்டித்துரைத் தேவர்

சேர்ந்தவராகவும் இருந்த மகாவித்துவான் ரா. இராக வையங்கார், திருநாராயணையங்கார் போன்ற பெரும் புலவர் பலருடனும் தமிழ் இன்பத்தை அனுபவிக்க லானுர்.

5. பாண்டித்துரைத் தேவரின் சிறிய தந்தை மகனுரான **பாஸ்கர சேதுபதியும்** தேவரைப் போலவே தமிழ்ப் பற்று மிக்கவர் ; புலவர் பலரை ஆதரித்தவர் ; புலவர்களுடன் பொழுது போக்கு வதையே பேரின்பமாகக் கருதியவர். தேவர் சேதுபதி யுடன் இருந்து அவைப் புலவர்களைப் புதிய கவிகள் பாடச் செய்வதிலும், திருக்குறள், கம்பராமாயணம், பெரிய புராணம், கந்த புராணம், திருவிளையாடற் புராணம் போன்ற நூல்களில் பல பகுதிகளை விளக்கச் செய்வதிலும் வல்லவராக விளங்கினுர். அவருடைய புலமை, தமிழ்ப் பற்று, புலவர்பால் கொண்ட அன்பு, கொடைத்தன்மை இவற்றில் ஈடுபட்ட புலவர்கள் தேனுள்ள மலரை வண்டுகள் மொய்ப்பதுபோலத் தேவரைச் சூழ்ந்துகொண்டிருந்தனர்.

6. தேவர் தமிழ் நூல்களை வெளியிட்டுவந்த புலவர்களுக்குப் பொருளுதவி செய்தார் ; டாக்டர் உ. வே. சாமிநாதையர், மதுரை இராமசாமிப் பிள்ளை, சுன்னுகம் குமாரசாமிப் பிள்ளை, ச்பாபதி நாவலர் போன்ற பெரும் புலவர்கள் தேவரிடம் பொரு ளுதவி பெற்றுச் சில நூல்களை வெளியிட்டவராவர். தமிழ் நூல்கள் பலவற்றிலிருந்து அறம், பொருள், இன்பங்களைக் கூறும் செய்யுட்களைத் தேவர் தொகுத்துப் **பன்னூல் திரட்டு** என்னும் பெயருடன் ஒரு நூலாக்கினுர் ; இவ்வாறே சைவ சம்பந்தமான பாடல்களைச் **சைவ மஞ்சரி** என்ற பெயருடன் ஒரு நூலாகத் தொகுத்தார்.

7. ஒரு முறை தேவர் மதுரையில் சொற்பொழிவு செய்ய வேண்டியவரானார். அவருக்குத் திருக்குறள் தேவைப்பட்டது. அந்நூல் மதுரை மாநகரில் ஒருவரிடமும் இல்லை. இதை அறிந்த தேவர், "தமிழ் வளர்ந்த மதுரை இவ்வறிய நிலையிலா இருக்கிறது!" என்று எண்ணி மனம் புண்ணுனர்; உடனே அங்கு ஒரு தமிழ்ச் சங்கத்தை நிறுவத் துணிந்தார். அவருக்கு உதவியாகப் பாஸ்கர சேதுபதி நின்ருர்; பெருமக்கள் பலரும் ஊக்கம் அளித்தனர். 1901-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 14-ஆம் நாள் மதுரையில் **தமிழ்ச் சங்கம்** கூட்டப்பெற்றது. டாக்டர் உ. வே. சாமிநாதையர், மறைமலையடிகள், சேது சம்ஸ்தான மகா வித்துவான் ரா. இராகவையங்கார் போன்ற பெரும் புலவர்கள் தேவரைப் பாராட்டினர்; அரிய சொற்பொழிவுகள் ஆற்றினர்.

8. தமிழ்ச் சங்கத்தில் **சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை, பாண்டியன் புத்தகசாலை, நூலாராய்ச்சிச் சாலை** என்பன தோன்றலாயின. கலாசாலையில் பிரவேச பண்டிதம், பால பண்டிதம், பண்டிதம் என்னும் தமிழ் வகுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டன; ஆழ்ந்து அகன்ற தமிழறிவு பெற்ற புலவர்கள் ஆசிரியராக நியமனம் பெற்றனர். திருநாராயணையங்கார் தலைமை ஆசிரியராக அமர்ந்தார். நூலாராய்ச்சி, நூல்களைப் பதிப்பித்தல் ஆகிய இரண்டும் மகாவித்துவான் ரா. இராகவையங்கார் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. புத்தகசாலைக்குத் தேவரும் சேதுபதியவர்களும் நூற்றுக் கணக்கான தமிழ் நூல்களை உதவினர். நாடெங்கும் இருந்த பண்டைப் பனை ஓலை நூல்கள் தொகுக்கப் பெற்றுப் புத்தகசாலையில் வைக்கப்பெற்றன. 1903-ஆம் ஆண்டு முதல்

செந்தமிழ் என்னும் திங்கள் வெளியீடு சங்கத்தி லிருந்து வெளிவரலாயிற்று.

9. தேவர் 1911-ஆம் ஆண்டிற் காலமானார். அவருக்குப் பிறகு தமிழ்ச் சங்கத்தை இன்றளவும் நடத்திவரும் அறிஞர் **டி. ஸி. சீனிவாச ஐயங்கார்** என்பவர். இவர் தேவருடைய நண்பர்; தமிழ்ப் பற்று மிக்கவர். இப்பெரியார் மிக்க முதுமையுற்ற இந்நாளிலும் தமிழ்ச் சங்க அலுவல்களை ஊக்கத் துடன் கவனித்துவருதல் போற்றற்குரியது. தேவ ரால் தோற்றுவிக்கப்பெற்ற தமிழ்ச் சங்கம், சங்க காலத் தமிழ்ச் சங்கத்தை ஓரளவு நினைவூட்டிவருதல் போற்றத் தக்கது அன்றோ?

பாண்டித்துரைத் தேவர் புகழ் நீடு வாழ்க!

அருஞ்சொற்பொருள்

அகநானூறு - இல்வாழ்க்கை பற்றிய 400 பாடல்களைக் கொண்ட நூல். நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித் தொகை என்பனவும் இல்வாழ்க்கை பற்றியவையே ஆகும். பரி பாடல்-திருமால், முருகன், வையையாறு முதலியன பற்றிய பாடல் களைக் கொண்ட நூல். பதிற்றுப்பத்து - சேர அரசர் பதின்மரைப் பற்றிய நூறு செய்யுட்களைக் கொண்ட நூல். பத்துப்பாட்டு என்பது திருமுருகாற்றுப்படை முதல் நெடுநல்வாடையீருகவுள்ள பத்துப் பாக்களின் தொகுதி. பேரின்பம் - பெருமை + இன்பம் - பெரிய இன்பம். தொகுத்தல் - சேர்த்தல். வறிய - தரித்திர.

கேள்விகள்

1. சங்கநூல்கள் எவை?

2. சங்ககாலத்திற்குப் பிறகு மதுரையிற் கூட்டப்பெற்ற மற்ருெரு சங்கம் யாது?

3. மதுரையில் இப்பொழுதுள்ள சங்கம் செய்துவரும் பணிகள் யாவை?

4. தேனுள்ள மலரை வண்டுகள் மொய்ப்பதுபோல—இந்த உவமை எதனை விளக்க வந்தது?

5. தேவரிடம் உதவி பெற்று நூல்களை வெளியிட்ட புலவர் யாவர்?

6. தேவர் தொகுத்த நூல்கள் எவை?

7. தேவர் சங்கம் உண்டாக்கக் காரணம் யாது?

8. தேவர் சங்கத்தில் தோற்றுவித்த பிரிவுகள் யாவை? அவை எப்பணிகட்கு ஏற்படுத்தப்பட்டன?

9. தேவருக்குப் பிறகு சங்கத்தை நடத்திவருபவர் யாவர்?

பயிற்சி

1. நிறுவ, அகன்ற, நாடெங்கும், தமிழ்ப்பற்று, இன்றளவும், ஆண்டுதோறும், காவியம், அடிப்படை—இவற்றை உங்கள் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்லுக.

2. இப்பாடத்தில் பல நூற்பெயர்கள் வந்துள்ளன. அவற்றுள் நீங்கள் அறிந்த இரண்டு நூல்களைப் பற்றிப் பத்து வரிகள் எழுதுக.

3. செய்தாள் = செய் + த் + ஆள் — இறந்தகாலம்.
செய்கிறாள் = செய் + கிறு + ஆள்— நிகழ்காலம்.
செய்வாள் = செய் + வ் + ஆள் — எதிர்காலம்.

இம் மூன்றிலும் 'செய்' என்பது பகுதி (வேர்ச்சொல்); ஆள் - கருத்தாவை உணர்த்துவது; விகுதி எனப்படும். இவை இரண்டும் காலத்தை உணர்த்துவன அல்ல. எனவே, இடையில் உள்ள த், கிறு, வ் என்பனவே காலத்தை உணர்த்துவனவாகும். இவற்றுள்,

(1) த்—இறந்தகால இடைநிலை (இடையில் இருக்கும் உறுப்பு).
(2) கிறு—நிகழ்கால இடைநிலை.
(3) வ்—எதிர்கால இடைநிலை.

(1) செய்தாள் = செய் + த் + ஆள்.
கண்டான் = காண் + ட் + ஆன்.
சென்றோம் = செல் + ற் + ஓம்.
போயினோம் = போ + (ய்) + இன் + ஓம்.

த், ட், ற், இன்—இறந்தகால இடைநிலைகள்.

படித்தான், வந்தான், நின்றார், போயினன், மாண்டார்—இவற்றில் உள்ள இறந்தகால இடைநிலைகளைக் கூறுக.

13. செதுக்குக் கலை

1. இப்படத்தைப் பாருங்கள்: ஒரு காட்டு எருமையின் உருவம் கற் சுவரில் செதுக்கப்பட்டுளது. மற்றொரு பாறையில் மானின் உருவம் செதுக்கப் பட்டிருக்கிறது. இவற்றைச் செதுக்கியவர் யாவர்? இவை மலைக்குகைகளில் வாழ்ந்த மிகப்பழைய மனிதரால் செதுக்கப்பட்டவை. இவ்வாறே பண்டை மக்கள்



கற்சுவர் ஓவியங்கள்

மரப் பலகைகளில் பல உருவங்களைச் செதுக்கினர். அவர்கள் தாம் கண்ட விலங்குகள், பறவைகள் இவற்றின் உருவங்களையும், மக்களின் உருவங்களையும் கற் பாறைகள்மீது பொறித்தனர்; மரப் பலகைகள்மீதும் யானை முதலிய உயிர்களின் கொம்புகள்மீதும் பொறித்தனர்; சித்திரங்களைப் பொறித்தலோடு நில்லாமல், மேற்சொன்ன பொருள்களைக் கொண்டு பல உருவங்களையும் அமைத்தனர்.

2. அலாஸ்காவிலுள்ள எஸ்கிமோக்கள் வால்ரஸ் என்னும் பிராணியின் கொம்பைக் கொண்டும், பனியிற் புதைந்து கிடக்கும் வேறு பல உயிர்களின் கொம்புகளைக் கொண்டும் பல அழகிய உருவங்களைச்

செதுக்கி வருகின்றனர். அவர்களுடன் வாழும் அமெரிக்க இந்தியர் மரங்களைச் செதுக்கிப் பல உருவங்களை அமைப்பதில் கைதேர்ந்தவர்கள். அவர்கள் அஞ்சத்தக்க மனிதரின் தலைகளையும் விலங்குகளின் தலைகளையும் ஒரே மரத்திற் செதுக்கி, அவ்வுருவங்களை வழிபடுவர். அவ்வுருவங்களைப் படத்திற் பாருங்கள் : ஒவ்வோர் உருவமும் அம் மக்களின் வரலாற்றையும் சமயத்தையும் இணைத்துக்கொண்டு இருப்பதாக ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

ஒரே மரத்தில் பல உருவங்கள்

3. ஆப்பிரிக்காக் கண்டத்தில் வாழும் நீக்ரோவரும் தென் கடற் பகுதிகளில் உள்ள தீவுகளில் வாழும் மக்களும் மரங்களில் உருவங்

களைச் செதுக்குவதில் திறமை பெற்றவர். ஆப்பிரிக்கப் பழங்குடிகள் மரங்களைக் கொண்டே தங்கள் கடவுளர் உருவங்களைச் செதுக்குகின்றனர். ஒவ்வொரு கடவுளர் தலையும் மிகப் பெரியதாயும் உடல் சிறியதாயும் அமைந்திருத்தல், அம்மக்கள் தங்கள் கடவுளர் உருவத்தைப் பற்றிக் கொண்டிருக்கும் எண்ணத்தைப் புலப்படுத்துவதாகும். அவர் கையாளும் பெரிய மரக்கரண்டிகள் ஒட்டைச்சிவிங்கியின் தலை செதுக்கப்பட்ட கைப்பிடிகளைக் கொண்டவை. அம்மக்கள் தங்கள் மரக் கேடயங்கள்மீதும் கதாயுதங்கள்மீதும் ஈட்டிகளின் கைப்பிடிகளின்மீதும் பல உருவங்களைச் செதுக்கியுள்ளனர். அவ்விடத்துப் பூசாரிகளும் சமயத் தொடர்பாக நடனம் செய்பவரும் விழாக்களில் அணிந்துகொள்ளும் **முக மூடிகள்** சிறந்த வேலைப்பாடு கொண்டவை; அதே சமயத்தில் அச்சத்தை ஊட்டத் தக்கவை. அமெரிக்க இந்தியரும் இத்தகைய முக மூடிகளைச் செய்து பயன்படுத்துகின்றனர். படத்தைப் பாருங்கள்.

மரத்தால் அமைந்த முகமூடி

4. மிகப் பழைய நாகரிகங்களில் முதன்மையானது எகிப்தியர் நாகரிகம் என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. அந் நாட்டில் ஏறத்தாழ இரண்டாயிரம்

ஆண்டுகட்கு முன் மரம் கொண்டு செய்யப்பட்ட உருவங்கள் மிகப் பலவாகும். அவற்றுள் அழிந்தன போக எஞ்சியவற்றைக் கண்ட ஆராய்ச்சியாளர், அவற்றின் வேலைப்பாட்டைக் கண்டு வியப்புற்றனர். அவற்றுள் ஒன்றைப் படத்தில் பாருங்கள் : ஒரு மனிதனது உருவம் மரத்தில் எவ்வளவு கம்பீரமாகச் செதுக்கி அமைக்கப்பட்டுள்ளது என்பதைக் கவனியுங்கள்.

மரத்தில் மனித உருவம்

5. நாகரிகம் வளர வளர, மரத்தில் காட்டிய வேலைப்பாடு யானைத் தந்தத்தில் வளர்ச்சி பெறலாயிற்று. சீனரும் ஜப்பானியரும் மர வேலையிலும் தந்த வேலையிலும் திறமை மிக்கவர். சீனத்திலும் ஜப்பானிலும் உள்ள மாளிகைகள், அரண்மனைகள் இவற்றிலுள்ள தூண்களிலும் கூரைகளிலும் தாமரை மலர், பல வகைப் பறவைகள், விலங்குகள் இவற்றின் உருவங்கள் செதுக்கப்பட்டிருக்கும். திரைச் சீலைகளுக்குப் பதிலாகப் பயன்படும் மரப் பலகைகள்மீது அழகிய வேலைப்பாடுகள் காணப்படும். செல்வர் மாளிகைகளில் தந்தத்தால் செய்யப்


தந்தத்தாலான தடுப்புப் பலகைகள்

பட்ட தடுப்புப் பலகைகள் கண்கவர் வேலைப் பாட்டுடன் காட்சியளிப்பதை இன்றும் காணலாம். படத்தைப் பாருங்கள். தந்தப்பலகைமீது திராட்சைக் கொடியும் இலைகளும் இலைக்கொத்துக்களும் எவ்வளவு அழகாகச் செதுக்கப்பட்டுள்ளன !

6. பழங் காலத்தில் ஜப்பானியர் பயன்படுத்திய வாள்கள்மீதும் சித்திரங்கள் செதுக்கப்பட்டிருந்தன.

ஒவ்வொரு வாளின் கைப்பிடியும் சிறந்த வேலைப்பாடு கொண்டிருந்தது. மிகச் சிறிய தந்தத் துண்டிலும் உருவங்களை அமைக்கும் ஆற்றல் ஜப்பானியருக்கு உண்டு.

படங்களைப் பார்த்து, ஜப்பானியர் திறமையை உணருங்கள்.

7. யானைத் தந்தத்தில் உருவங்களை அமைத்தல் சிரியா, கிரீஸ், இத்தாலி முதலிய மேனாடுகளிலும் ஒரு கலையாக வளர்க்கப்பட்டது. கி. பி. 5-ஆம் நூற்றாண்டில் சிரியாவில் செய்யப்பட்ட அழகிய தந்தச் சிமிழை (அடுத்த பக்கத்து)ப் படத்திற் பாருங்கள் : இதிற் செதுக்கப்பட்டுள்ளவை கிறிஸ்துவ சமய போதகரின் திருவுருவங்கள் ஆகும். அவ்வுருவங்களுக்கு மேலும் கீழும் உள்ள கண்ணைக் கவரும் வேலைப்பாட்டினைக் கவனியுங்கள்.

8. மரம், தந்தம் இவற்றில் செதுக்கிப் பண்பட்ட மக்கள், செம்பு, வெள்ளி, பொன் முதலிய உலோகங்களிலும் தங்கள் கைத்திறனைக் காட்டலாயினர்.

பண்டை அரசர்கள் தங்கள் ஆட்சிக் காலங்களில் பயன்படுத்திய நாணயங்களைக் கொண்டு இவ் வுண்மையை உணரலாம். நமது இந்தியாவில் குப்தர்கள் வெளியிட்ட நாணயங்கள் இதற்கு ஏற்ற

சிரியாவிற் செய்யப்பட்ட தந்தச் சிமிழ்

சான்றுகும். இவ்வாறு உலோகங்களில் செதுக்கு வேலை செய்து புலமை பெற்ற கலை அறிஞர்கள் விலை

யுயர்ந்த பலவகைக் கற்களில் தம் கைத்திறனைக் காட்டலாயினர். இவ்வேலையில் பண்பட்டவர் கிரேக்க ராவார். இக்கலை கிரேக்கர்களிடமிருந்து ரோமர்க்குப் பரவியது. பெருவீரராகிய ஜூலியஸ் சீஸர் தமக்குப் பல இடங்களிலிருந்தும் பிறரால் கொடுக்கப் பெற்ற சித்திர வேலைப்பாடு மிகுந்த விலையுயர்ந்த மணிகளை ரோமாபுரிக் கோவிலுக்கு அளித்து மகிழ்ந்தார். இக் கலை ரோமாபுரியில் நன்கு வளர்ச்சியுற்றது. சில பெரிய மணிகள்மீது போர்க்களக் காட்சிகள் செதுக்கப் பட்டன. சிலவற்றில் வீரர் உருவங்களும் செதுக்கப் பட்டன. ஜூலியஸ் சீஸர் காலத்தில் வீர வாழ்வு வாழ்ந்த ரோமர்கள் இவற்றைப் பெருமகிழ்ச்சியோடு வாங்கி அணிந்துகொண்டனர். இத்தகைய மணி களுள் சிலவற்றை இலண்டன் பொருட் காட்சிச் சாலையில் இன்றும் கண்டு களிக்கலாம்.

அருஞ்சொற்பொருள்

வளரவளர—அடுக்குத்தொடர். திறன் - சாமர்த்தியம், திறமை. சான்று - சாட்சி. குப்தர்கள் - கி. பி. 4 முதல் 6-ஆம் நூற்றுண்டு வரை வட இந்தியாவில் பேரரசராக இருந்தவர்கள். பண்பட்ட - அனுபவம் வாய்ந்த. புலப்படுத்தல் - தெரிவித்தல்.

கேள்விகள்

1. மலைக்குகைகளில் வாழ்ந்த மக்கள் செதுக்கிய சித் திரங்கள் எவை?

2. அமெரிக்க இந்தியர் செதுக்குக் கலையிற் பழக்கம் உடையவர் என்பதற்குச் சான்று யாது?

3. ஆப்பிரிக்க நீக்ரோவரும் பழங்குடிகளும் மரங்களில் செதுக்குவேலை செய்வதில் வல்லவர் என்பதை மெய்ப்பிக்கும் சான்றுகள் எவை?

4. தந்தத்தில் செதுக்குவேலை செய்தலிற் சீனரும் ஜப்பானி யரும் சிறந்தவர் என்பது எவ்வாறு தெரிகிறது?

5. சிரியாவிலும் தந்தவேலை திறம்பட நடைபெற்றது என்பதை எப்படி அறியலாம்?

6. பண்டை மக்கள் செம்பு முதலிய உலோகங்களிலும் செதுக்கு வேலை செய்தனர் என்பதற்கு ஆதாரம் என்ன?

7. உயர்தர மணிகளிலும் செதுக்குவேலை திறம்பட நடைபெற்றது என்பதை உணர்த்தும் சான்றுகள் எவை?

பயிற்சி

1. எஸ்கிமோக்கள், அமெரிக்க இந்தியர், நீக்ரோவர்—இவர்களைப்பற்றி நீங்கள் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

2. மரம் + கரண்டி, கை + பிடி, வரலாறு + ஐ, சமயம் + தொடர்பாக, நூறு + ஆண்டு, யானை + தந்தம், கை + திறன், மிக + சிறிய—இவற்றைச் சேர்த்துப் படிக்கவும்.

3. கைத்திறன், நூற்றுண்டு, பண்பட்ட, ஆற்றல், கேடயம், கைப்பிடி, வரலாறு—இவற்றை உங்கள் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்லுக.

செதுக்குக் கலை இன்னது—மரங்களில் செதுக்குவேலை—தந்தத்தில் செதுக்குவேலை—உலோகங்களிற் செதுக்குவேலை—விலை உயர்ந்த மணிகளிற் செதுக்குவேலை : இவற்றைக் குறிப்புக்களாகக்கொண்டு, இப்பாடப்பொருளை ஒரு கட்டுரையாக வரைக.

4. (1) செய்கிறோம் = செய் + கிறு + ஓம்.
செய்கின்றோம் = செய் + கின்று + ஓம்.

கிறு, கின்று—நிகழ்கால இடைநிலைகள்.

(2) செய்வான் = செய் + வ் + ஆன்.
நிற்பார் = நில் + ப் + ஆர்.

ப், வ்—எதிர்கால இடைநிலைகள்.

5. வருகிறேன், நிற்கிறார், படிப்பார், செய்வாள், தூங்குகிறாள், சிரித்தார், அடைந்தாள்—இவற்றில் உள்ள முக்கால இடைநிலைகளைக் கூறுக.

14. நாஞ்சில் நாட்டுக் கவிஞர்

"பாட்டுக் கொருபுலவன் பாரதி, அடா!—அவன்
பாட்டைப் பண்ணோ டொருவன் பாடினான், அடா!
கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனே, அடா!—அந்தக்
கிறுக்கில் உளறுமொழி பொறுப்பாய், அடா!"

என்று தொடங்கும் இப்பாடல் வானொலியில் அடிக்கடி பாடப்படுகின்றது அல்லவா? சுப்பிரமணிய பாரதி

யாரைப் பாராட்டி, இக்கவியைச் செய்தவர் யாவர்? பல இனிய பாடல்களைப் பாடிக்கொண்டு நம்மிடையே இருக்கும் முதுபெரும் புலவராகிய **கவிமணி—தேசிக விநாயகம் பிள்ளை** என்பவரே அவர். அப் பெரியார் செய்யுள் செய்வதில் வல்லவர்; ஆராய்ச்சிப் புலவர்; சிறந்த பேச்சாளர். அவரது வரலாறும் தொண்டும் உங்களுக்கு ஊக்கத்தை அளிக்கவல்லன.

2. திருவிதாங்கூர்ச் சீமையின் தென்பகுதி தமிழர் வாழும் இடமாகும். அது **நாஞ்சில் நாடு** எனப்படும். நமது கவிமணி நாஞ்சில் நாட்டு வேளாளருள் ஒருவராவர். அவர் நாஞ்சில் நாட்டிலுள்ள சுசீந்திரம் என்னும் ஊரையடுத்த **தேரூர்** என்னும் சிற்றூரைச் சேர்ந்தவர். அவர் கி. பி. 1876-இல் பிறந்தார். அவருடைய முன்னோர் சிறந்த வாணிகராகவும் புலவராகவும் விளங்கிப் பெருமை பெற்றனர். கவிமணி தம் பெற்றோர்க்கு ஒரே மைந்தர் ஆதலால் பெற்றோரால் பெரிதும் போற்றி வளர்க்கப்பட்டார்.

3. அவர் முதலில் தேரூரில் இருந்த தொடக்க நிலைப் பள்ளியில் கல்வி பயின்றார்; அங்குத் தமிழையும் மலையாளத்தையும் நன்கு கற்றார்; பின்பு ஏறத்தாழ ஐந்து கல் தொலையிலுள்ள கோட்டாறு என்னும் இடத்தில் இருந்த அரசாங்க ஆங்கிலப் பள்ளியில் சேர்ந்து கல்வி கற்றார்; தமது பத்தாம் வயதில் தந்தையார் காலமாகியும், அன்னையார் ஊக்க, படிப்படியாகக் கற்று மெட்றிகுலேஷன் தேர்வில் தேர்ச்சி பெற்றார். பின்னர் அவர், கோட்டாற்றை அடுத்த நாகர் கோவிலில் இருந்த ஆங்கிலக் கல்லூரியிற் சேர்ந்து படித்தார்; உடல்நலக் குறைவால் எப். ஏ. தேர்வுக்குச் செல்லும் முன்னரே படிப்பை நிறுத்தினார்; பின்பு திருவனந்தபுரம் சென்று, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிற் சேர்ந்து படித்துத் தேர்வில் வெற்றி பெற்றார்.

4. கவிமணி தேரூர்ப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த பொழுதே சாந்தலிங்கத் தம்பிரான் என்ற சைவத் துறவியிடம் தமிழ் நூல்களை முறையாகக் கற்கலானார்; பின்னர் உயர்நிலைப்பள்ளிப் பருவத்திலும் அப்பெரியாரிடமே இலக்கண இலக்கியங்

களைக் கற்றார். இப்பயிற்சியால் அவர் கவிபாடும் ஆற்றலையும் பெற்றார். அவர் தமது இருபத்தைந் தாம் ஆண்டிற்குள் தமிழ் நூல்களை நிரம்பக் கற்றார் ; ஆங்கிலம் மலையாளம் ஆகிய இரு மொழிகளிலும் ஓரளவு புலமை பெற்றார்.

5. கவிமணி தமது இருபத்தைந்தாம் வயதில் நாகர் கோவிலை அடுத்துள்ள புத்தேரி என்னும் சிற்றூரைச் சேர்ந்த **உமையம்மையார்** என்பவரை மணந்துகொண்டார். அவ்வம்மையார், உண்மையுடைமை, பொறையுடைமை, கடவுள்பக்தி, ஒழுக்கமுடைமை முதலிய நற்பண்புகள் வாய்க்கப்பெற்றவர் ; கணவர் கருத்தறிந்து நடக்கும் பழக்கமுடையவர். கவிமணி, தம் இல்லக் கிழத்தியாரின் அருங் குணங்களைக் கண்டு அவரைத் தம் உயிர் போல நேசிக்கலானார். எனவே, கணவரும் மனைவியாரும் ஓருயிரும் ஈருடலுமாய் இருந்து, இல்லறம் என்னும் நல்லறத்தை இனிது நடத்திவந்தனர்.

6. ஆசிரியர் பயிற்சி பெற்ற நமது கவிமணி தாம் மணம் செய்துகொண்ட ஆண்டிலேயே கோட்டாற்றில் தொடக்கநிலைப்பள்ளி ஆசிரியரானார் ; சில ஆண்டுகட்குப் பிறகு நாகர் கோவிலில் உள்ள ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் ஆசிரியரானார். பின்பு அவரது கற்பிக்கும் ஆற்றலைப் பாராட்டிய கல்வியதிகாரிகள் அவரைத் திருவனந்தபுரத்தில் உள்ள மகளிர்–ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கு மாற்றினர். சில ஆண்டுகட்குப் பிறகு அவர் மகாராஜா–மகளிர் உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியரானார் ; பின்னர் மகாராஜா–மகளிர் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக அமர்ந்தார் ; பல ஆண்டுகள் அக்கல்லூரியிலிருந்து 1931–ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார்.

7. மாணவர் பருவத்திலிருந்தே பண்டிதரும் பாமரரும் விரும்பிப் படிக்கத் தகுந்த இனிய–எளிய தமிழ்ச் செய்யுள்களைக் கவிமணி பாடிவந்தார்; ஆங்கிலப் பாடல்கள் பலவற்றை அவ்வப்பொழுது மொழிபெயர்த்துவந்தார். திருவிதாங்கூரிலும் தமிழ் நாட்டிலும் வெளிவரும் செய்தித் தாள்களில் அவருடைய பாடல்கள் அடிக்கடி வெளிவந்தன. அவற்றைப் படித்த அறிஞர் பலர் கவிமணியைப் பாராட்டினர். அவர்கள் வற்புறுத்தலால் கவிமணியின் பாடல்கள் தொகுக்கப் பெற்று "**மலரும் மாலையும்**" என்னும் பெயரில் 1938-ஆம் ஆண்டு வெளியிடப்பெற்றன. அந்நூற் பாடல்கள் தமிழர் உள்ளங்களைக் கவர்ந்தன. புத்தரது வரலாறு, "**ஆசிய ஜோதி**" என்னும் பெயரில் வெளிவந்தது. பாரசீகக் கவிஞரான உமார் கய்யாம் என்பவர் பாடிய பாடல்கள் பலவற்றைக் கவிமணி தமிழில் பாடியுள்ளார். அவை "உமார் கய்யாம்" என்னும் பெயரோடு தனி நூலாக வெளி வந்துள்ளன. இவை அல்லாமல் "நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம்" முதலிய சிறு கவிதை நூல்களும் வெளிவந்துள்ளன. இங்ஙனம் வெளி வந்த கவிதைகளைப் படித்த அறிஞர்கள் நமது புலவர்க்குக் **கவிமணி**' என்னும் பட்டத்தை 1940-ஆம் ஆண்டு நடைபெற்ற சென்னைமாகாணத் தமிழ்ச் சங்கத்துச் சார்பில் வழங்கினர். அது முதல் நமது புலவர் '**கவிமணி**' என்றே அழைக்கப்பட்டு வருகின்றனர்.

8. கவிமணி வரலாற்று ஆராய்ச்சியிலும் பெயர் பெற்றவர்; தமிழ்நாட்டுக் கல்வெட்டுக்களையும் வரலாற்றையும் நன்கு படித்தவர். அவர் ஆய்ந்து வெளியிட்ட "காந்தளூர்ச் சாலை" என்னும் ஆங்கில

நூல் ஒன்றே அவரது ஆராய்ச்சி அறிவை நன்கு விளக்கப் போதியது. அவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல எழுதி வெளியிட்டுள்ளார். அவரது பெரும்புலமையைப் பாராட்டிய திருவாங்கூர்ப் பல்கலைக் கழகத்தார் அவரைத் தம் பல்கலைக் கழகத்துத் தமிழ்க்குழுவில் ஒருவராக இன்றளவும் வைத்துக்கொண்டுள்ளனர். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் சீரிய கொள்கையையுடைய கவிமணி, எழுபத்தைந்து வயதுடையவராயினும் எப்பதவியையும் மறுக்காமல் ஏற்றுத் தம்மால் இயலும் தமிழ்த்தொண்டு செய்துவருகின்றனர்.

9. கவிமணி ஓய்வுபெற்ற பிறகு இன்றளவும் புத்தேரி என்னும் சிற்றூரில் வாழ்ந்துவருகின்ருர். அவரது மருகர் **திரு. குமாரசுவாமிப் பிள்ளை** என்பவரே இன்று கவிமணிக்கு உறுதுணையாக இருந்துவருகின்ருர். கவிமணி வாழும் புத்தேரி, அவர் தங்கியிருத்தலால், பேறு பெற்றதென்னலாம். நாட்டுப் பெருமக்கள் பலர் அவரைக் காண அங்குச் செல்லுகின்றனர்.

10. செட்டிநாட்டரசர் **ராஜா. சர். அண்ணுமலைச் செட்டியார்** அவர்கள் தம்மைப் பாராட்டி அளித்த பரிசைத் திருவனந்தபுரம் பல்கலைக் கழகக் கல்லூரியில் ஆண்டுதோறும் தமிழ்ப் பரிசு கொடுப்பதற்கு மூலப்பொருளாக அளித்துவிட்டார் எனின், கவிமணியின் தமிழ்ப் பற்றை என்னென்பது! பொது மக்களும் அறிஞர்களும் திருவாவடுதுறை ஆதீனத் தலைவரும் அவரது புலமையைப் பாராட்டிப் பொன்னுடை போர்த்தனர்.

11. கவிமணி கோபத்தை அறியாதவர். அவருக்குப் 'பகைவர் இவர்', 'நண்பர் இவர்' என்று சுட்டிக்காட்ட ஆள் கிடைப்பது அருமை. அவர் அனைவராலும் விரும்பப்படுகின்றவர்; குழந்தை உள்ளம் படைத்தவர்; தம்மை நாடி வருபவர் எவரேயாயினும் அவருடன் இனிமையாக உரையாடுபவர்; தமக்குத் தவறு என்று பட்டதை வன்மையாகக் கண்டிக்கும் இயல்புடையவர். பிறர் புகழ்தலையோ, இகழ்தலையோ பாராட்டுபவர் அல்லர். 'எல்லோரும் ஒரு தாயீன்ற மக்களாய் ஒற்றுமையுடன் வாழ்ந்தால்தான் இந்தியா முன்னேற்றம் அடைதல் கூடும்; நம் நாட்டுப் பெண்கள் கல்விகற்று எல்லாத் துறைகளிலும் முற்போக்கு அடைதல் வேண்டும்,' என்பன கவிமணியின் கருத்துக்களுட் சிலவாகும்.

அருஞ்சொற்பொருள்

பண் - இராகம். கிறுகிறுத்து - இரட்டைச்சொல். வானொலி- ரேடியோ. போற்றி - சிறப்பித்து. படிப்படியாக - இரட்டைச் சொல். இல்லறம் - குடும்ப வாழ்க்கை. காந்தளூர்ச்சாலை - திருவனந்தபுரத்தை அடுத்திருப்பது. இஃது ஒரு துறைமுகம் என்பர் சிலர்; சிலர் 'அன்னசாலை' என்பர். குழு - கூட்டம். பணி - தொண்டு. உறு - பொருந்திய. பேறு - பாக்கியம்.

கேள்விகள்

1. 'பாட்டுக்கொரு புலவன்' என்று தொடங்கும் பாடலைப் பாடியவர் யாவர்? அவர் எவற்றில் வல்லவர்?
2. கவிமணி கல்விகற்ற விவரங்களைக் கூறுக.
3. அவர் எவ்வாறு தமிழிற் புலமை பெற்றார்?
4. அவரது இல்வாழ்க்கை எவ்வாறு நடைபெற்றது?
5. அவர் எங்கெங்கு ஆசிரியர் வேலை பார்த்தார்?
6. அவருடைய செய்யுள் நூல்கள் எவை?
7. அவர் எப்பொழுது, ஏன் 'கவிமணி' எனப் பட்டம் வழங்கப் பெற்றார்?

8. அவர் ஆராய்ச்சி அறிவுடையவர் என்பதற்குச் சான்று யாது?

9. தமிழகத்தார் கவிமணியை எவ்வாறு சிறப்பித்தனர்?

10. கவிமணியின் சிறந்த குணங்கள் எவை?

11. அவர் கருத்துக்களுள் இரண்டினைக் கூறுக.

பயிற்சி

1. ஆராய்ச்சி, ஊக்கம், போற்றி, படிப்படியாக, கிறு கிறுத்து, துறவி, அவ்வப்பொழுது, வற்புறுத்தல், நல்லறம்—இவற்றை உங்கள் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறுக.

2. இல்லறம், வெற்றி, முன்னர், வெளி, பிறகு, தொடக்கம்—இவற்றுக்கு எதிர்ச் சொற்களைச் சொல்லுக.

3. பிழைகளைச் சுட்டிக் காட்டித் திருத்துக :—

(1) கவிமணி ஒய்வுபெற்ற பிரகு இண்றலவும் புத்தேறி எண்ணும் சிற்றூறில் வாள்ந்து வருகின்ருர்.

(2) அவர் தேணூர் எண்ணும் கிருமத்தில் பிரந்தார்.

4. நம்மவர் பலர் பல சொற்களைத் தவருகப் பேசியும் எழுதியும் வருகின்றனர். நீங்கள் அத்தகைய சொற்களைத் தவறின்றிச் சொல்லப் பழக வேண்டும். ‘தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்’ ஆதலால், பிழையற்ற முறையிலேயே சொற்களைப் பேசவும் எழுதவும் பழகவேண்டும்.

	பிழையுள்ளவை	பிழையற்றவை
1.	அமக்களம்	அமர்க்களம்
2.	அருகாமை	அருகு
3.	ஆத்துக்கு	அகத்துக்கு
4.	இடதுகை	இடக்கை (இடம்+கை)
5.	வலதுகை	வலக்கை (வலம்+கை)
6.	என்னமோ	என்னவோ
7.	ஒண்டியாய்	ஒன்றியாய்
8.	சுவற்றில்	சுவரில்
9.	நஞ்சை	நன்செய்
10.	தலைகாணி	தலையணை
11.	தாவாரம்	தாழ்வாரம்
12.	வேஷ்டி	வேட்டி

15. கண்ணகி வழக்குரைத்தல்

(நாடகம்)

காட்சி–1

இடம் : பாண்டியன் அரண்மனே.
நேரம் : கோவலன் கொலேயுண்ட நாள் மாலே.
பாத்திரங்கள் : அரண்மனே வாயிற் காவலன், கண்ணகி.

[கொல்லப்பட்ட கோவலனது ஆவியற்ற உடலேக்கண்டு மனம் புண்ணுன கண்ணகி, உண்மையை ஆராயாது தன் கணவனேக் கொல்வித்த பாண்டியனேக் கண்டு, உண்மையை உணர்த்த விரும்பினுள்; அவிழ்ந்து தொங்கிய கூந்தலேயும் நீர் வடிந்த கண்களேயும் வாடிய முகத்தையும் கொண்ட அப் பத்தினி, தனது காற்சிலம்பு ஒன்றைக் கையில் ஏந்தியவளாய்ப் பாண்டியனது அரண்மனே வாயிலே அடைந்தாள். உருவிய வாளுடன் அரண்மனேக் காவற்காரன் அரண்மனே வாயிலில் உலவியிருந்தான். கடுஞ்சீற்றத்துடன் சென்ற கண்ணகி அவனே உற்று நோக்கி,]

கண்ணகி : வாயிற்காவலனே, தன் சுய அறிவை இழந்து, உண்மையை உணராது, நீதி முறையி லிருந்து தவறிய பாண்டியனது அரண்மனை வாயிற் காவலனே, 'சிலம்பு ஒன்றைக் கையில் ஏந்தியவளாய்க் கணவனை இழந்த ஒருத்தி உன்னைப் பார்க்க வந்திருக்கின்றாள்,' என்று உன் அரசனிடம் சென்று தெரிவி.

[வாயிற் காவலன் சீற்றம் கொண்ட அவளது முகத்தையும், அவளது வருந்திய தோற்றத்தையும் கண்டு அஞ்சினான். அவன் உடல் நடுங்கியது. அவன் நடுக்கத்தோடு அரசன் இருந்த மண்டபத்தை நோக்கி ஓடினான்.]

காட்சி–2

இடம் : அரண்மனை மண்டபம்.
நேரம் : மாலைவேளை
பாத்திரங்கள் : அரசன், அரசி, வாயிற்காவலன்.

அரசன் : காவலனே, ஏன் இப்படி ஓடி வருகின்றாய்? என்ன செய்தி ?

காவலன் : கொற்கை வேந்தே, நீ வாழ்க! பொதிகைமலைத் தலைவனே, வாழ்க! பாண்டியர் பெருமானே, வாழ்க! நமது அரண்மனை வாயிலில் ஒரு மங்கை வந்து நிற்கின்றாள். அவளது தோற்றம் என்னை அச்சுறுத்திவிட்டது. அவள், எருமைத் தலை அசுரனைக் கொன்று, அவனது தலையாகிய பீடத்தில் ஏறி நின்ற இளங் கொடியாகிய கொற்றவை அல்லள்; கன்னியர் எழுவரில் இளையவளாகிய பிடாரியும் அல்லள்; இறைவனை நடனமாடச் செய்த பத்திரகாளியும் அல்லள்; அச்சம் விளைக்கும் காட்டைத் தன் வாழிடமாகக் கொண்ட காளியும் அல்லள்;

தாருகன் என்னும் அசுரனது அகன்ற மார்பினைப் பிளந்த துர்க்கையும் அல்லள். அவள், தன் உள்ளத்தில் கறுவு கொண்டவள்போலவும், மிக்க சினமுற்றவள்போலவும் காணப்படுகின்றாள். அவள் கையில் சிறந்த வேலைப்பாடு கொண்ட பொற்சிலம்பு ஒன்று இருக்கின்றது. அவள் இன்றுதான் தன் கணவனை இழந்தவள் போலக் காணப்படுகிறாள். அவள் உன்னைக் காண விரும்புகின்றாள்.

அரசன் : காவலனே, அவளை உடனே அழைத்து வா.

[காவலன், கண்ணகியிடம் சென்றான்.]

காட்சி—3

இடம் : அரண்மனை மண்டபம்
நேரம் : முன் குறித்த மாலை வேளை
பாத்திரங்கள் : கண்ணகி, அரசன், அரசி.

[காவலன், கண்ணகியை அழைத்துவந்து அரசன்முன் விட்டு அகன்றான்.]

அரசன் : நீர் வடியும் கண்களையுடைய இளங்கொடி போல்வாய்! நீ யார்?

கண்ணகி : மன்னற்கு உரிய ஆராய்ச்சி அற்ற மன்னவனே, யான் உன்னிடம் சொல்லத்தகுவது ஒன்று உண்டு: தேவர்களும் கண்டு வியக்கும்படி புரு ஒன்று அடைந்த துன்பத்தைப்போக்கிய **சிபி** என்னும் மன்னனும், அரண்மனை வாயிலில் கட்டிய மணியின் நடுவிலுள்ள நாவை அசைத்த பசு ஒன்றின் துன்பத்தைப் போக்கத் தானே தன்னுடைய பெறுதற்கரிய மகனைத் தேர்க்காலில்

இட்டுக்கொன்ற மநுநீதிச் சோழனும் ஆண்ட மிக்க புகழினையுடைய புகார் நகரமே யான் பிறந்த ஊர். அவ்வூரில் பழிப்பில்லாத சிறப் பினையுடைய வணிகர் பெருங்குடியில் மாசாத் துவான் என்பாற்கு மகனாகத் தோன்றியவன் **கோவலன்**. அவன் பொருளீட்டி வாழ்க்கை நடத்துதலை விரும்பி, முன்னைத் தீவினை செலுத் தலால், நினது மதுரை மாநகரத்திற் புகுந்தான். அவனே என் கணவன். அவன் என் காற்சிலம்பு ஒன்றனை விற்க வந்து, நினது ஏவலால் கொலை யுண்டான். என் பெயர் **கண்ணகி** என்பது.

அரசன் : உன் கணவன் பாண்டிமாதேவியின் சிலம் பினைத் திருடியவன் என்னும் செய்தியை எனது பொற்கொல்லன் கூறக் கேட்டேன்; ஆதலால், அவனைக் கொல்லக் கட்டளையிட்டேன். அம் மையே, கள்வனைக் கொலை செய்தல் கொடுங் கோலன்று. அதுவே அரச நீதி.

கண்ணகி : அறநெறியிற் செல்லாத கொற்கை நகர் மன்ன, எனது சிலம்பு மாணிக்கப் பரலை உடையது.

அரசன் : (அரசியை நோக்கி) நமது சிலம்பு முத்துப் பரலை உடையது அல்லவா?

அரசி : அரசர் பெரும, நமது சிலம்பு முத்துப் பரலை உடையதுதான்.

அரசன் : (கோவலனிடமிருந்து பெற்ற சிலம்பினைக் கண்ணகி முன்வைத்து) இஃது உனது சிலம்புதானா?

கண்ணகி : ஆம். இஃது எனது சிலம்புதான்.

(என்று கூறி, அச்சிலம்பினை உடைத்தாள்). உடனே அதி லிருந்து மாணிக்கப் பரல் சிதறி, அரசனது வாயில் தெறித்தது).

அரசன் : (மாணிக்கப் பரலைப் பார்த்ததும் நடுங்கி,) அந்தோ! பொற்கொல்லனது பொய்யுரையை மெய்யுரையாக நம்பி நான் பெருந்தவறு செய்தேன்! என் முன்னோர் பெற்ற நற்பெயர் எனது அநீதியால் பாழாயிற்று. யானே கள்வன்; யான் கொலையாளி. பாண்டிய நாட்டைப் பாதுகாத்துவந்த பாண்டியர் மரபு என்னால் பழுதடைந்தது.

(என்று கூறிக்கொண்டே மயக்கமுற்று அரியணையிலிருந்து விழுந்தான்).

பாண்டிமாதேவி : (கணவன் வீழ்ந்ததைக் கண்டு மயங்கி) தாய் தந்தை முதலியவரை இழந்தவர்க்கு அம்முறை சொல்லிப் பிறரைக் காட்டுதல் கூடும். ஆயின், கணவனை இழந்த மனைவிக்கு அங்ஙனம் சொல்லிக் காட்டுதல் இயலாது. அம்மையே, உனது பரிதாப நிலையை நான் நன்கு உணர்கிறேன். அரசர் செய்த பெரும் பிழையைப் பொறுப்பாயாக.

(என்று கூறிக்கொண்டு, தன் கணவனுடைய இரண்டு பாதங்களைத் தொட்டு நிலத்தில் வீழ்ந்தாள்).

அருஞ்சொற்பொருள்

கொற்கை - பாண்டியநாட்டுத் துறைமுகம். கொற்றவை - துர்க்கை. கறுவு - பகைமை. உரிய - வேண்டிய. கொடுங்கோல் × செங்கோல். அறநெறி - நீதிவழி. அரியணை - சிங்க ஆசனம். அரண்மனை - பாதுகாவல் மிக்க மாளிகை. அச்சுறுத்தி - பயமுறுத்தி. ஈட்டி - சம்பாதித்து. ஏவல் - கட்டளை.

கேள்விகள்

1. கண்ணகி வாயிற்காவலனிடம் கூறியது யாது?
2. காவலன் அரசனிடம் சென்று யாது கூறினன்?
3. 'நீ யார்'? என்ற அரசனது வினாவிற்குக் கண்ணகி அளித்த விடை யாது?

4. கோவலன் கள்வன் அல்லன் என்பது எவ்வாறு மெய்ப்பிக்கப்பட்டது?

5. உண்மை உணர்ந்த பாண்டியன் வருந்திக் கூறியது யாது?

6. பாண்டிமாதேவி யாது கூறி நிலத்தில் வீழ்ந்தாள்?

பயிற்சி

1. அச்சுறுத்தி, பார்க்க, நடுக்கம், கறுவு, பெறுதற்கரிய, பொருளீட்டி, ஏவல்—இவற்றை உங்கள் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறுக.

2. பழுதடைந்தது, முத்துப்பரல், பொய்யுரை, உன்னைக் காண, இளங்கொடி, சினமுற்றவள், பொற்சிலம்பு—இவற்றைப் பிரித்துக் காட்டுக.

3. ஒன்று + உண்டு, பெருமை + குடியினர், சொல்ல + தகுவது, தேர் + கால், பொருள் + ஈட்டி, அ + சிலம்பு, அ + முறை—இவற்றைச் சேர்த்துக் கூறுக.

4. கண்ணகியும் வாயிற்காவலனும்—வாயிற்காவலனும் அரசனும்—அரசனும் கண்ணகியும்—கண்ணகியும் பாண்டிமாதேவியும்: இக் குறிப்புக்களைக் கொண்டு இப்பாடத்தின் பொருளைச் சுருக்கி ஒரு கட்டுரையாக வரைக.

5. (1) அவன் கலகல என்று நகைத்தான்.
வாள் பளபள என்று மின்னுகிறது.

இவற்றில் உள்ள (1) கலகல, (2) பளபள என்பவற்றைக் கல-கல, பள-பள எனத் தனித்தனியே பிரித்தால் பொருள் இல்லை; பிரித்துக் கூறினும் வாக்கியத்தில் அமையாது. இவ்வாறு பிரிக்கமுடியாத இரட்டைச் சொல் இரட்டைக் கிளவி எனப்படும்.

(2) பையன் பாம்பு பாம்பு என்று அலறினான்.
அவள் ஐயோ ஐயோ என்று அழுதாள்.

இவற்றில் உள்ள (1) பாம்பு பாம்பு, (2) ஐயோ ஐயோ என்பவற்றைப் பாம்பு-பாம்பு, ஐயோ-ஐயோ எனத் தனித்தனியே பிரித்தால் பொருள் உண்டு; பிரித்துக் கூறினும் வாக்கியத்தில் அமையும். இவ்வாறு சொற்கள் அடுக்கி வருதல் அடுக்குத்தொடர் எனப்படும்.

இவை இரண்டிற்கும் இந்நூலிலிருந்து உதாரணம் தருக.

செய்யுள்

1. வாழ்த்து

1. புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா
வுன்னடி யென்மனத்தே
வழுவா திருக்க வரந்தரல்
வேண்டும்; இவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள்
செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை
மேல்வைத்த தீவண்ணனே! —அப்பர்

2. அருமறை முதல்வனை ஆழி மாயனைக்
கருமுகில் வண்ணனைக் கமலக் கண்ணனைத்
திருமகள் தலைவனைத் தேவ தேவனை
இருபத முளரிகள் இறைஞ்சி ஏத்துவாம்.
—வில்லிபுத்தூர் ஆழ்வார்

3. திருவினும் திருவாய்ப் பொருளினும் பொருளாய்த்
தெளிவினும் தெளிவதாய்ச் சிறந்த
மருவினும் மருவாய் அணுவினுக் கணுவாய்
மதித்திடாப் பேரொளி யனைத்தும்
பொருவினும் பொருவா வடிவினும் வடிவாய்ப்
பூதலத் துறைந்தபல் லுயிரின்
கருவினும் கருவாய்ப் பெருந்தலம் புரந்த
கருத்தனைப் பொருத்துதல் கருத்தே.
—உமறுப் புலவர்

4. தருமமும் ஒழுக்கமும் தவமும் ஞானமும்
கருமமும் ஈதலாற் கருதில் யாதுமோர்
அருமையும் பயனுமொன் றில்லை; ஆதலால்
இருமையும் துணையெனக்(கு) **இயேசு** நாமமே.
—கிருஷ்ண பிள்ளை

1. இதனைப் பாடியவர் அப்பர்(திருநாவுக்கரசர்). இவர் சைவ சமயப் பெரியார் நால்வருள் ஒருவர். இவர் திருவாமூரில் வேளாளர் குலத்தில் பிறந்தவர். இவர் காலம் கி. பி. 7-ஆம் நூற்றாண்டு.

2. வில்லிபுத்தூர் ஆழ்வார் சிறந்த வைணவப் பெரியார்; பெருந்தமிழ்ப் புலவர்; 500 ஆண்டுகட்கு முற்பட்டவர். இவர் பாரத வரலாற்றை ஏறத்தாழ 4400 பாக்களில் பாடியுள்ளார்.

3. உமறுப்புலவர் எட்டையபுரத்து அவைப்புலவர்; 17-ஆம் நூற்றாண்டினர்; பல நூல்களைப் பாடியவர்; சீறாப்புராணம் என்பது நபிநாயகத்தின் வரலாற்றைக் கூறும் நூல்.

4. கிருஷ்ணபிள்ளை சிறந்த தமிழ்ப்புலவர்; கிறிஸ்துவர்; 'இரட்சணிய யாத்திரிகம்' என்னும் கிறிஸ்துவ நூலைத் தமிழிற் பாடியவர்; சில ஆண்டுகட்கு முன் இருந்தவர்.

அருஞ்சொற்பொருள்

1. பாதிரி - ஒருவகை மரம். வழுவாது - தவறாது. இரங்கி - இரக்கம் கொண்டு. வண்ணம் - நிறம். வண்ணன் - நிறத்தவன்.

2. ஆழி - சக்கரம். முகில் - மேகம். முளரி - தாமரை. இறைஞ்சி - துதித்து. பதமுளரி - பாதமாகிய தாமரை, உருவகம்.

3. மதித்திடா - மதிப்பிட முடியாத. பேரொளி - பெருமை + ஒளி, மிக்க ஒளி. பொருவுதல் - சமானமாதல். உறைந்த - வசித்த. பல் + உயிர் = பல்லுயிர். பூதலம் - பூமி. புரந்த - காப்பாற்றிய. பொருத்துதல் - நெஞ்சில் இருத்துதல்.

4. ஞானம் - அறிவு. கருமம் - நற்செயல். இருமை - இம்மை, மறுமை.

கேள்விகள்

1. அப்பர் வேண்டும் வரம் யாது?
2. வில்லிபுத்தூரார் இறைவனை எவ்வாறு வருணிக்கிறார்?
3. கருத்தனது இலக்கணம் எவ்வாறு விளக்கப்பட்டுள்ளது?
4. இயேசு நாமமே உற்ற துணை எனக் கூறக் காரணம் யாது?

பயிற்சி

1. உன்னடி, இவ்வையகம், செழுநீர், செஞ்சடை, கருமுகில், பேரொளி, ஈதலால்.—இவற்றைப் பிரித்துக் காட்டுக.

2. கமலம் + கண், புனல் + கங்கை, பெருமை + தலம், துணை + எனக்கு—இவற்றைச் சேர்த்துக் காட்டுக.

3. இப்பாடல்களிலிருந்து இறைவனது இலக்கணத்தைத் தொகுத்து எழுதுக.

4. வண்ணன், நாமம், வரம், வையகம், தொழுவார், இரங்கி, அருள் செய், கருத்தன், பயன்.—இவற்றை உங்கள் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறுக.

86710
TB 0317 NS1

II. இயற்கை

1. திரிகூட மலைச் சிறப்பு

சயிலைஎனும் வடமலைக்குத் தெற்குமலை அம்மே!
கனகமக மேருவென நிற்குமலை அம்மே!
கயிலைமலை தென்மலைக்கு வடக்குமலை அம்மே!
சகலமலை யுந்தனக்குள் அடங்குமலை அம்மே!
வயிரமுடன் மாணிக்கம் விளையுமலை அம்மே!
வாளிரவி குழைகளூடு நுழையுமலை அம்மே!
துயிலுமவர் விழிப்பாகி அகிலமெங்கும் தேடும்
துங்கர்**திரி கூடமலை** எங்கள்மலை அம்மே! (1)

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்.(2)
செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப்பந் தடிக்கும்;
தேனலர்சண் பகவாசம் வானுலகில் வெடிக்கும். (3)
கூனல்இளம் பிறைமுடித்த வேணிஅலங் காரர்
குற்றாலத் திரிகூட மலைஎங்கள் மலையே. (4)

—திரிகூட ராசப்பக் கவிராயர்

திருக்குற்றாலம் என்பது திருநெல்வேலி மாவட்டத்துள் உள்ள சிவத் தலம். அவ்வூரைப் பற்றிய குறவஞ்சி என்னும் நூல் குற்றாலக் குறவஞ்சி எனப்படும். இதனைப் பாடிய திரிகூட ராசப்பக் கவிராயர் திருக்குற்றாலத்துக்குப் பக்கத்து ஊரினர்; 18-ஆம் நூற்றாண்டினர். குறவஞ்சி - குறப் பெண், குறத்திப் பாட்டு. இப் பாட்டில் குற்றால மலைவளம் கூறப்பட்டுள்ளது.

1. கனக - பொன்மயமான. சயிலமலை - குற்றாலத்துக்குத் தெற்கில் உள்ளது. வான் - ஒளி பொருந்திய. குழைகள்-தளிர்கள். துங்கர் - தூய்மையானவர், சிவபெருமான். துயிலுமவர் - திருமால். இரவி - சூரியன்.

2. மந்தி - பெண்குரங்கு. வான்கவிகள் - பெரிய குரங்குகள்.

3. அலர் - மலர்.

4. கூனல் - வளைந்த. வேணி - சடை.

2. மழைப் பாடல்

ஆற்றுவெள்ளம் நாளைவரத் தோற்றுதேகுறி ;—மலை
யாளமின்னல் ஈழமன்னல் சூழமின்னுதே ;
நேற்றுமின்றும் கொம்புசுற்றிக் காற்றடிக்குதே;—கேணி
நீர்ப்படு சொறித்தவளை கூப்பிடுகுதே.
சேற்றுநண்டு சேற்றைக்கிள்ளி ஏற்றடைக்குதே ;–மழை
தேடியொரு கோடிவானம் பாடியாடுதே ;
போற்றுதிரு மாலழகர்க் கேற்றமாம் பண்ணைப்
புள்ளிப்பள்ளர் ஆடிப்பாடித் துள்ளிக்கொள்ளுமே.

மேகமெல்லாம் ஒன்ருய்க்கூடித் தான்கறுக்குதே ;–மெத்த
மின்னல்மின்னி வாசவன்கை வில்லெடுக்குதே ;
நாகரிகப் பொதியமலைக் காற்றடிக்குதே ;—கொண்டல்
நாலுதிக்கும் கோடையிடி தானிடிக்குதே ;
ஏகபோக மாமரத்தில் குயில்கள்கூவுதே ;—மழைக்(கு)
ஏற்றமாம் சொறித்தவளை கூப்பிடுகுதே ;
ஆகையினுல் எங்கள்திருக் கூடல்நகரில்
அந்திநேர மெல்லாமழை வந்துபெய்யுமே. (2)

—அழகர் பள்ளு

அருஞ்சொற்பொருள்

பள் - பள்ளச்சாதி. பள்ளு - பள்ளச் சாதியாரின் வாழ்க்கை விவரங்களைக் கூறும் சிறு நாடகநூல்; நாடகப் பிரபந்த வகையுள் ஒன்று.

1. குறி - அடையாளம். கேணி - கிணறு. பண்ணை - வயல். பள்ளர் - உழவர்.

2. வாசவன் - இந்திரன். கொண்டல் - நீர் உண்ட மேகம். கூடல் நகர் - திருமுக்கூடல். அந்திநேரம் - மாலைக்காலம்.

III. தொழில்

1. பனைமரம்

பனைமரமே ! பனைமரமே !
ஏன்வளர்ந்தாய் ? பனைமரமே !
நான்வளர்ந்த காரியத்தை
நாட்டாரே ! சொல்லுகின்றேன் :
படுக்க நல்ல பாய்ஆவேன் ;
வசிக்க நல்ல வீடாவேன் ;
வெட்ட நல்ல விறகாவேன் ;
வீடுகட்ட மரமாவேன் ;
கட்டநல்ல கயிருவேன் ;
கன்று கட்டத் தும்பாவேன் ;
மட்டமுள்ள உறியாவேன் ;
மாடுகட்டத் தும்பாவேன் ;
பலத்தசுமைச் சால்களுக்குப்
புரிமணையும் நானுவேன் ;
எழுதுகின்ற பிள்ளைகட்கே
எழுத்தாணிக் கூடாவேன் ;
ஓதுகின்ற பிள்ளைகட்கே
ஓலைத்தடுக்கும் நானுவேன் ;
நனைந்துவரும் பேர்களுக்கு
நல்லகுடை நானுவேன் ;
பசித்துவரும் பேர்களுக்குப்
பனம் பழமும் நானுவேன் ;
சித்திரக் கோடையிலே
சிறந்த நல்ல நுங்காவேன் ;
இராமாயணம் என்னுலே ;
பாரதமும் என்னுலே ;
வர்த்தகமும் செட்டிகளும்

வழியறிவ தென்னாலே ;
பலசரக்கு மண்டியிலே
பத்திரமாய் நானிருப்பேன் ;
ஏரிகரை மீதினிலே
எந்நாளும் வீற்றிருப்பேன்.

—பழைய பாடல்

ஓதுகின்ற - படிக்கின்ற. சித்திர - அழகிய, கோடைக்காலம்-வெய்யிற்காலம்.

2. நூல் நூற்றல்

பல்லவி

ஆடு ராட்டேசுழன் ருடு ராட்டே

அனுபல்லவி

சுழன்றுசு ழன்றுசு ழன்ருடுராட்டே—இனிச்
சுயராஜ்யம் வந்ததென்று ஆடுராட்டே.

சரணங்கள்

ஏழைகள்கண் ணீர்சொரிய மிகவருந்திப்—பல
எத்துகள்செய் தேபிழைக்கும் மனிதரெல்லாம்
வாழமுடி யாதினிமேல் வஞ்சனையினால்—அவர்
வாழ்க்கை திருந்து மென்று (ஆடு)

பட்டணத்து வீதிகளில் சுற்றியலைந்து—மிகப்
பாடுபடும் கிராமத்துப் பத்தினிப் பெண்கள்
இஷ்டமுடன் தங்குடிசை நிழலிருந்து—நூல்
இழைத்துப் பிழைப்ப ரென்று (ஆடு)

உழுது நெய்துபல தொழில்செய்து—பொருள்
உதவும் வாணிகமும் முயல்வ தல்லால்
தொழுது பணிபுரியும் தொழில்கள் எல்லாம்
தோல்வி அடையு மென்று (ஆடு)

வம்பளந்து வீண்பொழுது போக்கமாட்டார் ;—
வாசலிலே கூட்டமிட்டுப் பேசமாட்டார் ; [பெண்கள்
துன்பமில்லை சோம்பியவர் தூங்கமாட்டார்—குடி
சுத்தப்படும் என்று சொல்லி (ஆடு)

அந்நியர்கள் நூல்கொடுத்து ஆடைகொடுத்து—நம்
அங்கத்தை மூடுகின்ற பங்கமொழியும் ;
கன்னியர்கள் நூற்கப்பல காளைகள்நெய்ய—நாம்
காத்துக்கொள்வோம் மானமென்று ஆடுராட்டே.
(ஆடு)

—நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை

நாமக்கல் கவிஞர் நமது மாகாண அரசாங்கப் புலவராவர். இவர் வேளாளர் ; நாமக்கல் என்னும் ஊரினர் ; சிறைசென்ற தேசபக்தர் ; இனிய—எளிய பாடல்களைப் பாடிப் புகழ்பெற்றவர்.

அருஞ்சொற்பொருள்

1. எத்துக்கள் - தந்திரங்கள்
3. தொழுது - பணிந்து. பணி - வேலை.
4. வம்பு - வீண்பேச்சு. அளந்து - பேசி.
5. அன்னியர் - வெளிநாட்டார். பங்கம் - இழிவு. காளைகள்- காளைபோன்ற வலிமையுள்ள வாலிபர் ; உவமையாகு பெயர். அங்கம் - உடல்.

கேள்விகள்

1. பனைமரம் எவ்வெவ் வகையிற் பயன்படுகிறது ?
2. இராட்டைச் சுற்றுவதாற் பயன் என்ன ?
3. தொழுது பணி புரியும் தொழில்கள் எவை ?
4. 'பங்கம்'—எது ? அஃது எப்போது ஒழியும் ?

பயிற்சி

1. அந்நியர், அங்கம், காளைகள், கன்னியர்—இவற்றுக்கு உரிய வேறு சொற்களைச் சொல்லுக.

2. மானம், அந்நியர், தோல்வி, திருந்தும், ஒழியும்—எதிர்ச் சொற்களைக் கூறுக.

3. கண்ணீர், சுழன்ருடு, தங்குடிசை, பிழைப்பரென்று, நிழலிருந்து, வழியறிவது, சித்திரக்கோடை—இவற்றைப் பிரித்துக் காட்டுக.

4. பனைமரத்தின் தொண்டினை 15 வரிகளில் எழுதுக.

5. இராட்டினப் பாடலின் கருத்தைப் பத்து வரிகளில் வரைக.

IV. நீதி

1. நீதிவெண்பா

ஞானிகட்குக் கண்கள் பல

கண்ணிரண்டே யாவர்க்கும்; கற்ருேர்க்கு
[மூன்றுவிழி;
எண்ணும்விழி ஏழாகும் ஈவோர்க்கு;—நண்ணும்
அனந்தந் தவத்தால் அருண்ஞானம் பெற்ருேர்க்(கு)
அனந்தம் விழியென் றறி. (1)

நல்ல நெறி

கொம்புளதற் கைந்து; குதிரைக்குப் பத்துமுழம்;
வெம்புகரிக் காயிரந்தான் வேண்டுமே;—வம்புசெறி
தீங்கினர்தங் கண்ணில் தெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி. (2)

உருவு கண்டு மதித்தலாகாது

கற்பூரம் போலக் கடலுப் பிருந்தாலும்
கற்பூர மாமோ கடலுப்பு?—பொற்பூரும்
புண்ணியரைப் போல இருந்தாலும் புல்லியர்தாம்
புண்ணியரா வாரோ? புகல். (3)

நற்ருயர் ஐவர்

தன்னை யளித்தாள் தமையன் மனைகுருவின்
பன்னி யரசன் பயிறேவி—தன்மனையைப்
பெற்ருள் இவரைவர் பேசில் எவருக்கும்
நற்ருயர் என்றே நவில். (4)

நூல்வல்லானே சிறந்தவன்

கல்லார் பலர்கூடிக் காதலித்து வாழினுநூல்
வல்லான் ஒருவனையே மானுவரோ ?—அல்லாரும்
எண்ணிலா வான்மீன் இலகிடினும் வானகத்தோர்
வெண்ணிலா ஆமோ ? விளம்பு. (5)

—ஔவையார்

பல நீதிகளைக் கூறும் வெண்பாக்களைக் கொண்ட நூல் நீதி வெண்பா எனப்பட்டது. இதனைப் பாடிய ஔவையார் சங்க கால ஔவையாரின் வேறானவர் ; ஏறக்குறைய 200 ஆண்டுகட்கு முற்பட்டவர். இவர் பாக்கள் எளியவை ; அறவுரைகள் கொண்டவை.

அருஞ்சொற்பொருள்

1. ஈவோர் - கொடுப்போர். அனந்தம் - பல. அருள் - கருணை. கற்றோர்க்கு மூன்றும் விழி ‘ அறிவு ’ என்பது.

2. கரி - யானை. வம்பு - குறும்பு. நெறி - வழி.

3. பொற்பு - அழகு. புண்ணியர் - நல்லோர். புல்லியர் - அற்பர். உவமானம் - பாட்டில் வந்துள்ள தெரிந்த பொருள். அதைக் கொண்டு தெரிந்துகொள்வது உவமேயம்.

4. தன்னையளித்தாள்-தன்னைப்பெற்று வளர்த்தவள்; தாய். பன்னி - மனைவி. பயில் + தேவி = பயிறேவி = வாழ்க்கைப்பட்ட மனைவி. நல் + தாயர் = நற்றாயர்.

5. காதலித்து - விரும்பி. அல் - இருள். ஆர் - பொருந்திய. வான் மீன் - நட்சத்திரம். இலகிடினும் - விளங்கினும். வான் + அகத்து = ஆகாயத்தில். மானுவரோ - ஒப்பாவரோ ? எண் + இலா = எண்ணிலா = அளவற்ற.

கேள்விகள்

1. யார் யாருக்கு எத்தனை விழிகள் ?

2. எவ்வெவ்வுயிர்கட்கு எத்தனை முழம் தூரம் விலக வேண்டும் ?

3. தீங்கினரைக் கண்டால் என்ன செய்யவேண்டும் ?

4. “ கற்பூரம் போல ” என்னும் செய்யுளில் உவமானம் எது? உவமேயம் எது ?

5. நற்குயர் ஐவர் யாவர் ?

6. "கல்லார் பலர் கூடி" என்னும் செய்யுளில் உள்ள உவமானத்தையும் உவமேயத்தையும் பொருத்திக் காட்டுக.

பயிற்சி

1. எண்ணிலா, கடலுப்பு, கண்ணிரண்டு, அருண்ஞானம், கரிக்காயிரம், புண்ணியராவாரோ, என்றறி—இவற்றைப்பிரித்துக் காட்டுக.

2. தன்னை + அளித்தாள், இவர் + ஐவர், வான் + அகம், அகம் + ஓர், மரம் + ஐ.—இவற்றைச் சேர்த்துக் கூறுக.

3. ஒவ்வொரு செய்யுளின் பொருளை உங்கள் சொந்த நடையிற் கூறுக.

4. ஒன்று - ஒருவர் ; இரண்டு - இருவர் ; ஐந்து - ஐவர் ; பத்து - பதின்மர் ; ஒன்பது - ஒன்பதின்மர் ; எட்டு - எண்மர். இவற்றை நினைவில் வைக்கவும்.

2. நன்னெறி

இன்சொல்—வன்சொல்

இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே ;—பொன்செய்(து)
அதிர்வளையாய் ! பொங்கா தழற்கதிரால் தண்ணென்
கதிர்வரவால் பொங்கும் கடல். (1)

பெரியவர் இயல்பு

பெரியவர்தந் நோய்போல் பிறர்நோய்கண் டுள்ளம்
எரியின் இழுதாவர் என்க ;—தெரியிழாய் !
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண். (2)

கற்றவர் செயல்

கைம்மா(று) உகவாமல் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மால் இயல்உதவி தாம்செய்வர் ;—அம்மா!
முளைக்கும் எயிறு முதிர்சுவைநா விற்கு
விளைக்கும் வலியினதா மென்று. (3)

பேரறிஞர் இயல்பு

பேரறிஞர் தாக்கும் பிறர்துயரம் தாங்கியே
வீரமொடு காக்க விரைகுவார் ;—நேரிழாய் !
மெய்சென்று தாக்கும் வியன்கோல் அடிதன்மேல்
கைசென்று தாக்கும் கடிது. (4)

மேன்மக்கள் தன்மை

கற்ற அறிவினரைக் காமுறுவர் மேன்மக்கள் ;
மற்றவர்தாம் என்று மதியாரே ;—வெற்றிநெடும்
வேல்வேண்டும் வாள்விழியாய் ! வேண்டா புளிங்காடி
பால்வேண்டும் வாழைப் பழம். (5)

—சிவப்பிரகாச அடிகள்

ஆசிரியர் **சிவப்பிரகாச அடிகள்** வீரசைவர்; துறவறத்தினர். 300 ஆண்டுகட்கு முன் வாழ்ந்தவர். இவர் செய்துள்ள நூல்கள் மிகப்பல. இந்நூல், மனிதர் அறிந்து நடந்துகொள்ளவேண்டும் நல்வழிகளைக் கூறும் நாற்பது வெண்பாக்களைக் கொண்டது. ஆதலால் **நன்னெறி** எனப்பெயர் பெற்றது.

அருஞ்சொற்பொருள்

1. இருநீர் - மிக்க நீரையுடைய கடல். வியன் - பரந்த. உலகம் - உலகத்து மக்கள். இன் சொல் × வன்சொல். வளையாய் - வளையலை அணிந்த பெண்ணே. இவ்வாறு பெண்ணை முன்னிலைப்படுத்திக் கூறுதல் மகடூஉ முன்னிலை எனப்படும். மகடூஉ முன்னிலை × ஆடூஉமுன்னிலை. அழல் - வெப்பம். கதிர்- சூரியன்.

2. எரி - நெருப்பு. இழுது - நெய். மண்டு பிணி - மிக்க நோய். கலுழும் - அழும். பின் இரண்டு அடிகள் உவமானம்; முன் இரண்டடிகள் உவமேயம்.

3. கைம்மாறு - பதில் உதவி. உகவாமல் - விரும்பாமல். இயல் - செய்ய முடியும். எயிறு - பல். முதிர் சுவை - மிக்க ருசி.

4. பேரறிஞர் - பெருமை + அறிஞர், அறிவிற் சிறந்த பெரு மக்கள். நேர் - அழகு. கடிது - விரைந்து.

5. காமுறுவர் - விரும்புவர். மற்றவர் - கீழ் மக்கள். வாள் - ஒளி. புளிங்காடி - புளித்த காடி நீர். வேல் விழி - வேல்போன்ற அமைப்புடைய கண். வாள் விழி—ஒளி பொருந்திய கண்.

கேள்விகள்

1. இன்சொல், வன்சொல்—இவற்றைப்பற்றி ஆசிரியர் என்ன கூறுகிறர்? அவர் காட்டும் உவமானங்கள் யாவை?

2. கண்ணின் செயல் பெரியவர் செயலுக்கு உவமானமாவது எப்படி? நன்கு விளக்குக.

3. கற்றறிந்தோர் செயல் யாது? அதனை விளக்க வந்த உவமானம் யாது?

4. "கைசென்று தாங்கும் கடிது"—எதனை? இதற்கு உவமேயம் யாது?

5. கற்றவர் யாரால் மதிக்கப்படுவர்? யாரால் மதிக்கப்படார்? இவற்றை விளக்க வந்த உவமானங்கள் எவை?

பயிற்சி

1. பெரியவர், கற்றறிந்தோர், பேரறிஞர்—இவர்தம் இயல்புகளை உங்கள் சொந்த நடையில் எழுதுக.

2. இன்சொல், வன்சொற்களைப்பற்றி நீங்கள் அறிந்ததைக் கூறுக.

3. பேரறிஞர், மேன்மக்கள், கற்றறிந்தேர், கண்டுள்ளம், இழுதாவர், வீரமொடு.—இவற்றைப் பிரித்துக் காட்டுக.

4. வேல் விழி, வாள் விழி—இவற்றின் வேறுபாட்டை விளக்குக.

5. முதற் செய்யுளில் உள்ள எ. ப. செ. கூறுக.

6. ஐந்து பாடல்களிலிருந்தும் அறுவகைப் பெயர்ச் சொற்களுக்கு உதாரணம் தருக.

7. மகிழாது, கலுழும், செய்வர், கண்டு, விரைகுவார், தாக்கும், காமுறுவர்.—இவற்றுக்கு உரிய வேர்ச் சொற்களைக் கூறுக.

3. திருக்குறள்

தாயின் மகிழ்ச்சி

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய். (1)

அன்பிற்குத் தாழ் இல்லை

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்? ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும். (2)

திருமகள் உறையும் இடம்

அகனமர்ந்து செய்யா ளுறையு முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில். (3)

ஒருவர்க்குரிய அணி

பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்(கு)
அணியல்ல மற்றுப் பிற. (4)

உலகினும் பெரிது

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது. (5)

இன்பமும் புகழும்

ஒறுத்தார்க் கொருநாளை இன்பம்; பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ். (6)

பொறாமையின் கொடுமை

அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும். (7)

திருமகள் சேருமிடம்

அறனறிந்து வெஃகா வறிவுடையார்ச் சேருந்
திறனறிந் தாங்கே திரு. (8)

நட்பாடல் அறியாதவர்

பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாடல் தேற்ரு தவர். (9)

உள்ளூர்ப் பழ மரத்தை ஒப்பவன்

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்ருற் செல்வம்
நயனுடை யான்கட் படின். (10)

தந்து மகிழ்வதே இன்பம்

ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர். (11)

உயிர்க்குப் பயனுவன

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல(து)
ஊதிய மில்லை உயிர்க்கு. (12)

தோற்றத்தாற் பயனில்லை

வானுயர் தோற்றம் எவன்செய்யுந் தன்னெஞ்சந்
தானறி குற்றப் படின். (13)

எண்ணுவதும் தீது

உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கொள்வேம் எனல். (14)

சான்ருேர் விளக்கு

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்ருேர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. (15)

சினம் தவிர்க

மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய
பிறத்தல் அதனுன் வரும். (16)

முற்பகல்–பிற்பகல்

பிறர்க்கின்னு முற்பகற் செய்யின் தமக்கின்னு
பிற்பகல் தாமே வரும். (17)

வேந்தர்க்குரிய குணங்கள்

அஞ்சாமை யீகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற் கியல்பு. (18)

கற்றவர்–கல்லாதவர்

கண்ணுடையர் என்பவர் கற்ருேர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். (19)

அறிவின் அளவு

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு. (20)

பெருமை தருவன

எனைத்தானு நல்லவை கேட்க ; அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும். (21)

அறிவுடையார் இயல்பு

அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர். (22)

மன்னன் கடன்

தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பின்
என்குற்ற மாகும் இறைக்கு. (23)

வலிமையுள் வலிமை

தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை. (24)

மயிற் பீலியாலும் அச்சு முறியும்

பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின். (25)

மனம்—இனம்

மனத்தானும் மாந்தர்க் குணர்ச்சி ; இனத்தானும்
இன்னான் எனப்படுஞ் சொல். (26)

கொக்குக் கற்பிக்கும் பாடம்

கொக்கொக்க கூம்பும் பருவத்து ; மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து. (27)

பெருமையும் சிறுமையும்

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல். (28)

சுற்றம் உடைய பெருமகன்

பெருங்கொடையான் பேணான் வெகுளி யவனின்
மருங்குடையார் மாநிலத் தில். (29)

நல்லாட்சி

வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின். (30)

மழையும் மன்னன் அருளும்

துளியின்மை ஞாலத்திற் கெற்றற்றே வேந்தன்
அளியின்மை வாழு முயிர்க்கு. (31)

ஊக்கமுடைமை

உள்ளம் உடைமை உடைமை ; பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும். (32)

முயற்சி பெருமை தரும்

அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும் ;
பெருமை முயற்சி தரும். (33)

உறவினரைத் தாங்குந் தூண்

இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண். (34)

அமைச்சனுக்குரிய ஐந்து

வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ(டு)
ஐந்துடன் மாண்ட தமைச்சு. (35)

வறுமை நன்று

பழிமலைந் தெய்திய ஆக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை. (36)

அகமும் முகமும்

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம். (37)

நாட்டின் இயல்பு

தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு. (38)

அறிஞர்-பேதையர் நட்பு

நிறைநீர நீரவர் கேண்மை ; பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு. (39)

மாசற்றார் நட்புக் கொள்க

மருவுக மாசற்றார் கேண்மை ; ஒன்றீத்தும்
ஒருவுக வொப்பிலார் நட்பு. (40)

நற்குடிப் பிறந்தார் இயல்பு

அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர். (41)

கவரிமான் போன்றவர்

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னர்
உயிர்நீப்பர் மானம் வரின். (42)

மேலோர்-கீழோர்

மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர்; கீழிருந்தும்
கீழல்லர் கீழல் லவர். (43)

உழவர் சிறப்பு

இரவார் இரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர். (44)

நா காக்க

யாகாவார் ஆயினும் நாகாக்க; காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. (45)

பொய்யாது ஒழுகல்

உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன். (46)

கனி-காய்

இனிய வுளவாக இன்னாத கூறல்
கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று. (47)

மருந்து

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின். (48)

எண்ணிச் செயலாற்றுக

எண்ணித் துணிக கருமம் ; துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு. (49)

பகைவர்க்கும் நல்லன செய்க

இன்னு செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல். (50)

—திருவள்ளுவர்

திருக்குறள் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது. இந்நூல் உலகினரால் மனமுவந்து வரவேற்கப்படுகிறது. யாவர்க்கும் எல்லாக் காலங்கட்கும் மாருத கருத்துக்கள் கொண்ட இந்நூல், 'உலக மறை' எனப்படுகிறது. அறம் - பொருள் - இன்பம் என்ற மூன்று பகுதிகளை இந்நூல் கொண்டுள்ளதால், இதற்கு 'முப்பால்' என்ற பெயரும் உண்டு. இந்நூலில் 1330 குறட்பாக்கள் உள்ளன. தமிழர்கள் இதனைத் தமிழ் மறை எனப் போற்றுகின்றனர். திருவள்ளுவர் ஏறத்தாழ 1800 ஆண்டுகட்கு முற்பட்டவர்.

அருஞ்சொற்பொருள்

1. ஈன்ற - பெற்ற. உவக்கும் - சந்தோஷப்படும். சான்ருேன் - அறிவிற் பெரியோன்.

2. தாழ் - தாழ்ப்பாள். ஆர்வலர் - அன்பர். புல் + கண் + நீர் - புல்லிய கண்ணீர். பூசல் - எல்லோரும் அறிய அன்பினைத் தூற்றுதல்.

3. செய்யாள் - திருமகள். ஓம்புவான் - பாதுகாப்பான்.

4. அணி - அழகு, ஆபரணம். பிற - மெய்க்கு அணியும் பிறவகை அணிகள். உறையும் - வாழ்வாள்.

5. ஞாலம் - உலகம். மாண - காட்டிலும். நன்றி - உதவி.

6. ஒறுத்தார் - தண்டித்தார். பொன்றும் - அழியும்.

7. திரு - செல்வம். செற்று - அழித்து. தீயுழி - நரகத்தில்.

8. வெஃகா - விரும்பாத. திரு - செல்வம். உய்த்துவிடும் - செலுத்திவிடும்.

9. கேளிர் - உறவினர். பக - பிரிக்க. நக - கூடிமகிழுமாறு.

10. பயன் மரம் - பழுத்த மரம். நயன் - நயம். படின் - உண்டாயின்.

11. உவக்கும் - மகிழும். வன்கணவர் - கருணையற்றவர்.

12. இசை - புகழ். ஊதியம் - பயன்.

13. எவன் - என்ன. தோற்றம் - காட்சி. தான் அறி குற்றம் - தான் குற்றம் என்று அறிந்தது. படின் - மனம் தாங்குமானால்.

14. உள்ளலும் - நினைத்தலும். கள்வேம் - வஞ்சிப்போம்.

15. பொய்யா - பொய்யாத.

16. வெகுளி - கோபம். மறத்தல் - மறந்துவிடுக. தீய பிறத்தல் - தீயவை உளவாதல்.

18. எஞ்சாமை - இடைவிடாது நிற்றல்.

20. தொட்டனைத்து - தோண்டியவளவு. கற்றனைத்து - படித்தவளவு.

21. எனைத்தானும் - சிறிதேனும். நல்லவை - உறுதிப் பொருள். அனைத்தானும் - அத்துணையாயினும். ஆன்ற - நிறைந்த.

22. ஆவது - வரக்கடவது. அறிவார் - முன்னறிய வல்லார். அஃது - வரக்கடவதனை. அறிகல்லாதவர் - முன்னறிய மாட்டாதவர்.

23. நீக்கி - விலக்கி. காண்கிற்பின் - காணவல்லவனாயின்.

24. தமர் - தம்மவர். தலை - முதன்மையுடையது.

25. பீலி - மயிலிறகு. சாகாடு - வண்டி. சால - மிகுதியும். அச்சிறும் - அச்சு + இறும் - அச்சு முறியும்.

26. இனத்தான் - நண்பனால். இன்னான் - இத்தன்மையன்.

27. கூம்பும் பருவம் - வினைமேல் செல்லாதிருக்கும் காலம். சீர்த்த - கைகூடிய.

28. கட்டளைக்கல் - உரைகல்.

29. பேணுன் - விரும்பான். மருங்கு - அண்மை ; மருங்கு உடையார் - சுற்றம் உடையவர்.

30. கோடாது - கோணுது. அதூஉம் - அளபெடை.

31. துளி - மழைத்துளி. இன்மை - இல்லாமை. அளி - அருள்.

32. உள்ளம் உடைமை - ஊக்கம் உடைமை. உடைமை - நிலைநின்ற செல்வமாகும்.

33. அசாவாமை - கலங்காமை. பெருமை - (முடிப்பதற்கு ஏற்ற) பெருமையை.

34. விழையான் - விரும்பானுகி. கேளிர் - சுற்றத்தார்.

35. வன்கண் - உறுதியான தன்மை. ஆள்வினை - முயற்சி.

36. மலைந்து - கொண்டு. ஆக்கம் - செல்வம். கழி - மிகுந்த. நல்குரவு - வறுமை.

37. அடுத்தது - தன்னை அடுத்த பொருளினது நிறத்தை. கடுத்தது - தோன்றியது.

38. தள்ளா - தவருத. விளையுள் - விளைச்சல். தக்கார் - அறிஞர்.

39. நீரவர் - அறிவுடையவர். கேண்மை - நட்பு. நிறை நீர - பிறை நிறையுந்தன்மை போல நாடோறும் நிறையுந் தன்மையவாம். பேதையர் - மூடர். பின் நீர - நிறைமதி பின் குறையுந்தன்மை போல நாடோறும் குறையுந்தன்மையவாம்.

40. மருவுக - கொள்க. மாசு - குற்றம். ஒருவுக - தள்ளுக.

41. குடி - நற்குடி. குன்றுவ - இழிந்தவை.

42. மா - மிருகம். நீப்பர் - கைவிடுவர்.

43. மேல் - மேலிடம். கீழ் - கீழிடம்.

44. கைசெய்து - தம் கையால் உழுதுண்ணலைச் செய்து. ஊண் - உண்ணுதலை. மாலையவர் - இயல்பாகவுடையவர். இரப்பார் - யாசிப்பவர். கரவாது - ஒளியாது.

45. யா காவார் - எதனைக் காவாவிடினும். நா காக்க - நாவைக் காக்க வேண்டும்.

47. இன்னுத - கடுமையான. கவர்ந்தற்று - கொண்டது பாலும்.

48. யாக்கை - உடல். அற்றது - சீரணமானது. போற்றி - அறிந்து.

49. இழுக்கு - குற்றம்.

50. இன்ன - தீயவை. ஒறுத்தல் - தண்டித்தல். நாண - வெட்கிட. நன்னயம் - நல்லன.

கேள்விகள்

1. தாய் எப்பொழுது 'பெரிதுவக்கும்'?

2. 'ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும்.'—இதன் பொருள் யாது?

3. செய்யாள் எங்கு உறையும்? ஏன்?

4. ஒருவருக்கு அணியாவன யாவை?

5. 'ஞாலத்தின் மாணப் பெரிது.'—எது? எப்படி?

6. ஒறுத்தார், பொறுத்தார்—இவர்களைப் பற்றி வள்ளுவர் யாது கூறுகிருர்?

7. 'பாவி' யார்? அவன் என்ன செய்வான்?

8. திருமகள் யாரைச் சேருவாள்?

9. 'பகச் சொல்லிக் கேளிர் பிரிப்பர்'—யாவர்? இதன் பொருள் யாது?

10. 'பயன் மரம் உள்ளூர்ப் பழுத்தற்ருல்'—இதன் பொருள் யாது? இது கூறப்பெற்ற சந்தர்ப்பம் யாது?

11. 'வன்கணவர்' இயல்பு யாது? அவர் எதனை அறியார்?

12. உயிர்க்கு ஊதியம் எது?

13. 'வானுயர் தோற்றம் எவன் செய்யும்?'—இக்கேள்வி ஏன் எழுந்தது?

14. 'உள்ளத்தால் உள்ளலும் தீது.'—எது?

15. சான்ருேர்க்கு உரிய விளக்கு யாது!

16. 'தீய பிறத்தல் அதனுல் வரும்'—எதனுல்? இதைக் கூறி ஆசிரியர் வற்புறுத்துவது யாது?

17. முற்பகல், பிற்பகல்—இவற்றை ஆசிரியர் ஆளும் சந்தர்ப்பம் யாது?

18. வேந்தர்க்கு இருக்கவேண்டும் குணங்கள் எவை ?

19. கற்றவர், கல்லாதவர்—இவர்க்குள்ள வேறுபாடு யாது ?

20. மணற்கேணியின் இயல்பு யாது? அஃது எதனை விளக்க வந்தது ?

21. ‘அனைத்தானும் ஆன்ற பெருமை தரும்.’—எவை ?

22. அறிவுடையார், அறிவிலார்—வேறுபாடு யாது ?

23. ‘என்குற்ற மாகும் இறைக்கு.’—எப்பொழுது ?

24. ‘வன்மையுள் எல்லாம் தலை.’—எது ?

25. பீலிபற்றி ஆசிரியர் கூறுவது யாது? அவர் அதனால் கூறும் அறிவுரை யாது ?

26. மனம், இனம் பற்றி ஆசிரியர் கூறுவன யாவை ?

27. கொக்கு எதனை விளக்கக் கூறப்பட்டுள்ளது ?

28. கட்டளைக் கல்—எது ? எவற்றுக்கு ?

29. சுற்றம் உடைய பெருமகன் யாவன் ?

30. மன்னற்கு உண்மையான வெற்றியைத் தருவது எது?

31. துளி, அளி பற்றி வள்ளுவர் கூறுவன யாவை ?

32. ஊக்கமுடைமை பற்றி ஆசிரியர் கூறுவது யாது ?

33. எவன் யாருக்குத் தூண்போன்றவன் ?

34. ‘ஐந்துடன் மாண்ட தமைச்சு.’—ஐந்து எவை ?

35. சான்றோர் நல்குரவையே விரும்புவர்.—எப்பொழுது ?

36. பளிங்கின் இயல்பு யாது? அஃது எதனை விளக்க வந்தது ?

37. எது ‘நாடு’ என்று சொல்லப்படும் ?

38. அறிஞர் நட்பும், பேதையர் நட்பும் எவை போன்றவை ?

39. எதனை ‘மருவுக’? எதனை ‘ஒருவுக’?

40. நற்குடிப் பிறந்தவரது இயல்பு யாது ?

41. கவரிமாவின் இயல்பு யாது? அஃது எதனை விளக்கக் கூறப்பட்டது ?

42. மேலவர், கீழவர் யாவர் ?

43. உழவரது சிறப்பு யாது ?

44. 'நா காக்க.'—ஏன்?

45. எவன் 'உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்'?

46. கனி எது? காய் எது?

47. யாக்கைக்கு எப்பொழுது மருந்து வேண்டா?

48. இன்னா செய்தாரை ஒறுத்தல் எப்படி?

பயிற்சி

1. சான்றோன், விருந்து, பணிவு, இன்சொல், நன்றி, ஞானம், அழுக்காறு, கேளிர், உள்ளல், எஞ்சாமை.—இவற்றை உங்கள் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறுக.

2. இன்சொல், பெரிது, அறம், உள்ளூர், இன்பம், குற்றம், தீயவை, இன்னா, அஞ்சாமை, கற்றோர், பெருமை, அறிவுடையார், பெரியார்—எதிர்ச் சொற்களைச் சொல்லுக.

3. இந்த ஐம்பது குறட்பாக்களைப் படித்ததிலிருந்து திருக்குறளைப் பற்றி உங்கள் எண்ணத்தை 15 வரிகளில் எழுதுக.

4. என + கேட்ட, கண் + நீர், அணி + அல்ல, அழுக்காறு + என, அறன் + அறிந்து, பக + சொல்லி, அறிவு + இலார், அச்சு + இறும்.—இவற்றைச் சேர்த்துக் கூறுக.

5. குத்தொக்க, கட்டளைக்கல், பெருங்கொடை, வேலன்று, தூளியின்மை, துடைத்தூன்றும், கற்றறிதல், தாழ்விலா, பின்னீர, சொல்லிழுக்கு, மருந்தென,—பிரித்துக் காட்டுக.

6. இக்குறள்களிலிருந்து அறுவகைப் பெயர்கட்கு உதாரணங்கள் தருக.

7. திருக்குறளின் சிறப்பினை நீங்கள் அறிந்த அளவு விளக்கி 20 வரிகள் எழுதுக.

8. சேர்வது, நட்பு, முயற்சி, காட்டும், நீப்பர், காக்க, துணிக.—வேர்ச் சொற்களைக் கூறுக.

V. கதை

சிங்கத்தை முயல் கொன்ற கதை

குறுமுயல் சிங்கந் தன்னைக்
கொன்ற(து)ஒன் றுண்டே தென்னில்,
செறியுமோர் காட்டி லேயோர்
சிங்கமுண்(டு); அந்தக் காட்டில்
உறுவிலங்(கு) அனைத்தும் வேட்டை
யாடியூன் மிகவுந் தின்று
வெறிகொடு திரியும் நாளில்
விலங்கெலாம் ஒருங்கு கூடி, (1)

"ஆணிளஞ் சிங்க மே! உன்
அடவியில் விலங்கை யெல்லாம்
வீணிலே கொல்ல வேண்டா;
விதத்தினில் தினமொன் றாக
ஊணுனக் களிப்போம்," என்ன,
உண்மையாக் கொண்டு சிங்கம்
ஆணையும் இட்டொவ் வொன்றாய்
அருந்தியங் கிருக்கும் நாளில், (2)

தனிமுயல் ஒன்றுக் கோர்நாள்
தன்முறை வருத லோடும்,
'இனியது விடாது நம்மை;
எனினும்ஓர் எடுப்பெ டுத்து
வினையையிப் போது செய்து
வென்றுநாம் உய்ந்தோ மாகில்
நனிவிலங் கனைத்தும் உய்யும்;
நமக்குநற் புகழுண்(டு)' என்றே, (3)

கருதியச் சிங்கத் தின்தன்
கடும்பசி வேளை தப்பி
வருதலும், முயலை நோக்கி,
" மன்னன்நம் பசிவே ளைக்குப்
பெருமத வேழ மேனும்
பிந்துவ தில்லை ; பிந்தி
வருவதென் ? உரை நீ, " என்று
மனந்தனிற் சினந்து கூற, (4)

" ஐய,நின் பசிவே ளைக்கே
அடியனேன் வந்தேன் ; ஆங்கோர்
வெய்யசிங் கத்தைக் கண்டு
வெருவியங் கொளித்தி ருந்தேன் ;
பையவே சிங்கம் ஆங்கோர்
பருமுழை புகுந்த பின்னர்த்
துய்யவுன் பக்கல் வந்தேன்
சுவாமி!"என்(று) இறைஞ்சி நிற்க, (5)

சிங்கம் " நாம் அல்லால் வேறோர்
சிங்கம்நீ கண்டா யாகில்,
அங்கதைக் காட்டு வா " என்(று)
அழைத்தலும், அழைத்துப் போயோர்
பங்கமும் புனலும் சேர்ந்த
பாழ்ந்துர வதனைக் காட்ட,
அங்கதை யெட்டிப் பார்த்த(து) ;
அதனிழல் உருவந்தோன்ற, (5)

தன்னுரு நிழலைத் தானே
சத்துரு வென்று பாய்ந்து
துன்னுபங் கத்த முந்தித்
துளங்கியே யுயிரி ழந்த(து)

என்னலால், உபாயத் தாலே
யாரையும் வெல்ல லாமென்(று)
இன்னமோர் நண்டு கொக்கை
ஈர்ந்ததோர் கதையும் சொல்லும். (7)

—வீர மார்த்தாண்ட தேவர்

பஞ்ச தந்திரப் பாடல்களைப் பாடிய வீரமார்த்தாண்டதேவர் காலம் திட்டமாகக் கூறக்கூடவில்லை. இவர் பாடல்கள் எளியவை. நட்பின் பேறு, நட்புப் பிரித்தல், அடுத்துக் கெடுத்தல், நன்மைக் குத் தீமை, ஆராயாது செய்தல் ஆகிய இவை பஞ்ச தந்திரங் களாகும்.

அருஞ்சொற்பொருள்

1. குறுமுயல் - குறுமை+முயல், சிறு முயல். செறியும் - மரங்கள் நெருங்கிய. விலங்கு - மிருகம். ஊன் - இறைச்சி.

2. அடவி - காடு. விதம் - வகை. ஊண் - உணவு. ஆணை - சத்தியம். அருந்தி - தின்று.

3. உய்ந்தோம் - பிழைத்தோம். எடுப்பு - யோசனை. ஊண் - உணவு. நனி - மிக்க.

4. வேழம் - யானை.

5. வெய்ய - கொடிய. வெருவி - அஞ்சி. பரு - பெரிய. முழை - குகை. துய்ய - குற்றமற்ற. பைய - மெதுவாக.

6. பங்கம் - சேறு. துரவு - கிணறு.

7. சத்துரு - பகைவன். துளங்கி - நடுங்கி. உபாயம் - தந்திரம்.

கேள்விகள்

1. விலங்குகள் சிங்கத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தம் யாது?

2. முயல் செய்த யோசனை யாது?

3. அஃது ஏன் குறித்த நேரம் தவறிச் சிங்கத்தினிடம் சென்றது?

4. சிங்கம் சினந்து கூறியது யாது?

5. முயல் பயங்கொண்டதுபோலப் பாசாங்கு செய்து என்ன சொன்னது?

6. பிறகு சிங்கமும் முயலும் எங்கே சென்றன? ஏன்?
7. முயல் சிங்கத்தை எவ்வாறு ஏமாற்றி வெற்றி பெற்றது?
8. இக்கதை உணர்த்தும் நீதி யாது?

பயிற்சி

1. சிங்கமுண்டு, விலங்கெலாம், ஊனுனக்கு, புகமுண்டு, கடும்பசி, எடுப்பெடுத்து, அங்கதை, உயிரிழந்த—இவற்றைப் பிரித்துக் காட்டுக.

2. உண்டு, விடாது, வேண்டும், பிந்துதல், பைய, தோன்ற—எதிர்ச் சொற்களைக் கூறுக.

3. துய்ய, வெய்ய, பைய, முழை, ஊண், ஊன், ஆணை—இவற்றை உங்கள் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்லுக.

4. அடவி, விதம், தினம், ஊண், மன்னன், வேழம், உரை, சினந்து—இவற்றிற்குப் பொருள் கூறுக.

5. பயந்து, பரிசுத்தமான, நீர், பகைவன், நடுங்கி, யோசனை—இப்பொருள்களில் வந்துள்ள சொற்களை இப்பாடலிலிருந்து சுட்டுக.

6. சிங்கம் இக்கதையைக் கூறுவதுபோலக் கூறுக.

7. முயல் இக்கதையைச் சொல்லுவது போலச் சொல்லுக.

8. இக்கதையை ஒரு நாடகமாக நடித்துக் காட்டுக.

9. இப்பாக்களிலிருந்து வினையெச்சம், பெயரெச்சம், வினைமுற்று இவற்றுக்கு நந்நான்கு உதாரணம் தருக.

10. இப்பாடங்களிலிருந்து அறுவகைப் பெயர்கட்கு உதாரணம் தருக.

11. இக்கதையை 15 வரிகளில் எழுதுக.

VI. பலசுவை

1. அத்தைமகள் சமையல்

கரிக்காய் பொரித்தாள் ;
கன்னிக்கா யைத்தீத்தாள் ;
பரிக்காயைப் பச்சடியாய்ப்
பண்ணினுள்—உருக்கமுள்ள
அப்பைக்காய் நெய்துவட்டல்
ஆக்கினுள் அத்தைமகள் ;
உப்புக்காண் சீ! சீ! உமி. (1)

—காளமேகப் புலவர்

2. கம்பரது சீற்றம்

மன்னவனும் நீயோ ? மண்ணுலகும் இவ்வளவோ ?
உன்னையோ யான்புகழ்ந்திங் கோதுவதும் ?—என்னை
விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ? உண்டோ
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு ? (2)

—கம்பர்

3. கல்விச் சிறப்பு

கல்வியே உலக மக்கள்
கருதிடும் உண்மைச் செல்வம்;
கல்வியை யறிந்தோர் அஃது
கருந்தனம் என்ருர் ; மற்றச்

செல்வமோ அழிந்து போகும் ;
சிறுமையும் விளைக்கும் ; ஆனால்
கல்வியோ ஊற்று நீர்போல்
தந்திடப் பெருகுங் கண்டீர். (1)

கல்வியின் பயனை மக்கள்
கண்டிடு வாரே யானால்,
எல்லையில் ஊக்கங் கொண்டே
இனிதுடன் நாளுங் கற்பர் ;
நல்லறி வதனால் சேரும் ;
நனிதுயர் யாவுந் தீரும் ;
புல்லறி வகலும் ; உண்மைப்
பொருளெலாம் விளங்கும் நன்றே. (2)

அறிவினை யூட்டுங் கல்வி ;
அவிவேகம் போக்குங் கல்வி ;
சிறப்பினைக் கொடுக்குங் கல்வி
தெளிவான தர்க்கக் கல்வி ;
நெறிமுறை வளர்க்குங் கல்வி
நேர்மை விஞ்ஞானக் கல்வி ;
மறுவறு கல்வி யாலே
மக்களுக் கறிவுண் டாகும். (3)

கல்வியில் ஊக்கம் வேண்டும் ;
கற்பதில் தெளிவு வேண்டும் ;
பல்விதத் தொழிலா ராய்ச்சி
பண்ணலில் ஆசை வேண்டும் ;

செல்வமும் அதுவே யாகும் ;
　　சீர்மையும் பெருகும் ; மக்கள்
நல்லதோர் இன்ப வாழ்வை
　　நாடுவர் ; கல்வி வாழி ! (4)

—புதுவைச் சிவப்பிரகாசனூர்

காளமேகப்புலவர் சிறந்த கவிஞர் ; 400 ஆண்டுகட்கு முற்பட்டவர் ; வேடிக்கைப்பாடல்கள் பாடுவதில் சமர்த்தர்.

கம்பர் கி. பி. 12-ஆம் நூற்றுண்டினர் ; இராமாயணம் பாடிய பெரும்புலவர்.

புதுவைச் சிவப்பிரகாசன் அவர்கள் பாரதி தாசன் அவர்கட்கு மாணவர் ; எளிய - இனிய தமிழ்ச் செய்யுட்களைப் பாடுவதில் வல்லவர். இப்பாடல்கள் இவர் இயற்றிய '' மறுமலர்ச்சிக் கவிதைகள் '' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பெற்றவை.

அருஞ்சொற்பொருள்

1. கரி - யானை, (அத்தி); கரிக்காய் - அத்திக்காய். கன்னி-பெண் - அரம்பை. அரம்பை - தெய்வ லோகப்பெண். வாழை - கன்னிக்காய். தீத்தாள் - வறுத்தாள். பரி - குதிரை(மா); பரிக்காய் - மாங்காய். பை - படம்(பாம்பு) ; 'கத்திரி' என்பது ஒரு வகைப் பாம்பு. அப்பைக்காய் - அந்தக் கத்திரிக்காய்.

2. சோழன் தன் நாட்டை விட்டுச் செல்லும்படி கூறிய போது கம்பர் சினந்து அவனைப் பார்த்துப் பாடியது என்பர்.

இவ்வளவோ - சோழ நாட்டின் அளவினதா ? வேந்து - வேந்தன்.

3. கருந்தனம் - மிக்க செல்வம். நனி - மிக்க. புல்லறிவு - அற்ப அறிவு. விவேகம் - அறிவு × அவிவேகம் - அறிவின்மை. மறுஅறு - குற்றம் அற்ற. சீர்மை - சிறப்பு.

கேள்விகள்

1. அத்தைமகள் சமையலைப்பற்றிப் புலவர் கூறும் விவரங்கள் யாவை ?

2. கம்பர் சோழனைப் பார்த்துச் சினந்து கூறியது யாது ?

3. கல்வியால் உண்டாகும் நலன்கள் யாவை?

4. கல்வியை எவ்வாறு கற்கவேண்டும்?

5. தர்க்கக்கல்வி, விஞ்ஞானக்கல்வி—இவற்ருல் உண்டாகும் நன்மை என்ன?

பயிற்சி

1. உங்கட்குத் தெரிந்த சில பச்சடிகளின் பெயர்களைக் கூறுக.

2. கம்பரது சீற்றவுரையைக் கொண்டு அவரைப் பற்றிய உங்கள் கருத்தினைப் புலப்படுத்துக.

3. மண்ணுலகு, கன்னிக்காய், இங்கோதுவது, விரைந்தேற்று, வேந்துண்டோ, இனிதுடன், நல்லறிவு, தர்க்கக்கல்வி—இவற்றைப் பிரித்துக் காட்டுக.

4. புல் + அறிவு, பொருள் + எலாம், கருமை + தனம், உப்பு + காண், கரி + காய், உண்மை + பொருள், பலவித + தொழில்கள், மக்களுக்கு + அறிவு.—இவற்றைச் சேர்த்துக் காட்டுக.

5. கல்வியின் சிறப்பினைப் பத்து வரிகளில் எழுதுக.

6. காளமேகப்புலவர் பாடல்கள் சிலவற்றையேனும் நீங்கள் இதுவரை படித்திருப்பீர்கள் அல்லவா? அவர் பாக்களைப்பற்றிய உங்கள் கருத்தைப் பத்து வரிகளில் வரைக.

7. முதற் பாடலில் உள்ள வினைமுற்றுக்களைக் கூறுக; அவற்றுக்குரிய பகுதிகளைச் சுட்டுக.

8. என்ருர், கற்பர், கண்டீர், போக்கும், கண்டிடுவார், நாடுவார்—பகுதி, விகுதி, இடைநிலைகளைக் கூறுக.

86710
TB
031(7)
N51

BTR
1289

NATIONAL TAMIL VACHAKAM

FORM II—PART I

BY

Dr. M. RAJAMANIKKAM,
M.A., L.T., M.O.L., PH.D.

THE NATIONAL PUBLISHING CO.
6, KONDI CHETTY STREET, MADRAS-1

Copyright] 1951 [*Price Re.* 1